WWW.AKARAM.EU

இலவச தமிழ் மாத இதழ்


AKARAM

# அகரம்

14. வைகாசி - 13. ஆனி 2012

சுவடி: 1.01 திருவள்ளுவர் ஆண்டு 2043 நந்தன வருடம்

## உரிமைப்போரை உலகமயப்படுத்திய முள்ளிவாய்க்கால் வீரம்!




FREE CIRCULATION:
GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

# பிரான்ஸ்

**Lycamobile**
Appelez le monde pour moins cher

| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| அவுஸ்ரேலியா | 1ct/min[1] | 19ct/min |
| மலேசியா | 1ct/min[1] | 5ct/min |
| சிங்கப்பூர் | 1ct/min[1] | 7ct/min |
| இந்தியா | 1ct/min[1] | 6ct/min |

இணைப்புக் கட்டணம் 15ct

| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| இலங்கை | 1ct/min[1] | 9ct/min |
| கனடா | 1ct/min[1] | 8ct/min |
| ஐக்கிய ராஜ்ஜியம் | 1ct/min[1] | 19ct/min |
| அமெரிக்கா | 1ct/min[1] | 3ct/min |

தேசிய அழைப்புகள் வீட்டு தொலைபேசி — 9 cts/min

தேசிய அழைப்புகள் கைத் தொலைபேசி — 9 cts/min

தேசிய SMS — 9 cts

சர்வதேச SMS — 9 cts

150MB இணைய இணைப்பு இலவசம்[4]

## வரையறையற்ற இலவச[2] அழைப்புகள் மற்றும் குறுந்தகவல்கள்

Lycamobile லில் இருந்து ⟷ Lycamobile க்கு

மேலதிக விபரங்களுக்கு
**www.lycamobile.fr 01 77 72 23 22**

Visitez www.lycamobile.fr pour connaître nos offres et le détail des tarifs vers l'international.
Lycamobile SARL au capital social de 7.500€ – 47, boulevard de Courcelles 75008 Paris – RCS Paris 528 332 505

*சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. மேலதிக விபரங்களுக்கு www.lycamobile.fr

**Lyca mobile**
Appelez le monde pour moins cher

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்

Altadis · SPF · apey · phoneo · extenso · RELAY · PRESSE

★ வங்கிக்கடன் (5.9% இலிருந்து)

★ நிறுவன வங்கிக்கடன் (9.1% இலிருந்து)

★ வீட்டுக்கடன் (1.1% இலிருந்து)

★ வாகனக்காப்புறுதி (30% இலிருந்து)

★ ஆயுட் காப்புறுதி

★ குழந்தைகளுக்கான காப்புறுதி

★ மருத்துவக் காப்புறுதி

★ பிரையாணக் காப்புறுதி

★ வீட்டுக்காப்புறுதி

★ இலவச சட்டத்தரணிக்கான காப்புறுதி

★ நிறுவனங்களுக்கான காப்புறுதி






# SHELVAZUG

**KREDIT & VERSICHERUNG & IMMOBILIEN**

SHELVAZUG GmbH (P.T.THURAIRAJAH), BIRKENMATT 23, 6343 ROTKREUZ

TEL 041 790 64 63 FAX 041 790 64 68 NAT 079 514 64 28

www.shelvazug.com shelvazuggmbh@bluewin.ch

tMedia Network
நிறுவனத்தின்



அகரம்

மாதாந்த இதழ் - Monthly Magazine

| | |
|---|---|
| 14. வைகாசி - 13. ஆனி<br>சுவடி 1.01 | 14. May - 13. June 2012<br>Issue 1.01 |

தலைமை ஆசிரியர்:
திரு. த. இரவீந்திரன்

உதவி ஆசிரியர்:
திரு. வன்னித்தம்பி

ஆசிரியர் குழு:
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்னசிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜேர்மனி)

சிறுகதை ஆசிரியர்:
திரு. இரா. அருணாச்சலம்

நிழற்படப்பிரிவு:
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

ஒப்பு நோக்குனர்:
திருமதி. தாமரைச்செல்வி (ஜேர்மனி)
திரு. அர்ஜுன் (ஜேர்மனி)

தொடர்புகளுக்கு:
tMedia Network
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 97 25 556
Email: ***editor@akaram.eu***

www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©tMedia Network 2011.
All rights reserved.

# நுழைவாயில்...

அகரம் வாசகர்களுக்கு வணக்கம்,

எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி கிட்டி உள்ளது. முதலாவது ஐயா மறவன்புலவு சச்சிதானந்தன் அவர்களது அருட் கண் பார்வையும் அவரது அகரம் தொடர்பான முழுமை-யான நேர்மையான அலசலும்.

இரண்டாவது நாம் ஒரு வருட நிறைவை இம்மாதம் 26ந்திகதி விழா எடுத்து கொண்டாடும் செய்தி. இரண்டு இன்பங்களுக்கு எம்மை இட்டு வந்த அன்பு நிறை வாசகருக்கும் வணிகப் பெருமக்களுக்கும் அகரம் குழுமம் நெஞ்சாராப் பாராட்டிப் பணிவோடு அன்புகலந்த நன்றியைத் தெரிவிக்கிறது.

எமது இந்திய அரசு மற்றும் தமிழர் தேசியக் கூட்டமைப்பு பற்றிய பார்வையும் அவை தொடர்பான அவ்வப்போது வெளியாகும் கண்டனம் விமர்சனம் என்பன சிலருக்கு ஒருவேளையில் பலருக்கு உறுத்தலாகவும் வருத்தமாகவும் இருப்பதை நாம் நன்கு அறிவோம்.

நாட்டு மொழியில் சொல்வது என்றால் ஆளைப் பாரக்காதே ஆட்டத்தைப் பார் அல்லது கோழி குருடாக இருந்தால் என்ன குழம்பு உருசியா என்பதைப் பார் என்பார்கள். திருவள்ளுவப் பெருந்தகையோ "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்." (தி.கு.114) எனறார்.

இக்குறளுக்கு பொருள் தந்த தமிழறிஞர் மொழி ஞாயிறு, ஞா.தேவ நேயப் பாவாணர் யோக்கியர் என்ற வட சொல் வழக்கில் ஊன்றி விட்டதால் தக்கார் என்னும் தமிழ்ச் சொல் வழக்கற்றுப் போய்விட்டதாக தெரிவித்துள்ளார். எனவே தகவிலர் என்றால் இன்றைய வழக்கில் அயோக்கியர் எனப் பொருள்படும்.

ஈழத் தமிழர் விடயத்தில் இந்திய மத்திய அரசு 1987 முதல் 2012ல் இன்று வரை முடிவே இல்லாது தொடரும் கொள்கை மற்றும் செயற்பாடுகளை, குறிப்பாக அமெரிக்கா கொண்டுவந்த ஐ.நா. தீர்மானத்துக்கு இந்தியா செய்த திருத்தம் என்ற கழுத்தறுப்பு உட்பட, மேலும் எமது சுய நிர்ணய உரிமை-யைத் தொடர்ந்தும் மறுப்பதை யோக்கியம் எனலாமா?

முள்ளி வாய்க்கால் பெரும் மனிதப் படுகொலை நடந்து வரும் 17ந் திகதி 3 வருடங்கள் முடிந்த நிலையில் நம் மக்களுக்கான என்ன நீதியை பெற்றுக் கொடுத்தோம் என்ற நெருடல் நீறு பூத்த நெருப்பாக தமிழ் மக்களை தகித்தபடியே காலம் கழிகிறது.

இந்திய இலங்கை அரசுகளும் இனப் படுகொலைக்குத் துணை நின்ற சர்வதேச அரசுகளும் எம் மக்களின்

மீள் குடியேற்றம் பாதுகாப்பு அடிப்படை வாழ்வாதாரங்கள் பற்றிய எதுவித கரிசனையும் இல்லாது இருக்கும் நிலையே தொடருகிறது.

வடக்கு கிழக்கில் வெள்ளை வான் கடத்தல்கள் மர்மப் படு கொலைகள் தடையின்றித் தொடர்கின்றன. போரினால் கணவர்மாரை இழந்த பெண்களுக்கான பாதுகாப்பும் வாழ்வாதரமும் இல்லாத நிலையில் அன்றாடம் அவர் படும் துயரும் சிந்தும் கண்ணீரும் எவருக்கும் பெரிதாகத் தெரிவதில்லை. குறிப்பாகத் தமிழர் தேசியக் கூட்டமைப்பே வெற்று அரசியல் செய்து அபலைகளின் கவலைகளை விற்று வெளிநாடுகளில் கட்சிக்கு ஆதரவு தேடுகிறதே அல்லாது அவர்களின் நீதி நிவாரணம் தேடும் செயற்பாடுகள் பற்றிய எண்ணமே இல்லாது இருக்கிறது.

ஈழத் தமிழ் மக்களின் பெருமைக்குரிய அரசியல் தலைமையாக இருக்க வேண்டிய தமிழர் தேசியக் கூட்டமைப்பு தனது தார்மீக கடமைகளையும் தாங்கி நின்ற கொள்கைகளையும் மறந்து விட்டது என்பதைத் தனது செய்கைகளால் பல முறை வெளிக் காட்டியே வந்துள்ளது. அண்மையில் அது பங்கு பற்றிய மே தினக் கொண்டாட்டத்தில் சிங்கக் கொடியோடு ஆரவாரம் செய்த காட்சி தமிழர் நெஞ்சங்களில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப் போல் உள்ளது. அதுவும் இனப் படுகொலை நடந்த மே மாதத்தில் செய்த இச்செயல் எவராலும் மன்னிக்க முடியாதது. அதன் அரசியல் செயற்பாடுகள் அத்தனையும் யோக்கியமானவை எனக் கூறமுடியுமா?

ஈழத் தமிழ் மக்களின் தலைவர்கள் என்ற முறையில் இவர்களின் செயல்கள் அனைத்தையும் எந்த ஒரு தன்மானத் தமிழனும் ஆதரிக்க முன்வரமாட்டான். அத்தகைய துரோகத்துக்கு அகரம் உள்ளாவதை விட அகரத்தை நிறுத்தி விடுவதையே நாம் பெருமையாகக் கருதுகிறோம். ஏனென்றால் நாம் அரசியல் செய்ய வரவில்லை. எமது இனத்தின் அரசியல் விழிப்பை அடுத்த தலைமுறையின் அரசியல் வழிப்படுத்தலை ஆரோக்கியமானதாக உருவாக்கவே முயற்சிக்கிறோம்.

இந்த இதழில் யாழ்ப்பாணப் பெண்கள் முச்சக்கர சாரதிகளாக மாறிய பரிதாப நிலை, முள்ளிவாய்க்கால் அவலம் மற்றும் இலங்கை இந்திய சர்வதேச அரசியல் பற்றிய கட்டுரைகளும் வருகின்றன. சிறந்த கல்விமானும் தேசப் பற்றாளரும் ஆன்மீகவாதியுமான மறவன்புலவு க.சச்சிதானந்தன் அவரகளது அகரம் மீதான ஆழமான ஆய்வும் விமர்சன அலசலும் சிறப்பாக அணி செய்கிறது. அவருக்கும் இந்த ஆய்வை ஏற்கனவே வெளியிட்டு கௌரவித்த வல்லமை இணையத்துக்கும் எமது நன்றி என்றும் உளது.

தமிழீழ தேசியம் தன்னாட்சி தாயகம் போன்ற ஈழத் தமிழரின் இருப்பு ஆதாரங்களை மறுதலிக்கும் எவரையும் மதிப்பதோ ஏற்று ஆதரவளிக்கும் வகையில் வாய் மூடிக் கண்டும் காணாதும் இருப்பதோ எமது இனத்துக்கே செய்யும் துரோகமாக அகரம் பார்க்கிறது.

அத்தகைய ஆரோக்கியமான தமிழினத்தை அடுத்த தலைமுறையிலாவது உருவாக்க ஆசைப்படுகிறோம். இச்சீரிய பணியில் எவரும் எமக்கு உதவலாம் எம்மோடு உழைக்கலாம் என கரம் கூப்பி அழைக்கிறோம். ஊர் கூடி வடம் பிடித்தால் ஓடாத தேரும் ஓடும் என்பதில் அசையாத நம்பிக்கை உள்ளது. தக்கார் தரும் ஆதரவுக் கரங்களுக்காக அகரம் காத்திருக்கிறது.

நன்றியோடு மீண்டும் இணைவோம்,
*அகரம் குழுமம்!...*




அகரம் இதழ் காணும் முதலாண்டு
**அகலுள் விழா**
26.05.2012 (சனிக்கிழமை)

இடம் : Freizeitstätte Icklack
Höher Weg 12
40233 Düsseldorf

நேரம் : 14:30 - 21:00

கண்ணெதிரே சந்தித்தவை எல்லாம்
கண்ணீரை வரவழைத்தாலும்
கலங்குதலுக்கு முற்று வை..,

உன்னை ஒரு முறை
உட்பரிசோதனை செய்.

சுத்தக் காற்றைச் உள்ளிழுத்து
சுதந்திரத் தீயைப் பற்றவை.

இரத்த அணுக்களுக்கு
இறையாண்மை உரமேற்று

அடுத்து வரப்போகும் நொடிக்கு
அதிகாரக் குரல் கொடு.

பஞ்சாய் இருப்பினும்
பற்ற வரும் தீயோடு மோது.

அழிதல் ஒரு முறை தான்..,
அழுது கெஞ்சாதே

ஒத்துழைப்பவனோடு
ஒற்றுமைப் பலம் கொள்.

சம்மட்டியாய் பிறந்த பின்
இரும்பை அடிக்க எதற்குப் பயிற்சி..?
புலியாய் வாழ்கிறாய் நீ
போர்க்குணம் இல்லாமை இகழ்ச்சி...

விரும்பிய வாழ்விற்காய்க் கொடு தலை.
வருந்திப் பெறுதலே விடுதலை.

ஆளப்பிறந்த உன்னை
ஈனப்பிறப்பென்கிறான்
ஐயகோ இது சிறுமை
இனியும் வேண்டுமோ பொறுமை.

அடிமைத்தனம் நீங்க
அடி மேல் அடி
விரைவில் முடி
வரும் உன் அரசுக்கு முடி.

வில்லெடுஇ
வெறிகொண்டு குறி இடு,
பகையின் சிரத்தைப்
பதம் காண்..
நெறியுடன் மோது
நீங்கி வரும் இருளினூடு
நெருங்கு..
மாவீரம் மனதிருத்தி
மண்ணுக்கு ஒளி சேர்..!

அழவைத்த காயங்கள்
ஆறும் விரைவினில்..,
அதுவரை நடை பயில்,
வேண்டாமே இனித் துயில்...!!!



# அழவைத்த காயங்கள் ஆறும் விரைவினில்...

– தேவன்



த. எதிர்மன்னசிங்கம்

# தமிழ் ஈழக் கோரிக்கை தமிழ்ப் பித்தர்களின் கோரிக்கையாம்!



பஞ்சாப்பில் பிறந்தவரும் புகழ்பெற்ற பத்திரிகையாளரும் அரசுத் தூதர் பதவிகளை வகித்தவருமான குல்திப் நாயர் கூறுகிறார்.

அதுவும் இலங்கையில் வெளியாகும் ஐலண்ட் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் எழுதியிருப்பதானது கூலிக்குக் குரக்கன் நடப் போய் வேலிக்கு வழக்குப் பேசுவது என்ற எமது கிராமத்துப் பழ மொழியை நினைவு படுத்தும் வகையில் உள்ளது.

ஈழ தேசியத்தைக் கோருவோர் பைத்தியக் காரர் என்றால் இந்திய தேசியம் பேசுவோரும் இலங்கையில் பேரினவாத அரசியல் பேசுவோரும் புத்தி உள்ள கனவான்களோ என்ற கேள்விக்கு நாயர் என்ன பதில் வைத்திருக்கிறார்? எமது இறையாண்மையை மறுதலிக்கும் எவருக்கும் அத்தகைய தார்மீக உரிமை எதுவும் இருக்க முடியாது என்பதே எமது கருத்து.

இறையாண்மை என்பது ஒருவரின் பிறப்பால் அவரது தேசத்தின் மீது பெறப்படும் மறுதலிக்க முடியாத உரிமையாகும். ஆயுத பலத்தாலோ பண பலத்தாலோ எவராவது எவர் மீதாவது ஆதிக்கம் செலுத்தலாமே அல்லாது அவருக்குப் பிறப்பால் உண்டான உரிமைகளைப் பறிக்க முடியாது.

உலகில் பிறந்த மக்களின் அந்த உரிமையைப் பாதுகாக்க ஐ.நா. உருவாக்கிய அடிப்படை மனித உரிமைச் சாசனம் உள்ள வரை குல்தீப் நாயர் மட்டும் அல்ல அவரது பாட்டன் உயிர் பெற்று வந்தாலும் தமிழீழ மக்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கவோ மறுதலிக்கவோ முடியாது.

எமக்கு இப்போது இல்லாமல் இருப்பது தேசத்துக்கான ஐ.நா. உறுப்பு அங்கீகாரம் ஒன்றுதான். மற்றப் படி அதற்குத் தேவையான அனைத்து அடிப்படைத் தகுதிகள் அனைத்தும் எமக்கு உள்ளன. அதனால்தான் அவற்றை அழிப்பதில் சிங்களம் கடந்த 100 ஆண்டுகளாக எடுத்த பெரு முயற்சி இப்போது அதற்குச் சாதகமான நிலையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

அதன் ஒரு அங்கமே இந்திய அரசின் நாட்டாண்மை எம்மை நசுக்க அதற்கு ஆதரவாக எங்கோ எவருக்கோ பிறந்த குல்திப் நாயர் இலங்கையில் பிறந்த எமக்கு இலங்கையில் உள்ள சிங்களத்தோடு இணைந்து மன நல வைத்தியம் செய்ய முனைகிறார்.

இவருக்கு இவரது (?) இந்திய நாட்டின் முடி சூடா இளவரசியாக விளங்கும் இத்தாலியில் அன்ரோனியா மைனோ சோனியா என்ற பெயரோடு பிறந்து காந்தி என்ற பெயரை வலிந்து தாங்கி, அரசியல் அதிகாரம் செலுத்தும் சோனியா காந்தியின் இறையாண்மையின் இரகசியம் தெரியுமா? இத்தாலிச் சட்டத்தின்படி இத்தாலியில் பிறந்த ஒருவர் எந்த நாட்டுக் குடியுரிமை பெற்றாலும் அவரும் அவரது வம்சதாரிகளும் இத்தாலிக் குடிமக்களே என்பதும் அதன் காரணமாக ராகுலோ பிரியங்காவோ இன்றும் என்றும் இத்தாலியர் என்பதும் நாயருக்குத் தெரியாமல் இருக்க நியாயம் இல்லை.

நீதி மன்றத்தில் பத்ரி நாராயண் சுக்லா என்பவர் இத்தாலியக் குடியுரிமை கொண்ட சோனியா பிரதமரின் இல்லத்தில் வாழ்வதால் இந்திய நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகம் தரக்கூடியது. எனவே அவரை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என்று நீதி மன்றத்தில் மனுச் செய்த காரணத்தால் 15 ஆண்டுகளால் இந்தியாவில் இத்தாலியக் குடிமகளாகவே வாழ்ந்த சோனியா இந்தியக் குடியுரிமை பெற்றார். அதுவும் இந்திரா காந்தியின் செல்வாக்கினால் நீதி மன்ற விசாரணைக்கு முன்பதாகவே பல அரச நடைமுறைகளை மீறிக் குடியுரிமை பெற்றவர்.

காந்தி என்ற பெயர் கூட நேரு குடும்பம் காந்தியின் பாசத்தினால் பெரோஸ் கான் என்ற பார்சிக்கார் இந்திராவை மணக்க வேண்டி எதிர் நோக்கிய சட்ட சிக்கல்களை தவிர்க்க பெறப்பட்ட பெயர்.

இதுவும் நேரு குடும்பத்தின் வரலாற்று மோசடிகளில் ஒன்று. இப்படியான பைத்தியக்காரத் தனங்களுக்கு மத்தியில் உள்ள நாயர் எமது மன நலம் பற்றி மதிப்பிடும் நிலையானது பைத்தியம் மற்ற எல்லேரையும் பைத்தியக் காரர்களாக நினைப்பதும் பேசுவதும் போன்றதே.

ஈழத் தமிழரைப் பொறுத்த வரை ஒரு வரலாற்று ஆதாரம் கொண்ட நாடும் அரசும் இறைமையும் கொண்டுள்ள மக்கள் என்பதில் மிகத் தெளிவாகவே உள்ளனர். பல தசாப்தங்களுக்கு முன்னர் நியூயோர்க் ஐ.நா. சபையில் திட்டமிட்டுப் புகுந்து பொதுச் சபையிலே ஈழத் தமிழரான சட்டத்தரணி இடதுசாரி அரசியல்வாதியான திரு. வைகுந்தவாசன் சட்டத் தரனி தமிழீழப் பிரகடனம் செய்த போதும் அவரது மன நிலை தெளிவாகவே இருந்தது. ஈழத்தில் வட்டுக் கோட்டையில் 1976ல் முப்பெரும் தமிழ் அரசியல் கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான், தமிழரசுக் கட்சியின் தலைவர் செல்வநாயகம் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தமிழீழப் பிரகடனம் செய்து அதனைப் பெற எந்த வழியிலும் முற்படுவோம் எனப் பகிரங்கமாக மாநாட்டில் தீர்மானம் எடுத்த போதும் எல்லாரது மன நிலையும் சரியாகவேதான் இருந்துள்ளது.

பின்னர் தமிழகச் சட்ட சபையில் இப்போதைய தமிழக முதல்வர் செல்வி ஜெயராம் ஜெயலலிதா தலைமையிலான அரசு தமிழீழம் ஒன்றுதான் தமிழ் மக்களுக்கான பாதுகாப்பு எனத் தீர்மானம் நிறைவேற்றிய போது சட்டசபையின் அனைத்து உறுப்பினரும் ஆதரவு அளித்த போது அவர்கள் அனைவரின் மன நிலையும் சரியாகத்தான் இருந்துள்ளது.

இன்று முன்னாள் தமிழக முதல்வர் கலைஞரும் அவரது திராவிட முன்னேற்றக் கழகமும் பொதுக் குழுவில் தனித் தமிழ் ஈழம் ஒன்றே தீர்வு எனத் தீர்மானம் நிறைவேற்றிய நிலையிலும், இன்னும் ஒட்டு மொத்த உலகத் தமிழ் சமுதாயமே தனித் தமிழ் ஈழம் எனப் பேசும் போது இவர்களை எல்லாம் புத்தி சுவாதீனம் இழந்தவர்கள் என அழைக்கும் நீங்களா புத்தி சுவாதீனமாக இருப்பதாக நினைக்கிறீர்கள்? உங்கள் கட்டுரையே உங்களை முதல்தரப் பைத்தியக்காரன் எனக் காட்டிவிட்டதே!



Ihr persönlicher Finanzoptimierer

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே. அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF
















சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங் கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்; AWD.

**அறிவு. நேர்மை. நாணயம்.**

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்.

Allgemeiner Wirtschaftsdienst AG
Zweigniederlassung Bern-Köniz
Sägestrasse 79
3098 Köniz
**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**
eMail: krishnasamy.thileepan@awd.ch
Internet: www.awd.ch




# மறாந்திருத்தல், மறைத்து வைத்தல்

சண் தவராஜா

ஈழத் தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கிவரும் இக்கட்டான அரசியற் சூழலில் தமிழ் அரசியற் கட்சிகள் தமக்கிடையே பேதங்களை மறந்து ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்றொரு கருத்து முன்வைக்கப்பட்டு வருகின்றது. காலத்தின் தேவை எதுவோ அது இயல்பாகவே நடைபெறும் என்பதுவே நியதி. எனினும், பல சந்தர்ப்பங்களில் தூண்டிகளும், சில விரைவு படுத்தல்களும் அதற்குத் தேவைப்படுவதை மறுத்து விடுவதற்கில்லை.

2001 ஆம் ஆண்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கம் பெற்றமையை இதற்கொரு எடுத்துக் காட்டாகக் கூற முடியும். தமிழர் மத்தியில் இருந்து தமிழர்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் ஜனநாயக ரீதியிலான குரல்கள் ஒலிக்க வேண்டிய தேவை அப்போது இருந்தது. அத்தகைய கருத்தியலை முன்னிறுத்தி நான்கு அரசியற் கட்சிகளை இணைத்து ஒரு மாபெரும் அரசியற் சக்தியாகப் பரிணமிக்கச் செய்வதற்கான தூண்டியாக மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள் ஒருசிலர் செயற்பட்ட போது அதனை விரைவு படுத்தும் காரணியாக விடுதலைப் புலிகள் விளங்கினார்கள்.

இத்தகைய வேளையில் கூட்டுச் சேர்ந்த கட்சிகள் நான்குமே ஒன்றுக்கொன்று தனித்துவமான அரசியற் போக்கைக் கொண்டிருந்தவையே. ஒரு வகையில் கூறுவதானால் நான்கு கட்சிகளுமே ஏதோவொரு சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவையே. எனினும் தமிழர்களின் அரசியல் கோரிக்கைகளான தாயகம், தேசியம், தன்னாட்சி ஆகிய உரிமைகளை ஜனநாயக ரீதியில் வென்றெடுக்க வேண்டும் என்ற விடயத்தில் அவை கொண்டிருந்த கருத்தொற்றுமையே அக் கட்சிகளை ஒரு மையப் புள்ளியில் சந்திக்கச் செய்தது.

ஆனால் இன்றைய நிலையில் அரங்கில் உள்ள கட்சிகளை ஒன்றாக இணைந்து பயணிக்கச் சொல்வது நியாயமானதுதானா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் யாவற்றுக்குமே தனித்தனியான அரசியல் வகிபாகம் உள்ளது. அத்தகைய தனித்துவமான வகிபாகம் ஏனைய அரசியற் கட்சிகளுக்கும் உண்டு. ஒத்ததும் முரணானதுமான இந்த அரசியல் கட்சிகள் சில வேளைகளில் கூட்டுச் சேர்ந்தும் பயணித்துள்ளன.

இலங்கை வரலாற்றில் தோற்றம் பெற்ற தமிழ்க் கட்சிகளின் முதலாவது கூட்டணி 1976 இல் உருவானது. இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இணைந்து உருவான ஐக்கிய தமி-ழர் விடுதலை முன்னணி என்னும் பெயரைக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு வருடம் கூட கூட்டு அணியாக நீடிக்கவில்லை. அடுத்த வருடத்தில் நடைபெற்ற தேர்தலில் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் கூட்டிலிருந்து வெறியேறி தனித்துப் போட்டியிட்டது. பின்னாளில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாகவும் மாறியது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கூட்டைவிட்டு வெளியேறியது மாத்திரமன்றி தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்தே போட்டியிட்டது. ஆனாலும், தமிழ்க் காங்கிரஸின் மூத்த உறுப்பினர்களான மு. சிவசிதம்பரம், வீ. ஆனந்தசங்கரி போன்றோர் கூட்டணியிலேயே நீடிக்க முடிவு செய்ததுடன் அக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றனர்.

பின்னாளில், போராட்ட இயக்கங்கள் தமிழ் அரசியலில் ஆதிக்கம் பெற்றிருந்த நிலையில் ஈழ தேசிய விடுதலை முன்னணி எனும் கூட்டணி 1985 இல் உருவானது. தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.), ஈழப் புரட்சிகர மாணவர் அமைப்பு (ஈரோஸ்) மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.ரி.ரி.ஈ.) ஆகியன இணைந்து இந்தக் கூட்டு உருவானது. இந்தக் கூட்டணியும் அதிக காலம் நீடிக்கவில்லை. ஒரு வருடத்திற்கிடையில் கூட்டணியில் அங்கம் வகித்த ரெலோ அமைப்பு விடுதலைப் புலிகளால் தடை செய்யப்பட்டதுடன் அதன் தலைவர்களும் கொன்றொழிக்கப் பட்டார்கள்.

தொடர்ந்து வந்த காலப் பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கமும் தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவிக்கப் பட்டது. ஈரோஸ் இயக்கம் கலைக்கப்பட்டு விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைந்து கொண்டது.

1987 இல் இந்தியப்படை சிறி லங்காவில் நிலை கொண்டிருந்த காலத்தில் "திறீ ஸ்ரார்ஸ்" என்ற பெயரில் ஒரு கூட்டணி உருவாக்கப் பட்டது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) என்ற அமைப்பிலிருந்து பிரிந்து உருவான ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.என்.டி.எல்.எப்), ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் ரெலோ ஆகிய அமைப்புக்கள் இணைந்து உருவான இக் கூட்டணி விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இந்திய இராணுவத்திற்கு உதவும் நோக்குடன் உருவாக்கப் பட்டிருந்தது. இக் கூட்டணி சுமார் இரண்டு வருடங்கள் நீடித்தது.

இக் காலகட்டத்தில் மற்றுமொரு அரசியல் கூட்டணியும் இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் உருவாக்கப் பட்டிருந்தது. 1989 பொதுத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட இந்தக் கூட்டணியில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.என்.டி.எல்.எப், ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் ரெலோ ஆகிய கட்சிகள் அங்கம் வகித்தன. இந்தக் கூட்டு கூட அதிக காலம் நீடிக்கவில்லை.

2001 ஆம் ஆண்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கம் பெற்ற போது ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய கட்சிகள் அரசியல் கட்சிகள் என்ற பரிமாணத்தை இழந்து விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு சிறி லங்கா அரசாங்கத்திற்கு உதவி செய்யும் துணை இராணுவக் குழுக்களாகவே விளங்கின. ஆனாலும் அன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கம் பெற அக் கட்சிகள் பல தியாகங்களைப் புரிந்தமையை மறைப்பதற்கில்லை. "இரத்தம் தோய்ந்த கரங்களுடன் கைகுலுக்க மாட்டோம்" என ஒரு சாரார் கூறிய அதேவேளை தமது உறுப்பினர்களைப் பராமரிப்பதற்காக அரசாங்கத்தால் மாதாமாதம் வழங்கப்பட்டுவந்த உதவித் தொகையையும் இழக்க வேண்டிய நிலை அக்கட்சிகளுக்கு உருவாகியது.

பிற்காலத்தில், எந்த விடுதலைப் புலிகளை அழிப்பதற்காகக் கங்கணங் கட்டிச் செயற்பட்டார்களோ அதே விடுதலைப் புலிகளுடன் கைகுலுக்கும் நிலையை அவர்கள் உருவாக்கிக் கொண்டார்கள். தமது அமைப்பு மாத்திரமே விடுதலைக்காகப் போராடும் அமைப்பு என்ற மனப்பான்மை கொண்ட விடுதலைப் புலிகள் பின்னாளில் எவ்வாறு ஈரோஸ் அமைப்பைத் தமது சகோதர அமைப்பாக ஏற்றுக் கொண்டார்களோ அதேபோன்று ரெலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்புக்களையும் ஏற்கத் தொடங்கினார்கள்.

2001 ஆம் ஆண்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கம் பெற்றபோது அதில் இணைந்து பயணிக்க தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திற்கும் ஒரு வாய்ப்பு இருந்தது. ஆனால், தூரதிர்ஷ்டவசமாக அக் கட்சியின் தலைவர் த. சித்தார்த்தன் அந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறியிருந்தார்.

எனினும் இன்று அவர் சார்ந்த கட்சி கூட்டமைப்புக்குள் உள்வாங்கப் பட்டிருந்தாலும் ஒரு பங்காளிக் கட்சிக்கு உள்ள கௌரவம் அக் கட்சிக்கு வழங்கப்படவில்லை என்பது நிதர்சனம். அன்றைய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டிருந்தால் தமிழ்த் தேசியம் மாத்திரமன்றி அவரது கட்சியும் பலப் பட்டிருந்திருக்கும்.

மேற்சொன்ன கூட்டுக்களுக்கு அப்பால் வி. ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலை ஐக்கிய முன்னணி, புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். (பத்மநாபா அணி) ஆகியவை இணைந்த கூட்டு ஒன்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் பங்காளிக் கட்சிகளும் அங்கம் வகிக்காத தமிழ்க் கட்சிகளின் அரங்கம் என்ற கூட்டும் உள்ளது.

சகல கட்சிகளையும் இணைத்தல் என்பது நல்லதொரு விடயமாகத் தென்பட்ட போதிலும் யாருடன் யாரைச் சேர்த்தல் என்பதில் ஒரு சரியான தெரிவு இருக்காதுவிடில் இறுதி விளைவு நல்லதாக இருக்கும் எனக் கூறிவிட முடியாது.

தமிழ் மக்கள் துயரத்தை அனுபவித்த வேளைகளில் எல்லாம் அதற்கு எதிராகக் குரல் தர முன்வராது விடுதலைப் புலிகளுக்கு உதவியோருக்கு அதுதான் பரிசு என அரசாங்கத்தோடு சேர்ந்து கொக்கரித்தோரையும், இறுதி யுத்தத்தின் போது கொத்துக் கொத்தாக தமிழ் மக்கள் கொல்லப்பட்ட போது வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தோரையும் சேர்த்துக்கொண்டு பயணிக்குமாறு கோருவது எந்த வகையில் நியாயமானது?

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் ஒவ்வொரு தனிநபருக்கும் அரசியற் கட்சிக்கும் தனித்துவமான வரலாறு இருக்கின்றது.

ஒரு சில தனி நபர்களின், கட்சிகளின் வரலாறுகள் மீண்டும் மீண்டும் நினைத்துப் பெருமை கொள்வதாகவும் வேறுசில சபிக்கத் தக்கதாகவும் இருந்து வருகின்றன. "அனைத்தையும் மறந்துவிட்டு" அனைவரையும் ஏற்றுக் கொள்ளுதல் என்பது வாதத்துக்கு நல்லதாகத் தென்பட்டாலும் நடைமுறைக்குச் சாத்தியமானதாக இருந்தாலும் அதனால் உருவாகக் கூடிய தீங்கை ஒருகணம் மனதில் நிறுத்திப் பார்த்தால் அது நல்ல முடிவாகத் தென்படாது.

மாற்றி எழுதப்பட வேண்டியதே வரலாறு ஆயினும் வரலாற்றில் இடம்பெற்ற விடயங்களை காய்தல் உவத்தல் இன்றிக் கூறுவதே அறம்.

இதனை ஒரு சிறிய உதாரணத்தின் ஊடாக விளங்கிக் கொள்ளலாம். அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தந்தை செல்வா நினைவு தினத்தின் போது மட்டக்களப்பு மாவட்ட முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராசதுரைக்கு மற்றொரு முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.கே. சிவாஜிலிங்கம் காட்டிய எதிர்ப்பைக் குறிப்பிட முடியும். சிவாஜிலிங்கம் நடந்துகொண்ட விதம் சரியா, ரெலோவின் உறுப்பினராக இருந்து கொண்டு மற்றொருவருக்குத் துரோகிப் பட்டம் கட்ட முடியுமா என்ற கேள்விகளைத் தள்ளி வைத்துப் பார்த்தால், செ. இராசதுரை அவர்களின் கடந்தகாலச் செயற்பாடுகளைத் தள்ளிவைத்து விட்டு அவரைப் "புனிதராகத் திருநிலைப்படுத்துவது" முறையா என்ற கேள்வியை எழுப்பிப் பார்த்தல் நல்லது. தந்தை செல்வா மீது அவருக்கு உண்மையான மரியாதை இருந்திருந்தால் அவருடைய இலட்சியத்தை வென்றெடுக்க அவர் போராடியிருக்க வேண்டும். அதனைச் செய்யாதது மட்டுமன்றி தமிழர் விடுதலைக் கூட்டணியை விட்டு வெளியேறிய நாள் முதல் இன்றுவரை தந்தை செல்வா நினைவை அனுட்டிக்கவோ அல்லது அவரை நினைவு கூர்ந்து ஒரு அறிக்கை விடவோ கூட அவர் முயற்சிக்கவில்லை என்பதே குறித்த நிகழ்வில் கலந்து கொள்வதற்கான அவரது தகுதியைக் கேள்விக்கு உள்ளாக்குகின்றது.

விமர்சனங்கள் எதுவும் இன்றி செ. இராசதுரையை உள்வாங்குதல் என்பது அவரது கடந்த காலத்தை மறைத்து விடுவதற்கு ஒப்பானதாகும். இது பலருக்குப் பொருந்தும்.

மறப்போம், மன்னிப்போம் என்பது நல்லதொரு தத்துவமாக இருக்கக் கூடும். ஆனால், அதற்கூடாக வரலாறு மாற்றியெழுதப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.



உங்கள் தேவை அனைத்தும் ஒரே குடையின் கீழ்

# AKM

## Asian Supermarket

**மாபெரும் மலிவு விற்பனை**

அனைத்து மீன் மரக்கறி வகைகளும்
தாயகத்திலிருந்து மிகத் தரமாக
இறக்குமதி செய்யப்பட்டவை!

**50% விலைக்கழிவு**



**தரத்துடன் கூடிய இலாபம் கிடைக்கும் ஒரே இடம்**

# AKM

மலிவு! மலிவு! மட்டும் தான். மலிவு! மலிவு!



**AKM** முத்திரை பதித்த பொருட்கள்
அனைத்தும் **50%** விலைக்கழிவு

| Basel str 80<br>6003 Luzern<br>Tel. 041 2405400 | Talgut-Zentrum 7<br>3063 Ittigen (Bern)<br>Tel.031 9222318 | Alpenstrasse 1<br>3072 Ostermundigen<br>(Bern NILAVANI)<br>Tel. 031 9312525 |
|---|---|---|




இது அகரம் வாசகர்களும் நாமும் பெருமை அடையச் செய்யும் செய்தி!

வசிட்டரின் வாயால் வாழ்த்து பெறுவது என்பது சாதாரணமான விடயமா? எம்முடன் வாழ்ந்து வரும் வசிட்டருக்குச் சமானமான ஒரு குணவான் வாழ்வாங்கு வாழும் தகைமையன் பிறந்த ஊரான மறவன் புலவுக்கும் நாடான ஈழத்துக்கும் புகழ் சேர்க்கும் செம்மான்.

அரசியலா அரச சேவையா ஆன்மீகமா அறிவியலா அனைத்திலும் தமது ஆழமான முத்திரை பதித்து வரும் ஆற்றல் கொண்டோன். அரசியல் காரணங்களுக்காக அகதியாகி சென்னையில் பதி கொண்டு வாழ்பவர். அங்கே அண்ணாசாலையில் காந்தளகம் அச்சகம் வைத்து அரிய பிரசுரங்களுக்கு ஊற்றுக் கண்ணாகவும் தமிழீழ வெளியீடுகளின் தாயாகவும் விளங்குபவர்.

மின் அலையில் சைவ ஆகம தேவார திருவாசக திருமுறைப் பாடல்களை பண்ணோடு இசைக்க வல்ல பாணர்களின் குரலில் பதிவேற்றம் செய்து உலகில் எங்கிருந்தும் எவரும் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கேட்டு மகிழ வைத்துள்ள வள்ளல்.

அதே போல் பழம் பெரும் தமிழ் நூல்களையும் ஆலய தரிசனங்களையும் தேவார பதிகங்களோடு ஒளி ஒலி பதிவுகளாக்கி தந்துள்ளவர். இந்தோனேசியா வரை சென்று அங்குள்ள பழைமையான இந்துக் கோயில்கள் அவற்றுக்கான தமிழ் பதிகங்களை அவர்களின் மொழிகளில் ஆக்கம் செய்வித்தவர். இத்தனையும் இன்னும் பல பெருமைகளுக்கும் தரிப்பிடம் ஆனாலும் சிறியனிலும் சிறியனாக காட்சி தரும் சீர்மையன். இவரை நன்கு தெரிந்தவர்க்கு இவை எல்லாம் மிகக் குறைந்த உண்மைகளே என்பது புரியும்.

இவைகளுக்கு எல்லாம் எதுவும் இல்லாதவர் போல் திரு மடங்களிலும் கோயில்களிலும் தொண்டரோடு தொண்டரின் அடியவராய் காணும் இவர் எமது அகரம் இதழ்கள் அனைத்தையும் படித்து அக்கு வேறு ஆணி வேறாக நேர்மையான விமர்சனமும் கண்டனமும் தந்துள்ளார்.

அவரது ஆசிகளும் ஆலோசனைகளும் முழுமையாக நிறைவேற அகரத்தின் குழுமத்தோடு வாசகரும் வணிகப் பெருமக்களும் ஒருங்கிணைந்து செயற்பட அனைவரையும் அன்போடு கேட்டு அவரது இரண்டு பகுதியான விமர்சனத்தையும் இங்கே தருகிறோம்.

தொடர்ந்தும் அலசல் தருவேன் என்ற அவரது உறுதி மொழி ஒன்றே அகரம் வெற்றி நடை போட வைக்கவும் எம்மையும் எமது சமுதாயத்தையும் நல்வழிப் படுத்த.

மீண்டும் திரு.சச்சிதானந்தன் அவர்களுக்கும் அவரது விமர்சனத்தை ஏற்கனவே முழுமையாக வெளியிட்டு எமக்குப் பெருமை தந்த வல்லமை இணையத்துக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றி என்றும் உரியதாகுக.

அரிச்சந்திரன் நாடகத்தைப் பிரித்தானிய அரசி விக்ரோறியாவின் முன் வழங்கியவர் யாழ்ப்பாணத்தவரான முத்துக்குமாரசாமி.

கடந்த 250 ஆண்டுகளில் மேனாடுகளுக்குப் பெருமளவு குடியேறிய தமிழர்களுள் பெருமளவினர் பிரஞ்சு நாட்டிலேயே வாழ்கிறார்கள்.

புதுச்சேரி வழியாகக் காவிரிப் படுகை சார்ந்த தமிழர் பிரான்சுக்குச் சென்றார்கள். அங்கேயே தங்கினர். இன்றைய பிரான்சில் புதுச்சேரி வழித் தமிழர் தோராயமாக 300,000 பேர் வாழ்கின்றனர்.

பிரித்தானியாவிற்கும் தொடர்ச்சியான புலம்பெயர்வுகள் கடந்த 250 ஆண்டுகளில் நடைபெற்றன. 1950களில் பிரித்தானியாவில் வாழ்ந்த தமிழரின் தொகை தோராயமாக 100,000 எனச் சொல்வர். தமிழ் நாட்டவரை விட ஈழத்தவரே அத்தொகுப்புள் பெரும்பாலார்.

ஏனைய ஐரோப்பிய நாடுகளில் சொரியல் சொரியலாகத் தமிழர் வாழ்ந்து வந்தனர்.

அக்காலத்தில் புலம்பெயர்ந்த பின்னரும் தமிழர் அடையாளங்களைப் பேணும் முயற்சியில் பிரித்தானியத் தமிழர் கண்ட முன்னேற்றங்களைப் பிரஞ்சுத் தமிழர் காணவில்லை.

இத்தாலியில், வத்திக்கான் நகரில், கடந்த 50 ஆண்டுகளாக, ஞாயிறு தோறும் ஒரு தேவாலயத்தில் தமிழில் வழிபாடு நடைபெற்று வருகிறது. கிறித்துமசு நாளன்று, போப்பாண்டவரின் வழிபாட்டில் சாந்த பவுலர் தேவாலாயத்தில் தமிழிலும் பூசைகள் நடைபெறுகின்றன.

இலண்டனில் தமிழ்ப் பள்ளி, முருகனுக்குக் கோயில், தமிழ் இதழ் எனத் தமிழ் அடையாளங்களை 1970களுக்கு முன்னரே பேண முயன்றனர்.

1970களின் இறுதிப் பகுதியில் ஈழத் தமிழ் இளைஞர் ஐரோப்பாவுக்குப் பெரும் எண்ணிக்கையில் பயணிக்கத் தொடங்கினர். சிங்களத் தேசிய எழுச்சியின் படுமோசமான விளைவான தமிழர் ஒழிப்புக் கொள்கையை எதிர்க்க முன்வந்த தமிழ் இளைஞர் உயிர் அச்சம் காரணமாகப் புலம்பெயரத் தொடங்கினர்.

புகலிடம் வழங்கிய ஐரோப்பிய நாடுகளில் யேர்மனி முதன்மை வகித்தது. வந்திறங்கும் விமான நிலையத்திலேயே நுழைவனுமதியை இலங்கையர் எவரும் பெறலாம் என்ற அன்றைய யேர்மனியக் குடிவரவுக் கொள்கை, ஈழத் தமிழ் இளைஞருக்கு அருங்கொடையாயிற்று.

1977இன் தொடக்கத்தில், சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட 14 தமிழ் இளைஞர், புகலிடப் பயணத்துக்கான கடவுச்சீட்டுப் பெற என் உதவியை நாடினர். மனமுவந்து உதவினேன். அனைவரும் மேனாடுகளை நோக்கிப் பயணித்தனர். அவர்களின் விவரங்களை மறந்துவிட்டேன். எனினும் இலங்கை அரசு அதற்காக என் மீது கொண்ட சினத்தைக் கைவிடவில்லை, மறக்கவுமில்லை.

புகலிடம் கோருவோருக்கான யேர்மனியின் கொள்கையும் ஈழத் தமிழ் இளைஞருக்குப் பாதுகாப்பைக் கொடுத்தது.

1977, 1983 தமிழர் மீதான சிங்களவரின் கொடுந் தாக்குதல்களால் மென்மைப் போக்குள்ள தமிழர் பலர் இலங்கையைவிட்டு வெளியேறினர்.

ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் ஆத்திரேலியா நியூசிலாந்திலும் புகலிடம் தேடினர்.

250 ஆண்டுகளாகப் பிரான்சில் தொடர்ச்சியாக வாழ்ந்துவரும் தமிழர் முயலாததை, மேற்காணும் புதுப்புலங்களில் 35 ஆண்டுகளாகக் குடியேறிவரும் தமிழர் முயல்கின்றனர்.

தமிழர் என்ற அடையாள உணர்வைக் கொண்டதால், சிங்களத் தேசியத்துடன் வேற்றக் கலக்க மறுத்ததால், புகலிட வாழ்க்கை.

புதிய சூழலிலும் புகலிட வாழ்வில் தமிழர் அடையாளத்தை இழக்கலாமா? எதை இழக்க மறுத்தோமோ அதைக் காக்க, அடுத்த தலைமுறைக்கு வழங்க, என்னென்ன முயற்சி தேவையோ அந்தந்த முயற்சிகளை மேற்கொள்ளும் வழிகளைத் தமிழர் தேடினர்.

ஊரல் மலைகளுக்கு அப்பால் வந்து ஐரோப்பாவில் வாழத் தொடங்குகின்றோமே? தொலைந்துவிடுவோமோ, தொலைத்துவிடுவாமோ என்ற உள்ளுணர்வு மேலோங்கியது.

ஊரல் மலைத் தொடருக்கு அப்பாலான ஐரோப்பாவில் 50 நாடுகள் (2012). 1 கோடி சகிமீ. பரப்பளவு. 75 கோடி மக்கள் (2012).

விடுதலை பெற்ற நாடுகளாகத் தம்மை அறிவித்துக் கொண்டு, இந்த 50க்கு வெளியே 7 நாடுகள் ஐரோப்பாவில் உள்ளமை வியப்பு. மேலும் 7 பிரதேசங்களில் முழுமையான சுயாட்சி, மற்றொரு நாட்டின் மேலாதிக்கத்துடன்.

ஐரோப்பிய ஒன்றியமாக 27 நாடுகள். 43 இலட்சம் சகிமீ. பரப்பளவு. அங்கே 50 கோடி மக்கள்.

பொருண்மிய வளர்ச்சியின் உச்ச நிலை நாடுகள் ஐரோப்பாவில் உள. சுவிற்சர்லாந்து, சுவீடன், நோர்வே ஆகிய நாடுகளை மனித நாகரீக வளர்ச்சியின் இக்கால உச்சநிலை நாடுகளாகவும் சொல்வர்.

தமிழர்களுக்கும் ஊரலுக்கு அப்பால் உள்ளோருக்குமான தொல் தொடர்புகள் வணிகத் தொடர்புகளாகவே தொடங்கின. அயனியர் ஸ்ரீ பயோனியர் ஸ்ரீ யவனர் என்றாகித் தொல் தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

பாண்டிய மன்னரின் தூதர் உரோமப் பேரரசுக்குச் சென்ற செய்தி ஒருபுறம். செங்கடல் வழிசென்ற தமிழர் விட்டுச் சென்ற பானையில் தமிழ்ச் சொற்களை எகிப்து நாட்டவர் கண்டு காத்துவரும் செய்தி ஒருபுறம். உரோமக் காசுகள் தமிழகத் தொல்லியலாரின் பட்டியலான செய்தி ஒருபுறம். விவிலியத்தில் காணும் தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுவோர் ஒருபுறம். ஈழத்தின் மாந்தைத் துறை, புத்தளம் துறை வழியாக மேனாட்டாருடன் தொடர்புகள் பற்றிய செய்திகள் ஒருபுறம்.

போர்த்துக்கேயர் வருகைக்குப் பின்னர், தமிழருக்கும் ஐரோப்பியருக்கும் இடையே உள்ள தொடர்புகள் ஆவணங்களாக உள. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், தென்மார்க்கர், பிரஞ்சர், பிரித்தானியர் வரவுகளை அடுத்துத் தமிழர் மேனாடுகளுக்குப் பயணித்தனர்.

தமிழ்மொழியில் மேனாட்டவர் பலர் புலமை பெற்றனர். மேனாட்டு மொழிகளில் தமிழர் புலமை பெற்றனர்.

இவை யாவையும் தொகுப்பதால் தமிழர் ஐரோப்பியர் தொல் தொடர்புகளை வலுவாக்கலாம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க தொல் தொடர்புகளை அறியாத் தலைமுறையினரே புகுநாட்டிலுள்ளோரிடமும் புகலிடம் தேடியோரிடமும் இருந்தது.

ஐரோப்பாவின் 50 நாடுகளுள் 15 நாடுகளில் கணிசமான தொகையில் தமிழர் வாழ்வதால், அந்த நாடுகள் தமிழர் அடையாளங்களைப் பேணுவதற்குத் தத்தம் அரச நிதிக் குவைகளிலிருந்து மானியங்கள் வழங்குகின்றன.

அரச எந்திரங்கள் ஆதரவாக உள்ளன. மொழிப் பயிற்சி, நுண்கலை வளர்ச்சி, பண்பாடு பேணல் என யாவுக்கும் அரசுகளின் ஆதரவு உண்டு.

75 கோடி ஐரோப்பிய மக்களுள் 12 இலட்சத்தினருக்குக் கூடுதலாகத் (0.02மூ) தமிழர் தொகை. 15 நாடுகளை மட்டும் கணக்கில் கொண்டால் 0.5மூ தமிழர் தொகை.

தம் இயல்பான தமிழ்ச் சூழலில் வாழவேண்டிய மக்கள், தமிழர் என்ற ஒரே காரணத்தால் புலம் பெயர்ந்தனர். புலம்பெயர்வதற்கு முன்பிருந்த இயல்பான சூழலை ஐரோப்பாவில் பெற முடியாவிட்டாலும், ஆகக் கூடிய அடையாளப் பேணலைக் கொள்ள அரசுகள் ஒத்துழைக்கின்றன.

புலப்பெயர்வுக்கு முன்னுள்ள சூழலைத் தொடரும் இல்லப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. தமிழர் உணவு, தமிழர் உடைகள் எதையும் எளிதில் பெறும் சூழ்நிலை.

ஐரோப்பாவெங்கும் வார இறுதித் தமிழ்ப் பள்ளிகள் மொழிப் பயிற்சி நடுவங்களாகின்றன. சைவக் கோயில்கள், கிறித்தவ தேவாலயங்களில் தமிழ் என வழிபாட்டிடங்கள் தமிழர் குடியிருப்புத் தோறும் உள.

புலப்பெயர்வுக்குப் பின்னரும் குடும்ப உறவுகளைப் பேணும் வசதிகளை, முன்பிருந்த சூழலில் வாழ்ந்தோருடனான உறவுகளைப் பேணுதலை, வளர்த்தலை அரசுகள் ஊக்குவிக்கின்றன.

தமிழ் மொழி சார்ந்த மின் மற்றும் அச்சு ஊடகங்கள் ஐரோப்பாவில் பல்கிப் பெருகியுள்ளன. புலப்பெயர்வுக்கு முன்னுள்ள சூழலைப் பின்புலமாகக் கொண்ட ஊடக இணைப்புகள் தாராளமாகக் கிடைக்கின்றன.

ஒரு சமூகம் எதிர்பாராமல் எதிர்கொண்ட பின்னணி. காலத்தின் கட்டாயப் பின்னணி. சுவையான பின்னணி.

ஐரோப்பியத் தமிழர் இயல்பாகத் தம்மை வெளிப்படுத்தப் பல்வேறு முயற்சிகளைக் காலந்தோறும் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் மாதாந்த இலவச இதழ் ஒன்றை யேர்மனியில் இருந்து வெளியிடுகின்றனர். அகரம் அந்த இதழின் பெயர். தொடக்கத்தைக் குறிக்கும் அச்சொல், தமிழின் இளமையை, என்றும் தொடங்கிக் கொண்டிருக்கும் வற்றா ஊற்றைக் குறிக்கிறது.

அந்த இதழின் 11 சுவடிகளைப் பார்த்தேன், ஒவ்வொன்றாகப் படித்தேன், எனவே இவ்வளவு பீடிகை. அடுத்த கட்டுரையில் அந்த இதழ்களை என் பார்வையில் அலசுவேன்.

புலத்தில் பிறந்த தமிழ் அகரம். 12 இலட்சம் தமிழ் மக்களின் நடுவில் பிறந்த படைப்பு. புகலிடத்தில் அடையாள உணர்வு மங்காதிருக்க உயிரும் உணர்வும் ஈழத்திலிருக்க உதவ முயலும் இதழ்.

ஈழத்தை விட்டு வந்தாலும் அந்த மண் வாசனை மரத்துப் போகாமலிருக்க வாழ்ந்த சூழலை நினைவூட்டும் பக்கங்கள். தமிழீழ ஊர்களை விவரிக்கும் செய்திக் கட்டுரைகளே மண்ணோடு இறுக்கும் மந்திரக் கயிறாக இதழ்கள் தோறும் தொடர்கின்றன.

இஃது இலவச இதழ். ஐந்தாவது இதழிலேயே இலவச இதழாகத் தொடர்வது சாத்தியமா? என்ற வினாவுக்கு, வாசகரும் வணிகரும் துணை நிற்பர் என ஆசிரியர் உறுதி தருகிறார்.

யேர்மனியில் இருந்து வெளிவரும் அகரம் இதழின் பக்க வடிவமைப்பு அண்மைக் காலத் தொழினுட்ப உத்தி சார்ந்தது.

64 பக்கங்கள், அனைத்தும் வண்ணப் பக்கங்கள், வழுவழு தாளில். ஈழத்தமிழர் விடுதலை அரசியல் அலசல்கள், சிறுகதை, கட்டுரை, கவிதை, துணுக்கு, திரைச் செய்தி, உலகவலம் எனப் பக்கத்துக்குப் பக்கம் தமிழ், கொள்ளை அழகு குலவும் தமிழ்.

வண்ணங்களைக் கலவையாக்கி, வாசகரின் உள்ளத்தை ஈர்த்துப் படிக்குமாறு தூண்டும் தமிழ் வரிகளை அக் கலவைக்குள் கரைத்து, ஒவ்வொரு வரியும் உற்சாகம் தரும் வரியாக, ஊக்கம் தரும் வரியாக, கருத்தூட்டம் தரும் வரியாக, தமிழ் அடையாளம் பேணும் வரியாக அமைந்த பந்திகளே கட்டுரையாக, கதையாக, துணுக்காக, செய்தியாக விரிந்துள.

யேர்மனி உற்பத்தி செய்யும் ஐடல்பர்க்கு அச்சு எந்திரங்கள் உலகின் மிகச் சிறந்த அச்சு எந்திரங்கள். யேர்மனியின் அச்சு வளர்ச்சியை உள்வாங்கிய அச்சமைப்பும் கட்டமைப்பும் அகரம் இதழைத் தலைநிமிர்த்துகிறது.

சுட்டும் அனல் விழியர் வெட்டும் குரல் தொனியர் என்ற பாராட்டுக் கவிதை வரிகள் நடுஅடைந்தன. பக்கமாக்கியார் இட அடைவாக்கினால் வாசகர் தெளிவர்.

ஆளணியற்ற சூழ்நிலை. பக்காக்கியர், ஓவியர், மெய்ப்பர், அச்சிடத் தயாரிப்பவர் யாவருமே ஆசிரியராகும் காலமிது. கணினி தரும் வசதிக் காலமிது. எழுத்துருக்கள் தமிழில் ஒரே அடக்கத்துள் இல்லை. ஒருங்குறி மட்டுமே அனைவருக்கும் பொது எழுத்துரு. விசைப்பலகைகளும் எடுப்பார் கைப்பிள்ளைகளாக உள. இந்தக் குழறுபடிகளைச் சீர்செய, கணினிப் பயில்வும் பழக்கமும் தேவை. ஆசிரியரிடமே இவை அமைந்து வரும் காலம்.

எழுத்துப் பிழைகள் ஏற்பட்டுவிட்டன என்ற கவலையுடன் ஆசிரியர் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுப் பார்க்கிறார். ஆனாலும் அவர் கண்கள் அவைரையே ஏமாற்றுகின்றன. அதற்காக வாசகரிடம் மன்னிப்புக் கோருகிறார் எளிவந்த எம்பிரானாய் அகரம் ஆசிரியர்.



மறவன்புலவு க. சச்சிதானந்தன்

அட்டைப் படம் சிந்திக்கத் தூண்டுவதெனில், வாசகர் கருத்துரை கண்டனமாக, பாராட்டாகச் சந்தியில் நிறுத்துகிறது.

பெரும் வலியோடு பிரசவமாகின்றன அகரம் இதழ்கள் என்ற வரி, வாசகரின் கண்களில் நீரை வரவழைக்கும். பிரசவத்துக்குப் பிந்தைய வேதனைகளையும் அகரம் சுட்டுகிறது. வாசகருக்குப் போய்ச் சேரும் வினியோக அமைப்பில் உள்ள குறைகளைப் போக்க உதவுமாறு வாசகரையே கேட்கும் அகரத்தின் நோக்கம், 50 நாடுகள் கொண்ட ஐரோப்பாவான தம் புகலிடத்தில் அடையாளம் கலையாத சமூகமாகத் தமிழர் நிலைப்பதே.

யாருக்கும் எடுபிடியோ கைத்தடியோ அல்ல என்ற உரத்த குரல் ஐயங்களைப் போக்கி, மயல்களை நீக்கி, மயக்கங்களை விலக்குகிறது.

நாம் தவறிழைக்கக் கூடியவர்கள். தவறுகளைத் திருத்திக் கொள்ளவும் தெரிந்தவர்கள். திருந்துவோம், நல்லவர்களாக, வல்லவர்களாக மாறுவோம். ஒழுக்கம் விழும்பம் தரும். நல்வழியில் தொடர்வோம், விட்டுக் கொடோம் என்ற உறுதியைக் கட்டுரைகளின் வரிகளிடை இலைமறை காயாகத் தருவது அகரம். நாம் திருந்த மாட்டோம் என்ற வண்ணை தெய்வத்தின் சிறுகதை சான்று.

தமிழினத்தின் மனச்சாட்சியாக விளங்கும் என்ற ஓங்கிய குரலே உள்ளடக்க ஆசிரியர் குரல்.

தமிழ் நாட்டில் ஈழ ஆதரவு நிலை ஒவ்வொரு இதழிலும் அலசலாகும். தமிழ் நாட்டு அரசியலும் வளர்ச்சியும் சொல்லுவதில் ஐரோப்பிய வாசகரைத் தன் கண்முன் நிறுத்துகிறார் பதிப்பாசிரியர்.

புலம்பெயர் தமிழர்கள் இந்தியச் சாடலைக் கடுமையாக முன்னெடுக்கிறார்கள். இந்தியா வழிதான் தீர்வு வரவேண்டும் என உலக நாடுகள் கருதுகின்றன. இந்திய மேலாதிக்க வலையத்துள் உள்ள சிறு நாடு என இலங்கையைப் பார்க்கின்றன.

யூகோசுலோவியாவை உடைத்தபின் சேர்பியாவையும் உடைத்துக் கொசொவோ தனி நாடான பின்னும் உருசியா உடன்படாததால் முழுமையான விடுதலையைக் கொசொவோ அடையமுடியவில்லை என்பதைத் தென் ஐரோப்பாவில் கண்கூடாகக் கண்டபின்னரும் புவிசார் அரசியல் புரிதலற்று, இந்தியாவைப் புலம்பெயர் தமிழர் கடுமையாகத் தாக்குவது தொடர்கிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பகைநிலை வராது காத்துவரும் சிங்களத் தலைமையின் சாணக்கியத்தைப் புலம்பெயர் தமிழர் புரியாதிருக்கிறார்களோ?
அகரம் இந்த நிலைக்கு விதிவிலக்கல்ல.

தமிழர் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கும் வழிமுறைகளில் பூடகத் தன்மை நீங்கி வெளிப்படைத் தன்மை பெருகவேண்டுமென்ற அழுத்தம் இதழுக்கு இதழ் தொடர்கிறது.

தமிழ்க் கலாச்சார விழாக்களின் தேவையை, அடையாளத் தக்கவைப்பின் இன்றியமையாமையை அகரம் வலியுறுத்துகிறது.

யவனர் வழி ஊரலுக்கு அப்பாலான மக்களை அறிந்தனர் சங்க காலத் தமிழர். ஆங்கிலேயர் வழி ஐரோப்பாவைக் கண்டனர் அண்மைய காலத் தமிழர். ஐரோப்பாவெங்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆட்சி மொழிகள் 23 இறுகி உறுதியுடன் தமிழ்ப் பண்புகள் நிலைக்க அகரம் போன்ற ஊடக உள்கட்டமைப்புகளைச் சமைக்கின்றனர் இக்காலத் தமிழர்.




GENERALI
Versicherungen
காப்புறுதியே வாழ்வின் காப்பரண்
WWW.GENERALI.CH
எமது காப்புறுதித்திட்டங்கள்
தொழில் நிறுவனங்களுக்கும் தனி நபருக்குமானது
Versicherungen-Vorsorge für
Firmen und Privatkunden
அதிக வட்டியுடன் வங்கி வைப்புக்கணக்கு
Bank, Anlagekonto
Berater:
MATHAN SELVARATNAM
ZENTWEG 21D, 3006 BERN
058 473 24 44
076 303 22 16
EMAIL: mathan.selvaratnam@generali.ch
சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்.
எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்



# சந்தர்ப்பத்துக்காக காத்திருக்கும் இந்தியா!

-பவித்திரன்

இரண்டு மாத காலத்தில் இரண்டாவது தடவையாக இந்தியாவுக்குக் கொடுத்த வாக்குறுதியை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீறியிருக்கின்றார். இரு மாதங்களுக்கு முன்னர் கொழும்பு வந்த இந்திய வெளிவிகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கு "13 பிளஸ்" தொடர்பாகப் பேசவும் அதன் அடிப்படையில் தீர்வொன்றைக் காணவும் தான் தயாராக இருப்பதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். பின்னர் அதனை மறுத்தார். இப்போது இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழுவினரிடமும் அதேபோல கொடுத்த வாக்குறுதியை அவர் மறுத்திருக்கின்றார்.

இந்த இரண்டு சம்பவங்களும் இந்தியாவுக்குச் சீற்றத்தைக் கொடுப்பதாக அமைந்திருக்கும் என்பது நிச்சயம். தீர்வுக்கான அழுத்தத்தை இந்தியா கொடுக்க வேண்டும் என சுஷ்மா தலைமையிலான குழு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கொடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தியிருப்பது இந்த இடத்தில் கவனிக்கத்தக்கது. இந்த இரண்டு சம்பவங்களும் மட்டுமன்றி, மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்ட பின்னர் அவர் மேற்கொண்டுவரும் ஒவ்வொரு நடவடிக்கைகளுமே இந்தியாவுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமைந்திருக்கவில்லை என்பதே உண்மை. குறிப்பாக வெளியுறவுக்கொள்கை விடயங்களும், இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றைக் காணும் விடயத்திலும், ராஜபக்ஷ அரசின் அணுகுமுறை இந்தியாவால் எற்றுக்கொள்ளத்தக்கதாக அமைந்திருக்கவில்லை.

இருந்த போதிலும், இலங்கை மீது அழுத்தங்களைக் கொடுப்பதற்கான பிடி எதுவும் புதுடில்லியிடம் இருக்காமையால் மௌனமாக இருப்பதைவிட இந்தியாவிடம் வேறு தெரிவுகள் எதுவும் இருக்கவில்லை. இதன்மூலம் இலங்கை விடயத்தில் சும்மா இருப்பது என்ற முடிவை இந்தியா எடுத்திருப்பதாகக் கருத முடியாது. ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீதான தன்னுடைய பிடியை இறுக்குவதற்கான ஒரு தருணத்தை இந்தியா எதிர்பார்த்துக்காத்திருந்தது என்பதே உண்மை நிலையாகும். கொழும்பின் மீது அழுத்தங்களை அதிகரிக்கும் போது அது மேலும் சீனாவின் பக்கம் சென்றுவிடுவதற்கான சாத்தியங்கள் நிறையவே இருந்தமையால் தனது நகர்வுகள் தொடர்பில் மிகவும் அவதானமாகவே புதுடில்லி இருந்துள்ளது.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணை விடயத்தில் கூட, இந்தியா எடுத்த நிலைப்பாட்டுக்கு தமிழகத்தில் உருவான அழுத்தங்களும், அமெரிக்காவின் நெருக்குதலும் மட்டும் காரணமாக இருக்கவில்லை. கொழும்புக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும், நான் யார் என்பதை இலங்கைக்கு காட்ட வேண்டும் என்ற இந்தியாவின் மனப்பாங்கும் அதற்குக் காரணமாக இருந்திருக்கின்றது. அதாவது நீண்டகாலமாக தன்னை ஏமாற்றிவந்த மகிந்தவைப் பழிவாங்க இதனை ஒரு சந்தர்ப்பமாக இந்தியா பயன்படுத்திக்கொண்டது.

மறுநாள் மன்னிப்புக் கோரும் பாணியில் பிரேரணையின் வீரியத்தைக் குறைப்பதற்காகத்தான் தாம் அவ்வாறு நடந்துகொண்டதாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பிவைத்தமை வேறு விடயம்!

இந்தியப் பாராளுமன்றக் குழுவின் விஜயம் போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கின்ற போதிலும், ஜெனீவாவுக்குப் பிந்திய இலங்கை - இந்திய உறவுகளில் முறுகல் நிலை ஒன்று காணப்படுவதை வெளிப்படையாகவே காணமுடிகின்றது. சர்வதேச அரங்கில் இந்தியாவுக்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்பதில் கொழும்பு தீவிரமாகவே உள்ளது.

இந்த இடத்தில்தான் இந்தியாவுக்கு அடிபணிய மாட்டோம் என வீரம் பேசி சிங்கள சமூகத்தின் ஆரவாரத்தைப் பெற்றுக்கொண்ட முன்னாள் ஜனாதிபதிகள் இருவருக்கு நடந்தது போல தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் நடக்காதா என்ற கேள்வியை சிங்க ஆய்வாளர் ஒருவர் எழுப்பியிருந்தார். இந்தியாவைப் பொறுத்தவரையில் மகிந்தவுடன் சமாதானமாகப் போவதாக அது காட்டிக்கொண்டாலும் கூட, அவருக்கு எதிரான யெற்பாடுகளை இந்தியா திரை மறைவில் மேற்கொண்டுவருகின்றது என்ற அடிப்படையிலேயே இந்தக் கேள்வி அவரால் எழுப்பப்பட்டிருந்தது.

இனநெருக்கடியின் அடிப்படையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான முரண்பாடுகள் 1983 ஆம் ஆண்டின் பின்னர்தான் தீவிரமடைந்தது எனக் குறிப்பிடலாம். 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பின்பற்றிய அமெரிக்க சார்புக்கொள்கையும், திறந்த பொருளாதாரக் கோட்பாடும்தான் இலங்கையின் அணுகுமுறைகளில் இந்தியாவுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. இக்காலத்தில் இந்தியப் பிரதமராகவிருந்த இந்திரா காந்தி அம்மையார் ஜெயவர்த்தனவை வழிக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன்தான் தமிழ்ப் போராளி அமைப்புக்களுக்கு ஆயுதப்பயிற்சியைக் கொடுப்பது என்ற முடிவுக்கு வந்தார்.

இந்தநிலையில் இந்தியாவை எதிர்கொள்வதற்கு இரு முனை நகர்வு ஒன்றை ஜனாதிபதி ஜெயவர்த்தன மேற்கொண்டார். உள்ளூர் நிலைமைகளைச் சமாளிக்கும் நோக்கில் இந்திய எதிர்ப்பக் கோஷத்தை ஜெயவர்த்தன தூக்கிப் பிடித்தார். இந்தியாவுக்கு அடிபணியப்போவதில்லை என்பது அவரது பிரதான கோஷமாக இருந்தது. சிங்களவர்கள் மத்தியில் இந்திய எதிர்ப்புணர்வு வேகமாகப் பரப்பப்பட்டது. தன்னுடைய பிரச்சாரங்களின் மூலமாக சிங்கள மக்கள் மத்தியில் "தேசபக்தர்" என்ற பிரதிமையை அவர் பெற்றுக்கொண்டிருந்தார்.

இரண்டாவது நகர்வாக சர்வதேச அரங்கில் அவரது காய்நகர்த்தல்கள் இடம்பெற்றது. பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் என தனக்கு ஆதரவான நாடுகளை அவர் உதவிக்கு அழைத்துக்கொண்டார். இந்த நாடுகளிடமிருந்து பாரிய அளவில் ஆயுத உதவிகளை அவர் பெற்றுக்கொண்ட அதேவேளையில் புலனாய்வுத் தகவல்களை வழங்குவதற்கும் இந்த நாடுகள் முன் வந்தன. இலங்கைப் படையினருக்கு போர்ப் பயிற்சிகளையும், புலனாய்வுத் துறையில் பயிற்சிகளை வழங்குவதற்கும் இந்த நாடுகள் முன்வந்தன. இதன் மூலமாக இந்தியாவினால் எதிர்கொள்ளக் கூடிய அழுத்தங்களை தன்னால் சமாளிக்கக்கூடியதாக இருக்கும் என அவர் கணக்குப் போட்டார்.

இருந்தபோதிலும், 1980 களில் நிலைமை மாற்றமடைந்தது. யாரை பயங்கரவாதிகள் என அவர் வர்ணித்தாரோ அவர்களுடன் திம்புவில் பேச்சுக்களை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. இந்தியாவின் நிர்ப்பந்தத்தினால் நடத்தப்பட்ட திம்புப் பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்திருந்தாலும் கூட, இந்தியாவின் பிடி இறுக்கமானதாகவே இருந்துள்ளது. தமிழ்ப் போராளிகளை வைத்து இலங்கை அரசாங்கத்தை வழிக்கக் கொண்டுவருவதற்கான இந்தியாவின் முயற்சிகள் தொடரத்தான் செய்தது. 1986 ஆம் ஆண்டு நவம்பவரில் ஜனாதிபதி ஜெயவர்த்தனவையும், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனையும் சந்திக்க வைக்கும் நோக்கில் பெங்களூரிலுள்ள ஒரே ஹொட்டலுக்கு இந்தியாவினால் கொண்டுவர முனைந்திருந்த போதிலும், அந்தச் சந்திப்ப இடம்பெறவில்லை.

இந்த நிலையில் 1987 ஆம் ஆண்டில் இந்தியா மேற்கொண்ட நகர்வுகள் இலங்கை - இந்திய உடன்படிக்கைக்கு ஒத்துவர வேண்டிய நிர்ப்பந்தத்தை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு ஏற்படுத்தியிருந்தது. வடக்கு கிழக்கு இணைப்புக்கும், அதற்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கும் ஜெயவர்த்தன இணங்கினார். எவ்வாறான ஒரு தீர்வுக்கு வரக்கூடாது என்பதில் ஜெயவர்த்தான உறுதியாக இருந்தாரோ அந்தத் தீர்வுக்கு அவரை வருவதற்கு இந்தியாவின்

அழுத்தங்கள் நிர்ப்பந்தித்தன. பௌத்த - சிங்களக் கடும் போக்காளர்களின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியிலும் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிர்ப்பந்தத்தில் ஜெயவர்தன இருந்தார். அமைதிப்படை என்ற பெயரில் இந்தியப் படை வடக்கு கிழக்கில் நிலை கொள்வதற்கும் அவர் பச்சைக்கொடி காட்ட வேண்டியராகவே இருந்தார்.

இந்தியாவின் அழுத்தங்களுக்கு ஜெயவர்த்தன அடிபணிந்த நிலையில், சிங்களத் தேசியவாதத்தையும் இந்திய எதிர்ப்பு வாதத்தையும் கைகளில் எடுத்து தன்னை வளர்த்துக்கொள்வதற்கு முற்பட்டவர்தான் ஜெயவர்தன அரசாங்கத்தில் பிரதமராக இருந்த ஆர்.பிரேமதாச. இந்தியப் படையின் பிரசின்னத்தையும், உடன்படிக்கையையும் அவர் கடுமையாக எதிர்த்தார். அமைச்சரவையிலேயே இதனை அடிப்படையாகக் கொண்டு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தினார். இதன் மூலம் ஒரு இந்திய எதிர்ப்பாளர் என்ற முறையில் பிரேமதாச-வின் புகழ் சிங்களவர்கள் மத்தியில் பெரு-கியது. இந்தியாவுக்கு அடிபணியப் போவதில்லை என அவர் முன்னெடுத்த பிரச்சாரத்தினால் ஜெயவர்த்தனவே ஆடிப்போயிருந்தார்.

இந்தப் பின்னணியில் 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாச களம் இறங்கினார். அரசியலமைப்பின்படி ஒருவர் இரு தடவை ஜனாதிபதியாக இருக்க முடியாது என்பதால் ஜெயவர்த்தனவினால் மீண்டும் போட்டியிட முடியவில்லை. பிரேமதாசவுக்கே அந்த வாய்ப்புக் கிடைத்தது. உண்மையில் ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.க.வின் சார்பில் போட்டியிடுவதற்கு காமினி திசாநாயக்க விரும்பியிருந்த போதிலும் இந்திய - இலங்கை உடன்படிக்கையை ஆதரித்தவர் என்ற முறையில் கட்சிக்குள் அவருக்கு ஆதரவிருக்கவில்லை. இந்தியாவை துணிச்சலாக எதிர்க்கக்கூடிய ஒருவர் என்ற முறையிலேயே பிரேமதாசவை சிங்கள மக்கள் விரும்பினார்கள்.

தான் பதவிக்கு வந்தால் இந்தியப் படையை நாட்டைவிட்டு வெளியேற்றுவதுதான் தனது முதலாவது பணியாக இருக்கும் எனக் கூறிய பி-ரேமதாசவையே மக்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்தார்கள். அவரை எதிர்த்துப்போட்டியிட்ட சிறி-மாவோ பண்டாரநாயக்க சொற்ப வாக்ககளால் தோல்வியடைந்தார். யாழ்ப்பாணத்தில் சிறிமாவோ பண்டாரநாயகடகவுக்கே அதிகளவு வாக்குகள் கிடைத்திருந்த போதிலும், பிரேமதாசவை அவரால் தோற்கடிக்க முடியவில்லை.

பதவிக்கு வந்த பிரேமதாச இந்தியப் படைகளை வெளியேற்றுவது என்ற தனது வாக்குறுதியை உடனடியாகவே நிறைவேற்றிய போதிலும், அவரது வெளியுறவுக்கொள்கையில் முதலா-வது இடத்தில் இந்தியாவுடன் நல்லுறவை ஏற்படுத்துவது என்பதே இருந்துள்ளது. இந்தியாவுக்குப் பலதடைவை சென்று வந்த அவர், இந்தியாவுடனான நட்புறவை வலுப்படுத்துவதில் வெற்றியும் பெற்றார். இந்தியாவுடன் பகை-மையை வளர்ப்பது எந்த வேளையிலும் தனக்கு ஆபத்தை ஏற்படுத்துவதாக அமையும் என்பதை பிரேமதாச சரியாகவே கணிப்பிட்டிருந்தார்.

ஜெயவர்த்தனவையும் பிரேமதாசவையும் பொறுத்தவரையில் சிங்கள மக்களின் ஆதரவைத் தக்கவைத்துக்கொள்வதற்கு இந்திய எதிர்பைக் கைகளில் எடுத்துக்கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு இருந்துள்ளது. இந்திய எதிர்ப்ப வாதத்தைத் தீவிரமாக முன்னெடுத்த இவ்விருவரும் பின்னர் இந்தியாவுக்கு பணிந்து போனார்கள் என்பது சரித்திரம்.

பிரேமதாசவுக்குப் பின்னர் 1994 இல் பதவிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்தவரையில் இந்தியாவுடன் அவர் நல்லுறவையே கொண்டிருந்தார். பண்டாரநாயக்க குடும்பத்தினருடன் இந்தியா நல்லுறவை கொண்டிருப்பது ஒரு பாரம்பரியமாகவே இருந்துள்ளது.

இப்போது மகிந்த ராஜபக்ஷதான் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை தீவிர-மாகக் கைகளில் எடுத்துக்கொண்டிருப்பவர். இந்தியா சொல்வது அனைத்தையும் அவர் கேட்டுக்கொள்வதாகச் சொல்லிக்கொண்டாலும், பின்னர் அதனை மறுதலிப்பதையே வழமை-யாகக் கொண்டிருக்கின்றார். உதாரணம்: 13 பிளஸ். இதனைவிட தமக்கு எதிரான நாடுக-ளான சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றுடன் மகிந்தர் ஏற்படுத்திக்கொண்டுள்ள உறவுகள் தமது நலன்களுக்குப் பாதகமானது என்பதையும் இந்தியா பரிந்துள்ளது.

ராஜபக்ஷவின் இந்தப் போக்கு இந்திய அதி-கார வர்க்கத்துக்குப் .பெரும் சீற்றத்தை ஏற்படுத்தும் ஒன்றாக இருக்கின்றது என்பது உண்மை. தமது சீற்றத்தைக் காட்டப்போனால், மகிந்தர் மேலும் சீனாவுடன் நெருங்கிவிடுவார் என்பது இந்தியாவுக்குள்ள அச்சம். இந்தியாவின் மௌனத்திற்கு அதுதான் காரணம். சந்தர்ப்பம் ஒன்றுக்காக இந்தியா காத்திருக்கின்றது என்பதே உண்மை!


Orient
Textiles and Jewellery
2012 ம் ஆண்டுக்கான புத்தம்
புதிய வர்ணங்களில் குந்தம்
வேலை செய்த கோலம்.
காஞ்சி காஞ்சிபுரம்,
கோலம் மற்றும் பல வகையான
முகூர்த்தப் பட்டுச் சேலைகள்.
உத்தரவாத முத்திரை பதித்த
தரமான தங்கமான தங்க
ஆபரணங்கள் தரமான தேர்வில்,
சிங்கப்பூர் விலையில்
விற்பனையானகின்றது.
உரிமையாளர்: S.ஜகதீஸ்
Königswall 16 (Am HBF)
44137 Dortmund, Germany
Tel: 0231 16 23 77
Fax: 0231 14 78 36
165, Upper Tooting Road
Tooting, London SW177TJ, UK
Tel: 0208 6823958
சிறுவர்களுக்கான
ஆடைவகைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.

# உரிமைப்போரை உலகமயப்படுத்திய முள்ளிவாய்க்கால் வீரம்!



- கலைவண்ணன் -

சிங்கள அரசு பயங்கரவாதத்திற்கு எதிரான போர்ப்பரப்புரையின் மூலம் சர்வதேச வல்லரசு நாடுகளின் சகலவிதமான ஆதரவோடு, ஒருபுறம் வரலாறுகாணாத பெருமெடுப்பிலான ஆக்கிரமிப்புப் போரை மேற்கொண்டதோடு மறுபுறம் பொதுமக்கள் செறிவாக வாழும் இடங்கள் மீது எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டு இனவழிப்பை நிகழ்த்தியது.

வட்டக்கச்சி, முரசுமோட்டையிலிருந்து வெலிக்கண்டல், புளியம்பொக்கணை, இருட்டுமடு, ஒலுமடு, தர்மபுரம், நெத்தலியாறு, சுண்டிக்குளம், கல்லாறு, விசுவமடு, தொட்டியடி, பன்னிரண்டாம்கட்டை, ரெட்பானா, பிரமந்தனாறு, தேராவில், உடையார்கட்டு, வள்ளிபுரம், சுதந்திரபுரம், கைவேலி, புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை மற்றும் முள்ளியவளை, வற்றாப்பளை என அங்கே ஒவ்வொரு கிராமங்களிலும் வீதிகளிலும் செறிவாகப் பொதுமக்கள் வாழ்ந்த பகுதிகள் மீது சிறிலங்காப் படையினர் பரவலான எறிகணைத் தாக்குதல்களையும் விமானத் தாக்குதல்களையும் நிகழ்த்தி பொதுமக்களைக் கொல்லுகின்ற வேட்டையில் தீவிரமாக ஈடுபட்டனர். இந்தப் பிரதேசங்களில் மக்கள் நிலைகள் மீது சிறிலங்காப் படையினர் கண்மூடித்தனமாக எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டபோதிலும், சற்று இடவசதி இருந்ததாலும் பொதுமக்கள் பதுங்குகுழிக்குள் காப்பெடுத்துக் கொண்டதாலும் மக்களுக்கு சுமாரான உயிரிழப்பு ஏற்பட்டது.

இந்தநிலையில் இலங்கையரசு புதுமாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம், கரையாமுள்ளிவாய்க்கால், வெள்ளாமுள்ளிவாய்க்கால் ஆகிய 12 கிலோமீற்றர் நீளம்கொண்ட பகுதிகளைப் "பாதுகாப்பு வலையமாக" அறிவித்தது. அதற்கு முன்னர் சுதந்திரபுரத்தை "பாதுகாப்பு வலையமாக" இலங்கையரசு அறிவித்திருந்தது. ஆனால், அந்தப் பகுதியில் இலங்கைப் படையினரின் மோசமான எறிகணை வீச்சுக்களால் பெருமளவு மக்கள் கொல்லப்பட்டிருந்தனர். இதனால் இலங்கையரசு அறிவித்த "பாதுகாப்பு வலையத்திற்குள்" செல்ல மக்கள் தயங்கியபோதிலும், இலங்கைப் படையினர் "பாதுகாப்பு வலையம்" இல்லாத ஏனையபகுதிகளில் குறிப்பாக மக்கள் வாழும் பகுதிகளில் கடுமையான எறிகணைவீச்சை நிகழ்த்தியதால் வேறுவழியின்றி அனைத்து மக்களும் அரசு அறிவித்த அந்தப் பாதுகாப்பு வலயத்திற்குள் சென்று தஞ்சமடைந்தார்கள்.

ஆனால், அரசு அறிவித்த அந்தப் "பாதுகாப்பு வலையத்துக்குள்" தான் இனிமேலும் இல்லாதவாறான ஆட்டிலறி, மோட்டார், பல்குழல் எறிகணை வீச்சுக்களையும் கனரக, இலகுரகப் படைக்கலன்களையும் கொண்டு மிகச்செறிவான தாக்குதல்களை இலங்கைப்படை மக்கள்மீது நிகழ்த்தியது. இதனால், ஒவ்வொரு மணித்துளியும் மக்கள் அங்கே கொல்லப்பட்டும் காயப்பட்டுக் கொண்டுமிருந்தனர். இறுதியாக புதுமாத்தளனிலிருந்து படிப்படியாகப் பின்வாங்கி முள்ளிவாய்க்கால் பகுதியில் ஒரு சதுரகிலோமீற்றர் நிலப்பரப்பிற்குள் மூன்று இலச்சக்கணக்கான மக்கள் ஒதுங்கினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளை நிலைகுலையச் செய்யவேண்டுமானால் அல்லது நிர்மூலமாக்க வேண்டுமானால் அவர்களது இதயமாகவும் ஒருமித்த தாங்குசக்தியாகவும் விளங்கும் அந்த மக்களைத் தாக்கினாலே அதை சாத்தியப்படுத்த முடியுமென்பதை இலங்கைப் படையினர் வல்லரசுநாடுகளின் துணையோடு நன்கறிந்து இந்தத் திட்டமிட்ட இனப்படுகொலையை நிறைவேற்றினர்.

ஏனெனில், 2006-யூலை மாவிலாற்றிலிருந்து 2009-ஏப்பிரல் ஆனந்தபுரம் வரைக்குமான சுமார் மூன்றுவருடகாலப் போரில் ஒவ்வொரு நிலப்பரப்பையும் ஆக்கிரமிப்புச் செய்வதற்கான நூற்றுக்கணக்கான சமர்களில் இராணுவத்தினர் பல்லாயிரக்கணக்கான உயிர்விலையைக் கொடுக்க நேர்ந்தது.

மூன்றுவருடங்களாக நீடித்த இந்தப் போரில் அறுபதாயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். படையினரின் இறப்புகள் தென்னிலங்கை மக்களுக்குத் தெரியாதவாறு மகிந்தவின் குடும்ப அரசபயங்கரவாதம் மிகவும் இரகசியமாக மூடிமறைத்தது. விடுதலைப் புலிகளுக்கு எறிகணை வெடிபொருள் பற்றாக்குறை பின்வாங்கல்களுக்கு மிக மூலக்காரணியாக இருந்தபோதிலும், தாமே சொந்த மண்ணிலே சொந்தவளத்தைப் பயன்படுத்தி பல எறிகணைகள், வெடிபொருட்கள் மற்றும் படையப்பொருட்களை உற்பத்திசெய்து முளுமையான சக்தியையும் பயன்படுத்தி இறுதிவரை போரிட்டார்கள். எறிகணைத் தாக்குதல்களுக்கு மாற்றீடாக விடுதலைப்புலிகள் சிறப்புக் குறிச்சூட்டு அணிகளையும் கனரகப் பீரங்கி அணிகளையும் உருவாக்கி மன்னாரிலிருந்து இறுதிவரைக்குமான சமர்களில் பல்லாயிரக்கணக்கான சிறிலங்காப் படையினரைக் கொன்று குவித்தனர்.

இந்த நீண்ட மரபுவழி மறிப்புப்போரின்போது, பல ஆயிரக்கணக்கான போராளிகள் எமது சுதந்திர இலட்சியத்திற்காக போராடி வீரமரணத்தைத் தளுவியுள்ளார்கள். இவர்கள் தங்கள் இறுதி மூச்சுவரை இருபத்துநான்கு மணிநேரமும் பெரும் சமரளுத்தங்களின் மத்தியிலும் சளைக்காது போராடினார்கள்.

ஆனந்தபுரத்தையடுத்து, முல்லைத்தீவின் சாலைப் பகுதியிலிருந்து வட்டுவாகல் வரைக்கும் மே-17, 2009 வரை ஒவ்வொரு அடி நிலத்தைப் படையினர் கைப்பற்றுவதற்கும் தம்மில் ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலியிடவேண்டியிருந்தது. போரில் வெற்றியின் தருணங்கள் என்பது இறுதிக்கணத்தில்கூட மாறமுடியும். இதற்கு விடுதலைப்புலிகளின் போரியல் வரலாற்றில் பல நிகழ்வுகள் உண்டு. இந்தத் தருணத்தை விட்டால் இனி ஒருபோதும் விடுதலைப்புலிகளை அழித்துவிட முடியாதென்ற உண்மையை அரசதரப்பு நன்கறிந்திருந்தது. முள்ளிவாய்க்கால் போரின் இறுதி நாட்களில் விடுதலைப்புலிகள் ஏதோவொரிடத்தால் தாக்குதல்செய்து போரைத் திசைமாற்றிவிடக் கூடாதென்பதற்காக பொதுமக்கள் மீது மிகமோசமான திட்டமிட்ட தாக்குதல்களைச் செய்தனர். விடுதலைப்புலிகளை மக்கள் மத்தியில் வெறுப்பையுண்டுபண்ணி, அவர்களை மக்கள் மத்தியிலிருந்து தனிமைப்படுத்தினாலே இந்தப்போரை வெல்லமுடியுமென்ற ஒரேநோக்கத்திற்காக அந்த மக்களைத் தாக்கி, ஒரு இலச்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களைப் படுகொலைசெய்து, மாபெரும் போர்க்குற்றத்தை இழைத்தனர் இலங்கைப்படையினர்.

இதற்காக அங்கே மக்கள் பதுங்குகுழிக்குள்கூட ஓய்வெடுக்க முடியாதவாறு எல்லா முனைகளிலிருந்தும் சகலவிதமான எறிகணைகளாலும் படைக்கலன்களாலும் மக்கள் மீது செறிவாகத் தாக்கிக்கொண்டேயிருந்தார்கள். காயப்பட்ட மக்கள் சிகிச்சைபெற முடியாதவாறு மருத்துவமனைகளைத் தாக்கினார்கள். அந்த மக்களுக்கான மருந்து விநியோகத்தைத் தடுத்தார்கள். காயப்பட்ட மக்களை வெளியே அப்புறப்படுத்துவதற்கான சர்வதேச செஞ்சிலுவைச்சங்கக் கப்பலின் வரவைத் தடுத்துநிறுத்தினார்கள். அந்த மக்களுக்கு வெளியாலிருந்து தருவிப்பதற்கான உணவு விநியோகத்தைத் தடுத்தார்கள். பட்டினிச்சாவைத் தடுப்பதற்காக ஒருவேளை உணவு வாங்குவதற்காக பசியோடு வரிசையாக குழுமிநின்ற மக்கள்மீது மிகவும் துல்லியமாகத் தாக்கினார்கள். மொத்தத்தில் 2008 இன் இறுதிக்காலத்திலிருந்து மே-18, 2009 இறுதிநாள்வரை அவர்கள் தொடர்ந்து திட்டமிட்ட பாரிய தாக்குதல்களை மக்கள்மீது நிகழ்த்திக்கொண்டேயிருந்தார்கள்.

இவ்வாறாக இலங்கை அரசு ஒரு இராணுவ வெற்றியைப் பெற்றுவிடுவதற்காக மிகக் கோழைத்தனமாக அந்த அப்பாவிப் பொதுமக்களை வதைத்துக் கொன்றது. தமிழீழப் போராட்டத்தின் எந்தச் சமரும் சந்தித்திராத உயிர், உடல் இழப்புக்களை இலங்கைப் படையினர் அங்கே எமது மக்களுக்கு இழைத்தனர்.

எங்களுடைய உறவுகள் அங்கே இரத்த ஆற்றில் நீந்தினர். இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட பயங்கரமான படுகொலைகளும் குற்றச் செயல்களும் இரகசியமாக நடந்தவையல்ல.

இருந்தாலும் அவர்கள் மிக உறுதியோடுதான் இருந்தார்கள். எதுவானாலும் வரட்டுமே என இறுதிவரைக்கும் நின்று எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான போரை உலகறியச் செய்துள்ளார்கள். சிங்கள அரசபயங்கரவாதத்தின் உண்மைத் தோற்றத்தை உலகுக்குக் காட்டியுள்ளார்கள். சிங்களத்துக்கு சகலவகையிலும் உதவிய நாடுகளை வெட்கித் தலைகுனியவைத்துள்ளனர். அந்தவகையில் முள்ளிவாய்க்கால் மண்ணிலே கடைசிநிமிடம் வரை சாவைத் துச்சமாக எண்ணி சளைக்காது போராடிய எங்கள் வீரத் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பெற்றுவளர்த்து அவர்களோடு தூணாக நின்ற பொதுமக்கள் அனைவரினதும் தியாகங்கள் என்றும் உலக சரித்திரத்தில் நிலைத்துநிற்கும்.

கடந்த மாதங்களாக பல்வேறு இணையத்தளங்களில் தலைப்புச் செய்திகளாக வாசிக்கப்பட்ட விடையம், "ஐ.நா. மனிதவுரிமை சபையில் அமெரிக்கா இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை எடுத்தது" என்பதே. நீதி வேண்டிப் போராடும் அனைத்துத் தமிழ் மக்களும் இந்தச் செய்திகளை வாசிக்கும் பொழுது மகிழ்ச்சி அடைகின்றனர். ஆனால், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா எடுத்திருக்கும் தீர்மானத்தில் என்ன உள்ளடக்கி இருக்கின்றது என்பதை தெளிவாக உற்று நோக்குவோமானால், அதில் ஆயிரமாயிரம் தமிழ் மக்களை கண்மூடித்தனமாய்க் கொன்றுகுவித்த சிங்கள இனவெறியரசு தம்மைத் தாமே விசாரணை செய்வதாக உருவாக்கிய இராஜதந்திர முறையில் கூறப்படும் "நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை" ஆகும். அதாவது கொலைகாரன் தன்னையும் தனக்கு உதவியாக இருந்த சகாக்களையும் காப்பாற்றுவதற்கு தானே எழுதிய தீர்ப்பே அதில் காணப்படுகின்றது. அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தச் சொல்லியே அமெரிக்காவின் தீர்மானம் அடிப்படையாக அமைந்திருக்கின்றது. இதுவே இலங்கைக்கு எதிராக அமெரிக்கா எடுத்திருக்கும் அந்தத் "தீர்மானம்" ஆகும். இலங்கையரசின் "நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை" பல்வேறு சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்களாலும், பல்வேறு நாடுகளின் அரசியல் கட்சிகளாலும், அரசியல் பிரமுகர்களாலும் நிராகரிக்கப்பட்டு, அவர்களால் சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்றே வலியுறுத்தப்படுகின்றது. அத்தோடு, நிலத்திலும் புலத்திலும் ஈழத்தமிழ் மக்கள் இலங்கையரசின் அறிக்கையை உள்ளடக்கத்தின் அப்பால் முற்றாக நிராகரிக்கின்றனர். அதன் அடிப்படையில் பல்வேறு தமிழ் அமைப்புகள் தமது அரசியல் வேலைத்திட்டங்களை சிறப்பாக முன்னெடுக்கின்றனர். ஐ.நா. முன்றலில் ஈகைச்சுடர் முருகதாஸ் திடலில் பல்லாயிரக்கணக்கான ஐரோப்பிய புலம்பெயர் தமிழ்மக்கள் திரண்டு அனைத்துலக சுயாதீன விசாரணையை வலியுறுத்தி தமது குரலை ஓங்கி ஒலிக்கச் செய்தார்கள்.

ஆனால், ஒருசில தமிழ் அமைப்புகள் அமெரிக்காவின் தீர்மானத்தை (இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை உள்ளடக்கி அமைந்திருக்கும்) வரவேற்பதாக அறிவித்துள்ளார்கள். அதாவது ஆகக்குறைந்தளவு போர்க்குற்ற விசாரைணையைக்கூட உள்ளடக்கி எழுதப்படாத அமெரிக்காவின் சுயநலம்கருதி கொண்ட அறிக்கை, ஈழத்தமிழர்களின் மீது இலங்கை அரசு மேற்கொண்ட இனவழிப்பையும் அத்தோடு ஈழத்தமிழர்கள் 60 ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடிப் பெறுவதற்கான சுதந்திரத்தையும் குழிதோண்டிப் புதைப்பதாகவே கருதவேண்டும். ஆரம்பத்தில் இருந்து அனைவராலும் புறக்கணிக்கப்பட்ட இலங்கையரசின் அறிக்கை அமெரிக்காவின் தீர்மானத்தால் அங்கீகாரத்தைப் பெறுகின்றது.

இன்றுவரை எந்தவித தயக்கமும் அல்லாமல் தமது விடுதலை அவாவை தமிழ்மக்கள் நிலத்தில் தெரியப்படுத்தி உள்ளார்கள். தமிழ் "சிவில்" சமூகம் இதை ஆவணமாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அனுப்பியுள்ளது.

இன்றுவரை எந்தவொரு சர்வதேச வல்லரசு நாடுகளின் சுயநல விருப்புக்கும் சிக்காமல் தமது சுதந்திர தமிழீழத்தை அடைவதற்கு நீதியான, உண்மையான, நேர்மையான விடுதலைப் போராட்டத்தையே ஈழத்தமிழர்கள் நடாத்துகின்றார்கள். எந்தவொரு வரலாற்றிலும் இடம்பெறாத உன்னதமான போராட்டமே ஈழத்தமிழர்களின் போராட்டம். அதற்காகவே தமது உயிர்களை முள்ளிவாய்க்காலில் எமது உறவுகள் அர்ப்பணித்தார்கள் அதனூடாகத் தமது உன்னத இலட்சியத்தை உயிர்வாழ

வைத்தார்கள். அந்த உன்னத இலட்சியத்தை அடைவதற்கே உலகத் தமிழ்மக்கள் தமது ஆணை-யையும் ஆதரவையும் கொடுத்தார்கள்.

அரசியல் செய்யவேண்டும், சர்வதேசம் எம்முடன் பேசவேண்டும் என்ற காரணத்தால் நாம் உண்மைகளை மறைக்கமுடியாது அநீதியை ஏற்கமுடியாது. அதன் பொருட்டு பின்விளைவுகளை ஆராயாமல் அவசரமாக எடுக்கப்படும் முடிவுகள் ஈழத்தமிழர்களின் விடுதலைப் பேரவாவை சவப்பெட்டிக்குள் தள்ளிவிடும். "நினைப்பது கிடைக்கவில்லை என்பதால் கிடைப்பதை எடுப்போம் என்பதற்கு" இது விளையாட்டுப்பொருள் அல்ல. இது ஒரு இனத்தின் இருப்புக்கான விடுதலைப் போராட்டம்.

வரலாறு எம்மை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. எமது தேசம், வரலாற்றில் என்றுமில்லாதவாறு மும்முனை நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. ஆயினும், உரிமைக்கான போராட்டம் எக்கட்டத்திலும் கைவிடப்படமுடியாதது. போராடுவோம்! இறுதி மூச்சுள்ளவரை, இலட்சியப் பயணத்தை தொடர்வோம் போராடுவோம்! விடுதலைக்கான பாதையென்பது வீழ்ச்சிகளால் விலகுவதோ, துரோகங்களால் துவண்டுவிடுவதோ அல்லது பின்னடைவுகளால் பின்வாங்கி விடுவதோ அல்ல. மாறாக, தடைகளைத் தகர்த்து விழ விழ விடாமுயற்சியுடன் எழுவது.

பேரவலம், துக்கம், தோல்வியென்ற சொற்களைப் பயன்படுத்தி முள்ளிவாய்க்கால் வரலாற்றை நாம் குறைத்துக் கூறிவிடமுடியாது. எமது மக்கள் கண்டிராத பேரவலங்களோ, துக்கங்களோ அல்ல முள்ளிவாய்கால். எமது மண்ணிலே காலாகாலம் அவற்றைக் கண்டுபழகியவர்கள் எமது மக்கள். நாம் மிக நீண்ட வரலாற்றைக்கொண்ட சுதந்திரத்திற்காகப் போராடுகின்ற ஒரு தேசிய இனம். எனவே, முள்ளிவாய்க்காலென்பது தமிழர் வீரத்தின் குறியீடாகப் பதிவுசெய்யப்படவேண்டும். அது ஈழத்தமிழரின் உரிமைப்போரட்டத்தை மற்றுமொரு பரிமாணத்திற்கு அழைத்துச்செல்கிறது. அந்தப் பரிமாணத்தினூடாக, எமக்குக் கிடைத்த வழிகளில் நாம் போராடவேண்டும். உண்மையில் முள்ளிவாய்க்கால் என்பது ஒரு முடிவல்ல் அது எமது ஆயுதப் போராட்டத்திற்குத்தான் காலவரையறையற்ற மௌனிப்பைக் கொடுத்ததேயொளிய எமது உரிமைப்போராட்டத்திற்கான முடிவைக்கொடுக்கவில்லை. நாம் இன்றும் எமது உரிமைக்காக ஏதோவொருவடிவில் போராடிக்கொண்டுதான் இருக்கிறோம். எமது சுதந்திர இலட்சியம் நிறைவேறும்வரை எமக்குக் கிடைத்த வழிகளில் நாம் தொடர்ந்து போராடுவோம்.




# Importas Cash & Carry

Subash Purity of Taste

Kings

Niru BRAND

Suryaa

Maliban Inspired by goodness...

Elakkia

PG tips

TRS ASIAS FINEST FOODS

Patak's Original

Rubicon

RENUTÉ 100% PURE CEYLON TEA

SOLO IMPORTERS & DISTRIBUTOR FOR
**SUBASH, KINGS, NIRU, SURYAA, MALIBAN, ELAKKIA AND RUBICON**

**OVER 20 YEARS LEADER IN SWISS ETHNIC MARKET**

**BIGGEST ASIAN SHOP IN ZÜRICH**

***Importas Cash & Carry***
***(80m away From Letzi Park)***
***Baslerstrasse 102***
***8048 Zürich***

***Tel: +41 43 343 03 55***
***Fax:+41 43 343 03 56***
***Email: info@importas.ch***
***Web: www.importas.ch***




# சிங்கள ஊடகம் சொல்ல வருவது என்ன?

த ஐலண்ட் என்னும் கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரி அதன் 21.04.2012 ஆசிரியத் தலையங்கத்தில் அண்மையில் சில முதலைக் கண்ணீர்த் துளிகளை வீணடித்துள்ளது. அவற்றில் சில இதோ!

அண்மையில் ஜெனிவாவில் இடம் பெற்ற நிகழ்வுகள் பற்றி த.தே.கூ. தலைவர் இரா. சம்பந்தன் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரையில் இருந்து சில பகுதிகளை இங்கு பிரசுரிப்பதை இட்டு நாம் மன்னிப்புக் கேட்கப் போவதில்லை.

ஏனைய முன்னணி ஊடகங்களைப் போன்றே நாமும் த.தே.கூ. புலிகளின் பினாமிகள் எனச் சில வேளைகளில் முத்திரை குத்தி உள்ளோம். ஏனென்றால் நீண்ட நெடிய போரின் போது அப்படித்தான் நாம் அவர்களைப் பார்த்தோம்.

ஆனாலும் அவர்களும் புலிகளால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதை நாம் மறந்து விடவில்லை. குறிப்பாக சிறந்தவரும் சமகால அரசியல் வாதிகளில் புத்திக்கூர்மை படைத்தவருமான நீலன் திருச்செல்வம் புலிகளால் கொல்லப்பட்ட போதும் அரச பாதுகாப்புக்கு மத்தியில் திருச்செல்வத்தின் மரணச் சடங்கில் பங்கேற்று உரையும் ஆற்றியதையும் மறந்து விடவில்லை.

இந்த நாட்டில் மிகவும் அவசரமாகவும் அவசியமாகவும் தேவைப்படும் இணக்கமும் சமத்துவமும் ஏற்பட வேண்டும் என்றால், எல்லா மக்களும் திறந்த மனதுடனும் இதய சுத்தியுடனும் சம்பந்தன் மிக அழுத்தமாகத் தெரிவித்த தமிழரின் கருத்தியலைக் கண்டிப்பாகச் செவி மடுக்க வேண்டும்.

இப்பொழுது 1956ல் உருவாக்கப் பட்ட சிங்களம் மட்டும் என்ற சட்டம் ஒரு மிகப் பெருந் தவறு எனப் பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

தவறு என்று தெரிந்தே அவர் போதுமான வலுவான சிங்களத் தேசிய அதிகார உணர்வலையில் ஏறிச் சவாரி செய்து தப்பைச் சரியென எலும்புக்குள் ஊட்டி வெற்றி கண்டார்.

உண்மையில் அவர் சிங்களம் மட்டும் ஆனால் தமிழும் கூடவே என்ற முயற்சியில் பண்டா செல்வா ஒப்பந்தத்தைச் செய்து அமுல்படுத்த முனைந்தமை அவரது மற்றும் ஒரு எத்தனிப்பு.

ஐ.தே.க.வின் சுய தேவை அரசியல் அதனைச் சட்டப் புத்தகத்தில் இடம்பெற விடாது தடுத்தது. அதற்கான விலையை டட்லி செல்வா ஒப்பந்தம் உருவான போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் அணிகளும் திருப்பிக் கொடுத்துச் சரி செய்தன.

சிங்கள அரசு எனச் சிலர் கூறிக்கொள்ளும் அரசின் செய்த குற்றம் செய்யாத குற்றம் என்பவற்றால் இந்த நாட்டுத் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டனர் என்ற உண்மையிலிருந்து தப்பிக்க முடியாது. 1983 ஜூலையில் நடந்த தமிழருக்கு எதிரான கலகம் ஒரு மிகச் சிறந்த உதாரணம்.

அவை அப்போதைய அரசின் ஒரு தரப்பால் தொடக்கப்பட்டது எனச் சர்வதேச ரீதியில் நாட்டின் பெருமைக்குக் களங்கம் ஏற்பட்டது எனச் சிலர் நம்புகிறார்கள். ஜெயவர்த்தனா வெளிப்படுத்தாத காரணங்களின் நிமித்தம் அவற்றை அவர் முளையிலேயே கிள்ளாது விட்டார்.

ஒருவேளை அவர் ஆயுதப் படை மற்றும் பொலிஸ் படைகளின் சகாக்களுக்கு வடக்கில் நடந்த சம்பவங்களால் ஏற்பட்ட கோபம் காரணமாகத் தமது ஆணைக்குக் கட்டுப்பட மறுக்கலாம் என்ற பயம் காரணமாக இருக்கலாம்.

என்ன நடந்தது என்பது பலரும் அறிந்தவை என்பதால் இங்கு மீளக் குறிப்பிடத் தேவையில்லை. சிங்களவரின் தமிழர் மீதான

அன்பு நிறைந்த செயற்பாடுகள் சிங்களவர் தமிழரை வெறுக்கவில்லை என்பதை ஆதாரப்படுத்துகின்றன. ஆதாரம் தேவை என்றாலும் தரமுடியும்.

1983 கறுப்பு ஜுலை நாட்டிலிருந்து தமிழரின் மிகப் பெரும் இடப் பெயர்வுக்கு வழி செய்தது. இடம் பெயர்ந்தவர்களில் பலரும் அரசியல் அகதிகள் என்பதை விடப் பொருளாதார அகதிகள் என்பதே உண்மை.

உண்மை என்னவென்றால் இந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்த சிங்கள இளைஞரை விடவும் வடக்கு கிழக்கு இளைஞர் கூடுதலான பாதிப்புகளுக்கு உள்ளானவர்கள் அல்ல என்பதே உண்மை.
ஐரோப்பா வட அமெரிக்க நாடுகளில் குடியேற வாய்ப்புகளைப் பற்றிக் கொண்டதால் சம்பந்தன் குறிப்பிட்ட 10 இலட்சம் புலம் பெயர் தமிழர் சமூகம் உருவாயிற்று.

புலம் பெயர் சமூகம் புலிகளின் மிரட்டல் புரட்டல் மூலம் நிதிப் பலம் ஆட்பலம் கொண்ட தளமாக இருக்கிறது. இந்தியாவும் வேறு பல நாடுகளும் புலிகளைத் தோற்கடிக்க உதவின என்று த.தே.கூ.தலைவரின் பேச்சு உண்மையானதுதான்.

ஒரு காலகட்டத்தில் இந்தியா புலிகளுக்குப் பயிற்சியும் பயிற்சித் தளங்களை இலவசமாகக் கொடுத்தது என்பதையும் கூறாது அவர் மறைத்து விட்டார். ஆனாலும் எப்போதும் நாம் பழையதைப் பேசி வாழ முடியாது.

உலகத்துக்கு நாம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வந்தபின்னர் நாம் மீளாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரை காத்திருக்கச் சொல்லியிருந்தோம். ஆனால் இடைக்கால அறிக்கை கிடைத்து ஓராண்டு ஆகியும் இறுதி அறிக்கைக்காகக் காத்திருக்கிறோம்.

வாதாடவோ மயிரைப் பிரித்துப் பார்ப்பதற்கோ ஏற்ற தருணம் இதுவல்ல. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் டக்லஸ் தேவானந்தாவும் ஈ.பி.டி.பியும் ஆளும் கூட்டணியில் இருப்பதால் த.தே.கூ. தமிழரின் பரவலான ஆதரவைப் பெற்றது எனலாம். கருணாவும் பிள்ளையானும் பெரிதும் ஆளும் அரசாகவே உள்ளனர். கே.பி இன்று அரசின் கண்காணிப்பில் ஆட்சியாளரின் நண்பராக இருக்கிறார்.

சம்பந்தன் தமிழரசுக் கட்சியின் பழைய தூணாகத் தமது வாழ்வின் அந்திம காலத்தில் இருக்கிறார். அரசோடு உறுதியாக இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகக் கூறிவருகிறார். மேலும் தம்மால் முடிந்த வரை பேச்சுகளைத் தொடர சாதகமான அத்தனையும் செய்துவிட்டதாகக் கூறுகிறார்.

இன்று பேச்சுகள் சிக்கலில் உள்ளது என்றால் அதற்குக் காரணம் நாங்கள் அல்ல நீங்களே என்கிறார். அவருடைய கூற்றின் உண்மைத் தன்மை பற்றிக் கருத்துக் கூறும் தகமை எமக்குக் கிடையாது. ஆனால் சம்பந்தனின் நெடுநாள் அனுபவத்தைப் பயன்படுத்துவது அனுபவம் குறைந்தவர்களோடு கையாள்வதை விடவும் இலகுவானது என நாம் நம்புகிறோம். காத்திரமான சாதக முடிவை உடனடியாக எடுக்க வேண்டிய தருணம் இது.

மேற்படி கட்டுரையைப் படித்த ஒரு நண்பர் இதனை ஒரு நேர்மையான பார்வை எனப் பாராட்டிக் கருத்தைத் தெரிவித்துள்ளார். மேலே காணப்பட்ட ஆங்கிலத்தில் வெளியான ஆசிரியத் தலையங்கத்தில் எந்த ஒரு இடத்திலும் இன்றைய அரசின் தமிழருக்கு எதிரான எந்த ஒரு செய்தியையும் கவனத்தில் எடுக்கவில்லை. அது தெரிவித்த ஒரே ஒரு விடயம் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதந்துரைகளும் ஐ.நா.வின் தீர்மானமும் ஊறுகாய் போல் தொட்டுக் காட்டி உள்ளது.

மற்றப்படி சிங்கள அரசுகளோ மக்களோ தெரிந்து தமிழருக்கு எந்த ஒரு தீங்கும் செய்யவில்லை. படையினருக்கு வடக்கில் நேர்ந்த கோபம் காரணமாக 1983 கலவரம் நடந்தது. அதனைத் தமிழர் பயன்படுத்தி பொருளாதார அகதிகளாக இடம் பெயர்ந்து போரை நடத்தினார்கள் என்பதோடு சரி.

எண்ணற்ற தமிழ் மக்களின் எந்த ஒரு கைதும் காணாமல் செய்ததும் இன்றும் தொடரும் வெள்ளை வான் கடத்தல் கொலைகள், செம்மணி முதல் முள்ளி வாய்க்கால் வரை நடத்திய படு கொலைகள் இன்று தமிழ் முஸ்லிம் மக்கள் வாழ்விடங்களையும் கோயில் மசூதிகளை இழந்து நிற்கும் நிலையும் சிங்களத்தின் பார்வையிலும் நினைவிலும் இடம் பெறவில்லை.

இதுதான் சிங்களத்தின் மூளைச் சலவை இயந்திரத்தின் செயற்பாடு. சம்பந்தனும் த.தே.கூ. இருக்கும் போதே ஏதாவது வகையில் ஏதோ ஒரு தீர்வைக் காணச் சொல்கிறது சிங்களத்தின் அறிவுச் சமூகம்.

இத்தகைய பெருந்தன்மைக்கு நாம் கொடுத்து வைத்தவர்கள் எனத் தமிழர் கருதும் நிலையை ஏற்படுத்த நினைக்கிறது சிங்களம். நாம் என்ன செய்யப் போகிறோம்?

Super Market
JALLAHAM GmbH
யாழகம்

இலங்கையில்லிருந்து நேரடியாக இறக்குமதி
செய்யப்படும் உடன் மீன்வகைகள்.

இலங்கை இந்திய டொமினிக்கன்
நாடுகளில்லிருந்து இறக்குமதி
செய்யப்படும் உடன்மரக்கறிவகைகள்.

மிகக்குறைந்த விலையில்
பொருட்க்களைப் பெற்றுக்கொள்ளலாம்.




100CHF மேல்
பொருட்கள்வாங்கினால்
5KG அரிசி
இலவசம்




குறை இருப்பின் எம்மிடம் சொல்லவும்
நிறை இருப்பின் நண்பரிடம் சொல்லவும்

Avenue de Marges 88
1004 Lausanne
021 624 38 10

Bernstrasse 24A
3072 Ostermundigen
031 931 14 14

## பொறுமை

பெண்ணின் பொறுமை
வெற்றியின் படிக்கட்டு
ஆணின் பொறுமை
தோல்வியின் அத்திவாரம்!

## கவிதை...

கவிதையில்
பொய்
வருடிப் போகும்
உண்மை
வலித்து நிற்கும்!

## ஏன்?...

ஐம்பது சதம் கீரை வாங்க
ஆயிரம் பேரம் பேசுகிறார் அப்பா
ஐயாயிரம் ரூபா சேலையை
அப்படியே வாங்குகிறார் அம்மா



## பேறு..

பிரசவ வலியால்
குழந்தை பேறு
காதலின் வலியால்
கவிதைப் பேறு!

## உன்னால்...

முதுமையிலும் நான்
முழுமாத கர்ப்பிணி
நிரம்பியது என்
கரு அறை அல்ல
இதய அறை!

## தமிழர்...

அவயவம் இழப்பினும்
அசையா நம்பிக்கையோடு
களத்தில் நம்மவர்....
எல்லாம் இருந்தும்
எட்டிக்குப் போட்டியாய்
புலத்தில் எம்மவர்..

## காதலிப்பது...

ஆண்களைக் காதலிப்பது
பாமரப் பெண்கள்
ஆண்கள் காதலிப்பது
பல கலைப் பெண்களை!

# விழியோரம் வலி!...

தொகுப்பு: தமிழ்விழி


# அகரக் கவிக்களம்...

**பெயர்...**

எல்லாம் இழந்து சொந்த
மண்ணிலே
எனது குடும்பம் 'அகதி'
எல்லாம் இருந்தும் இந்த
மண்ணிலே
என்பெயர் 'ஏதிலி'

**மனைவி...**

ஏழையின் மனைவி
வெளியே அழுவாள்
கோழையின் மனைவி
உள்ளே அழுவாள்!



**நகை...**

உடல் அணிந்திருக்கிறது
பொன் நகை
முகத்தில்
தொலைந்திருக்கிறது
புன்னகை

**வாழ்க்கை...**

'வாழ்க்கை வாழ்வதற்குத்தான'
வாழ்ந்தவர் யார்..?

**அகதி...**

புலத்தில் நாம்
எல்லோரும் அகதிகள்
உன் அகத்தில்
நான் மட்டும் அகதி!

அன்பிற்கினிய அகரம் வாசகர்களே...!
உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை, 3 - 6 வரிகளுக்கு
மேற்படாமல் எழுதி அனுப்புங்கள்..!
சிறந்தவையாகத் தெரிவுசெய்யப்படும்
கவிதைகள் அகரத்தின்
கவிதைத்தொடரில் பிரசுரிக்கப்படும்.


editor@akaram.eu

tMedia Network
PO BOX 4153, 59037 Hamm
Germany




# கிழக்கு மாகாணசபையின் அடுத்த முதல்வராக ஒரு முஸ்லிம்?

இலட்சுமணன்

கிழக்கு மாகாணசபையின் இரண்டாவது தேர்தல் தொடர்பாக அண்மைக் காலமாகக் கதைகள் அடிபடத் தொடங்கியுள்ளன. இந்நிலையில் அமையப் போகும் அரசின் முதலமைச்சராக ஒரு தமிழரா அல்லது முஸ்லிமா பதவி வகிக்கப் போகின்றார் என்ற விவாதங்கள் ஆரம்பமாகியுள்ளன.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராகத் தமிழர் ஒருவர் இருக்க வேண்டும் என்பதில் தமிழ் மக்களும் தமிழ் அரசியல்வாதிகளும் உறுதியாக இருக்கின்றனர். அதேவேளை, முஸ்லிம் ஒருவரே அப்பதவியை வகிக்க வேண்டும் என முஸ்லிம் மக்கள் விரும்புகின்றனர்.

முதலமைச்சர் குறித்த கருத்தை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், சிறுவர் மற்றும் மகளிர் விவகாரப் பிரதி அமைச்சருமான எம்.எல். ஏ. எம். ஹிஸ்புல்லாவே கடந்த வருடத்தில் முதன்முதலில் பிரஸ்தாபித்திருந்தார். எனினும், அவரது கருத்து அப்போது சூடு பிடித்திருக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த மார்ச் மாதத்தில் அக்கரைப்பற்றில் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா கிழக்கில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக வந்தாலும் ஏற்றுக் கொள்வோம் என்ற கருத்தை வெளியிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து சூடு பிடிக்கத் தொடங்கிய கிழக்கு மாகாண சபை தேர்தல் தொடர்பிலான வாதங்கள். எதிர்வரும் ஜூன் மாத நடுப்பகுதியில் கிழக்கு மாகாண சபை கலைக்கப்படலாம் என்ற நிலை வரை வந்துள்ளது.

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை விரைவில் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டிருப்பதாகவும், இதில், சிறி லங்கா முஸ்லீம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமை அரசின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பல்வேறு ஊடகங்களிலும், தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால் இவருக்கு எதிராக பல எதிர்ப்புக் குரல்கள் எழுந்த நிலையில், அவர் கூட இதனை மறுத்திருந்தார். அது வெறும் புரளி என்பது அவரது கருத்தாக இருந்தது.

கிழக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் அடுத்த வருடம் மே மாதம் முடிவடையவுள்ள நிலையில் கிழக்கு மாகாணசபையைக் கலைத்துவிட்டு முன்கூட்டியே தேர்தலொன்றுக்கு செல்வதற்கு ஜனாதிபதி முடிவெடுத்திருக்கிறார் என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

ஆரம்பத்தில் மாகாண சபைக் கலைப்பு தொடர்பில் தற்போதைய முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுடன் எந்தவிதமான கலந்துரையாடலும் நடத்தப்பட்டிருக்கவில்லை. ஆனால், மே மாத ஆரம்பத்தில் கொழும்புக்கு சென்ற பிள்ளையான், (அழைக்கப்பட்டாரா அல்லது இவராகச் சென்றாரா என்பது தெரியவில்லை) ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுடன் கிழக்கு மாகாண தேர்தல் பற்றிக்

கலந்துரையாடிய பின்னர் மட்டக்களப்புக்குத் திரும்பியிருப்பதாகவும், அடுத்த ஆகஸ்ட் மாதத்தில் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் என்றும் நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் முஸ்லிம் தரப்பிலிருந்து முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடக் கூடியவர் என ஏறாவூரைச் சேர்ந்த அலிசாஹிர் மௌலானா, அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஏ.எல்.எம்.அதாவுல்லா, ஓட்டமாவடியைச் சேர்ந்த அமீர் அலி, கண்டியைச் சேர்ந்த ரவூப் ஹக்கீம், காத்தான்குடியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா எனப் பெரும் பட்டியலே வெளிவந்த வண்ணமிருக்கிறது.

கிழக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தலில் தமிழ் மக்களின் பிரதான அரசியற் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் பங்குபற்றக் கூடிய சூழல் கிழக்கில் இருக்கவில்லை. அதுதவிர, வடக்கு கிழக்கு பிரிக்கப்பட்டிருந்த நிலையில் போட்டியிடுவதில்லை என்ற நிலைப்பாட்டையும் அக்கட்சி கொண்டிருந்தது. எனினும், விடுதலைப் புலிகள் இல்லாத தற்போதைய நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு இத் தேர்தலில் போட்டியிடும் என எதிர்பார்க்கப் படுகின்ற போதிலும் முதலமைச்சர் வேட்பாளராக யார் அறிவிக்கப்படுவார் எனத் தெரியவில்லை. தற்போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ள பா. அரியநேத்திரன், பொன் செல்வராஜா, சீ. யோகேஸ்வரன் ஆகியோரில் ஒருவர் அல்லது அம்பாறை மாவட்ட முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன், திருகோணமலை மாவட்ட முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினர் கி. துரைரெட்ணசிங்கம், மட்டக்களப்பு மாவட்ட முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினர் கி. துரைராஜசிங்கம் ஆகியோருள் ஒருவர் அல்லது புதியவர் ஒருவர் நிறுத்தப்படக் கூடும்.

மறுபுறம் வட கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜ பெருமாள் கிழக்கு தேர்தலில் போட்டியிடுவார் என்றொரு தகவல் வெளிவந்து பின்னர் அது அவரது கட்சி சார்பில் மறுக்கப்பட்டது.

அதே நேரம், கிழக்கின் தற்போதைய முதலமைச்சர் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி இந்தத் தேர்தலில் போட்டியிடும் எனவும் முதலமைச்சர் வேட்பாளராக நானே இருப்பேன் என்றும் கருத்து வெளியிட்டுள்ளார். அதேவேளை, பிரதியமைச்சர் கருணாவே போட்டியிடுவார் என்றும் சில தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

கிழக்கில் உள்ள சனத்தொகைப் பரம்பலின் அடிப்படையில் பார்க்கும்போது மூன்று இனங்களில் எதுவும் தனித்து போட்டியிட்டு வெற்றிபெறும் வாய்ப்பு அரிதாகவே உள்ளது, அதனால் முஸ்லிம் தரப்புடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து தமிழர்கள் போட்டியிட்டாலேயே மாகாண சபையைக் கைப்பற்ற முடியும். சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய அரசில் பங்காளிக் கட்சியாக உள்ள நிலையில் அத்தகைய ஒரு இணக்கப்பட்டுக்கான சாத்தியங்கள் குறைவாகவே உள்ளன. ஆனால், முதலமைச்சர் வேட்டபாளர் யார் என்பதில் ஏற்படக் கூடிய மோதல் சிலவேளைகளில் தற்போது உள்ள அணிகளிடையே பிளவுகளை உருவாக்கக் கூடும். அப்போது முஸ்லிம் காங்கிரசுடன் ஒரு இணக்கப்பாட்டை எட்டுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகலாம். மும்முனைப் போட்டி தவிர்க்க முடியாத நிலை உருவானால் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்வதோ கூட்டணி அமைப்பதோ தவிர்க்க முடியாத ஒன்றாகலாம்.

இந்நிலையில், இது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரசுடன் ஏற்கனவே பேச்சுக்களை நடத்தியுள்ளதாகவும், மாகாண சபைக் காலத்தில் தமிழ், முஸ்லிம் என முதலமைச்சர் பதவிக்காலத்தை பங்கு போடுவது பற்றி ஆலோசிக்கப் பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தல் இந்த வருடத்தில் நடைபெறும் என்று உறுதியாக அரச தரப்பிலிருந்து தகவல்கள் வெளியிடப்படவில்லை. ஆயினும், அரசாங்கத்தின் வெற்றியையே எதிர்பார்க்கும் ஆளும் கட்சி கிழக்கில் முஸ்லிம்களின் பெரும் ஆதரவைப் பெற்ற ஹக்கீமை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதன் மூலம் வெற்றிவாய்ப்பு அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது.

இது தொடர்பில், ஜனாதிபதி சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலருடன் ஆலோசித்து வருகிறார் என்றும் இத்தகவலை அறிந்த அரசுடன் இணைந்துள்ள ஏனைய முஸ்லிம் கட்சிகள், முதலமைச்சர் வேட்பாளராக ஹக்கீம் நிறுத்தப்படுவதை விரும்பவில்லை என்றும் அறிய முடிகின்றது. இது தொடர்பில் ஜனாதிபதி தமது கட்சிகளின் ஆலோசனைகளை உள்வாங்கியே இறுதி முடிவை எடுக்கவேண்டும் என்று முஸ்லிம் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

கிழக்கில் முஸ்லிம்களின் பெருந்தலைவரான எம்.எச்.எம்.அஷ்ரப்பைத் தலைவராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதே சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ். அக்கட்சி தற்போது பல துண்டுகளாக உடைந்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கட்சி என்று அமைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்நிலையில், சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெற்ற அக்கரைப்பற்றில் தற்போது ஒரு பலம் பெற்ற அரசியல்வாதியாகவும், அஷ்ரப்பிற்குப் பின்னர் அரசாங்கத்துடன் மிகுந்த நெருக்கத்தை ஆரம்பத்திலிருந்தே பேணி வருகின்றவர் என்ற வகையிலும் அதாவுல்லாவே முதலமைச்சர் வேட்பாளருக்குப் பொருத்தமானவர் என அவரது ஆதரவாளர்கள் கூறிவருகின்றனர்.

கடந்த தேர்தலில் அரசின் சார்பில் போட்டியிட்டு தற்போதைய பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா அதிகமான வாக்குகளைப் பெற்ற போதிலும் ஜனாதிபதியின் உறுதியான முடிவின் காரணமாகவே கிழக்கு மாகாண சபையின் முதல்வராக பிள்ளையான் வரமுடிந்தது. ஜனாதிபதியின் அந்த முடிவிற்கு அவர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தும் இருந்தார். அரசின் விருப்பமும் உறுதியான நிலைப்பாடுமான வடக்கு கிழக்கு இணைப்பின் தீவிர எதிர்ப்பாளர் அவர். வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டால் அரசுடன் இருக்கும் பிணைப்பை அறுத்துக் கொள்வேன் என்று பகிரங்கமாகவே அறிவித்தவர் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா. அதனால் அதற்கு ஆதரவளிப்பவர் என்றவகையில் ஹிஸ்புல்லாவை அரசாங்கம் முதன்மைப் படுத்தும் என்றும் நம்பப்படுகிறது.

இதில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் என்கிற ரி.எம்.வி.பி இன் நிலையே பரிதாபகரமானது. அவர்கள் தொடர்பான அரசாங்கத்தின் தேவை முடிந்துவிட்ட நிலையில் அக்கட்சியை மையப்படுத்தி எத்தகைய முடிவையும் மகிந்த ராஜபக்ஷ எடுப்பார் என எதிர்பார்க்க முடியாது.

மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற போரில் உயிர்கள் உடைமைகள் மாத்திரமன்றி கல்வி, பொருளாதாரம் அபிவிருத்தி என அனைத்தையும் இழந்து நிற்கும் தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளை ஓரளவுக்கேனும் நிறைவேற்றிக் கொள்ள மாகாணசபைத் தேர்தலைப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கையில் முஸ்லிம் தரப்பு ஏன் இப்படி மல்லுக்கு நிற்கிறது எனத் தமிழ் மக்கள் விசனம் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக எதிர்காலத்தில் தமிழ் இனத்தை சேர்ந்தவர் வந்தால் ஏற்றுக் கொள்வோம். முதலமைச்சர் தெரிவென்பது மக்களாலேயே மேற்கொள்ளப்பட்ட வேண்டும். அதனை யாரும் சூடாக்க கூடாது. கிழக்கு முதலமைச்சர் முஸ்லிமா அல்லது தமிழரா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் என்ற அதாவுல்லாவின் கருத்து ஒரு வகையில் யதார்த்தத் தன்மையுடனும் விட்டுக் கொடுப்புடனும் செயற்படும் ஒருவருடைய கருத்தாகவே பார்க்கப்படுகிற

கிழக்கு மாகாணத்தில் தற்போது மூன்று இனங்களும் ஏதோ ஒரு வகையில், ஒற்றுமையாக வாழ்கின்றன. இந்நிலையில், மாகாணத்தில் செல்வாக்குடைய மக்களின் ஆதரவை பெற்ற எவரும் முதலமைச்சராக வர முடியும். ஆனால், தமிழரா முஸ்லிமா என்ற போட்டியில் புதிதாக சிங்களவரை முதலமைச்சராக ஆக்கி விடுவதற்கான வேலையைச் செய்துவிடாதிருந்தால் போதும் என்பதே பலரின் விருப்பமாக உள்ளது.

தமிழர் ஒருவர் முதலமைச்சராக வேண்டும் எனத் தமிழ் மக்கள் நினைத்தால் அதனை ஒற்றுமையாக வாக்களித்தலில் காட்ட வேண்டும். அது கிழக்கின் எதிர்காலத்துக்கு மாத்திரமன்றி ஒட்டு மொத்த தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்திற்கும் அவசியமானதாகும்.



புதிய லைக்காமொபைல் ப்ளஸ் சிம்முடன்!

# Lycamobile

CHF 100.- வரை இலவசம்!

சுவிட்சர்லாந்து

## சர்வதேச அழைப்புக்களுக்கு இணைப்புக் கட்டணம் இல்லை

வீட்டுத் தொலைபேசி + கைத் தொலைபேசி

இந்தியா

கனடா

அமெரிக்கா

சிங்கப்பூர்

CHF 0.01 /min

Lycamobile ப்ளஸ் இல் இருந்து Lycamobile ப்ளஸ் க்கு

CHF 0* /min



| | வீட்டுத் தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| இலங்கை | CHF 0.09 /min | CHF 0.12 /min |
| ஐரோப்பா | CHF 0.01 /min | |

*அனைத்து அழைப்புக்களும் நிமிடக்கணக்கீட்டில் கட்டணம் அறவிடப்படும். லைக்காமொபைல் ப்ளஸ்ஸில் இருந்து லைக்காமொபைல் ப்ளஸ்க்கு ஒரு இணைப்புக்கு 19ரப்பனில் 30 நிமிடம் வரை உரையாடலாம். மேலதிகமாக வரும் ஒவ்வொரு நிமிடத்திற்கும் 19ரப் என்கிற அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும்.

*கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டவை.

மேலதிக விபரங்களுக்கு

www.lycamobile.ch 077 900 01 22
044 555 23 23

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

SBB CFF FFS, Media Markt, Inter Discount, k kiosk, SWISS POST, COOP, Fust, TELEFONCORNER, NAVILLE, Press&web, RELAY

# அடித்த இந்தியாவை அணைக்க வைத்தே தமிழ் ஈழம் பெறப்பட வேண்டும்!



சீதாராமன்

1990 முதல் ஈழம் மலர்ந்தால் மகிழ்வேன் என்ற பல்லவியோடு அரசியல் வண்டி ஓட்டிக் காலம் கழித்தவர்தான் கலைஞர். முன்னர் 4 தடவை தமிழக முதலமைச்சராகத் தமிழ் நாட்டில் கோலோச்சியவர். இன்று சென்ற தேர்தலில் தமிழக மக்கள் கைவிட்ட நிலையில் அரசும் அதிகாரமும் இழந்து அநாதைபோல் சக்கர நாற்காலியில் அரசியலை விடவும் முடியாது தொடரவும் முடியாது தவிக்கிறார்.

எந்த மகனைத் தனக்கு வாரிசாக்க நினைத்து வை.கோ. என்ற திராவிட முன்னேற்ற இயக்கக் கொள்கைக் குன்றை விரட்டினாரோ அந்த மகனான ஸ்டாலினை அரியணை ஏற விடாது தடுக்கிறது அவரது இன்னொரு வாரிசான அழ-கிரி. கழகத்தில் வாரிசு அரசியல் செய்யக் கழகம் என்ன ஆதீனமடமா எனக் கிண்டல் அடித்த பகுத்தறிவு வாதி இன்று அதே வாரிசு அரசியல் சகதிக்குள் புழுவாக நெளிகிறார்.

பதவி ஊழலைப் பெருக்கப் பெரும் பணக்கார முதலையாகிப் பகுத்தறிவுக் கருஞ் சட்டையைக் கழற்றிவிட்டுக் காவித் துண்டோடு காட்சி அளிக்கும் இவர் பேச்சு இப்போது வீட்டிலும் செல்லாது நாட்டிலும் செல்லாது. இத்தகைய பரிதாப நிலை ஏற்படக் காரணமாக அமைந்தது ஈழப் போராட்டமும் அதன் பரிதாப முடிவுமே.

அந்த அழிவுக்கான பழியை அவரால் எந்தப் பிறப்பிலும் நீக்க முடியாது. போரை நடத்துவதில் சிங்களத்தை விட இந்திய அரசின் புலிகள் மீ-தான வக்கிரம் முதன்மையாக இருந்தது என்ற உண்மை இன்று உலகறிந்த இரகசியம். பிரபா-கரன் தனது ஆளுகைக்குள் சிக்காது தமது எதிரி எம்.ஜி. ஆரின் இதயக் கனியாகி விட்டார் என்ற வக்கிர எண்ணம் கலைஞருக்கு இருந்தது ஒருபுறம்.

மறு புறத்தில் சர்க்காரியா ஆணைக்குழுவின் விசாரணை முடிவும் 2001 முதல் மத்திய அரசு அமைச்சர்கள் மூலம் அவரது குடும்பத்தவரின் ஊழல் பணப் பெருக்கம் அவரை மத்திய அர-சின் கொத்தடிமை நிலைக்குத் தள்ளிவிட்ட கொ-டுமை. எனவே போரைத் தடுக்க வல்ல அரசியல் பலம் இருந்தும் மத்திய அரசின் கைத்தடியாய் சிங்களத்தின் சிநேகிதனாய் செயற்பட்டார்.

எனவே ஈழத் தமிழின அழிப்பின் பெரும்பகுதிப் பங்களிப்பு அவரது அரசியலால் சிங்களத்துக்குக் கிடைத்தது. தமிழகத்தில் முத்துக்குமார் தொடக்கிய தீக்குளிப்பு பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அந்த அற்புத தியாகத்தைக் கொச்சைப் படுத்திக் கலைஞர் மேலும் மக்களின் வெறுப்பைத் தேடிக் கொண்டார். அதனைத் தொடர்ந்து பல தீக்குளிப்புகள், மாணவர் ஆர்ப்பாட்டங்களை முறியடிக்கக் கல்வி வளாகங்களை மூடி மாணவர் எழுச்சியைச் சிதைத்தார்.

இவை அனைத்தும் அவரது ஆட்சியை அடி-யோடு சாய்த்து அவரை அநாதை நிலைக்குத் தள்ளி விட்டது. பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல் பதவிக்கு வந்த ஜெயலலிதாவின் செயற்பாடுகள் உள்ளன. இவரது ஆட்சி ஊழல்கள் அதிகார வரம்பு மீறல்கள் பொது மக்களின் காணி அபகரிப்புகள் என ஆயிரக்கணக்கில் அமைச்சர்கள் ஆதரவாளர்கள் கைதும் ஆதரவான அரசு காவல்துறை அதிக-ாரிகளும் பந்தாடப் பட்டதால் காற்றில் பறக்கும் சருகின் நிலைக்கு வந்து விட்டார்.

இன்று இவரோடு இருப்பவர்கள் ஜெயலலிதாவால் பாதிக்கப்பட்ட நக்கீரன் ராஜகோபாலும் பேரா-சிரியர் சுப.வீரபாண்டியனும் பெரியார் திராவிடக் கழக கி.வீரமணியுமே. முன்னர் தாமே கலைத்து விட்ட டெசோ என்ற தமிழ் ஈழ அமைப்பை இன்று தாமே மீளக் கூட்டி ஈழப் பிரச்சனைக்கு ஐ.நா. தலைமையில் ஈழத் தமிழர் மத்தியில் வாக்கெடுப்பின் மூலம் தனித் தமிழ் ஈழம் அமைக்கத் தீர்மானம் நிறைவேற்றி உள்ளார்.

இதே தீர்மானத்தை வரவேற்று தமது தி.மு.க. பொதுச் சபையில் நிறைவேற்றி மத்திய அரசைக் கேட்டுள்ளார். தீர்மானமும் செய்திகளும் இப்படிக் கூறினாலும் அவை முறைப்படி அரசின் கவனத்தில் எடுக்கப்படுமா என்பது சந்தேகமே. ஏனென்றால் ஆட்சியில் இருந்த காலத்தில் கூட தமது சொந்தத் தேவைகள் அல்லாத மற்ற எல்லாமும் கடிதங்களாக எழுதிக் கிழித்த வர-லாறு இவரது.

இப்போது கூட காங்கிரஸ் கட்சியுடன் ஊடல் மட்டுமே அல்லாது அவர்களது கூடல்களில் குறை ஏதும் காண முடியாது. அண்மையில் ஜனாதிபதித் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் மத்திய அமைச்சர் ஏ.கே.அந்தோணி வந்து பேசி ஆதரவு கேட்டுப் போயுள்ளார். கலைஞரும் காங்கிரஸின் தெரி-வையே ஆதரிக்கும் எனக் கூறியதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கலைஞரின் தமிழீழத் தீர்மானம் சரிந்து போன தமது ஆட்சியை மத்திய அரசிலாவது நிறுத்த வேண்டும் என்ற ஆதங்கம். அதற்குக் காங்கிரஸ் கட்சியோடு ஒட்டு என்ற தோற்றம் வாக்கு வேட்டையைப் பாதிக்கும் என்ற பயம் ஒரு புறம். எனவே அதற்கு மாற்று வைத்தியமாகத் தமி-ழீழக் கோரிக்கைத் தூபம் போட்டு வாக்காள மக்களை அரோகரா போட வைத்து விடலாம் என்பது ஒன்று. மற்றது காங்கிரஸ் கட்சியைத் தனது கைக்குள் வைத்திருக்க வேண்டிய தேவை. இவை இரண்டும் இல்லை என்றால் தி.மு.க. அடிமட்டத் தொண்டர் படையை முழுமையாக இழக்கும் ஆபத்து.

உடனடி ஆபத்து ஏதும் ஏற்படாவிட்டால் வருகிற ஆண்டில் மத்திய அரசுக்கான பொதுத் தேர்தல் வருகிறது. அதில் வெற்றி பெற்றுவிட வேண்டும் என்ற தவிப்பு காங்கிரஸ். தி.மு.க. இரண்டுக்குமே இரத்தக் கொதிப்பை ஏற்றி உள்ளது.

இதனிடையே ஜெயலலிதாவின் மிகப் பாரி-ய பத்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டு பல வெளிநாட்டு முதலீட்டாளர்களின் மத்தியில் திறம்பட உரையாற்றி நம்பிக்கை ஒளியை ஏற்றிவிட்டுள்ளார்.

இதில் யேர்மன் டைம்லர் கார் நிறுவனம் பாரிய முதலீட்டைச் செய்கிறது. நிமிடத்துக்கு ஒரு காரும் 75 விநாடிகளில் பார ஊர்தியும் என்ற ஜெயலலிதாவின் அறிவித்தல் வெளி நாட்டு முதலீட்டாளர் மத்தியில் கூறியதை வெறும் பிரச்சாரமாக எடுக்க முடியாது. நாளெல்லாம் வறுத்தெடுத்த மின் தட்டுப்பாடு காற்றாலைகளில் போதிய காற்று வீசுவதால் கடந்த சில நாட்களாக மின் வெட்டு என்ற பேச்சின்றி மக்கள் நிம்மதி காண்கிறார்கள்.

ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் திகிலூட்டும் வகையில் அமைவதால் எவராலும் சரியாகக் கணிப்பிட முடியாத புதிராக உள்ளார். சசிகலா மீண்டும் வந்தாலும் அவரது எல்லைகள் குறுப்பட்டு விட்டதாகச் செய்திகளும் நிகழ்வுகளும் கட்டியம் கூறுகின்றன. மத்திய அரசும் காங்கிரஸ் கட்சியும் அவரைக் கட்டுக்குள் வைக்க முயல்வது தெரி-கிறது. அவற்றை வெல்வது அவரின் தனியான திறமையில் தங்கி உள்ளது. இதுவரை அவரின் செயற்பாடு மெச்சும் படியாகவே உள்ளது.

இப்போது தமிழகத்தில் செயற்படும் ஈழத் தமி-ழர் ஆதரவுத் தளங்கள் ஒன்றாகச் செயற்பட்டுக் கலைஞரை அவர் வழியில் இழுத்துப் போய் இந்திய அரசு ஐ.நா.வில் இத்தீர்மானத்தை அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்னரே தாக்கல் செய்ய வைத்து அதனை இந்தியாவே ஐ.நாவில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

அடித்த இந்தியாவை அணைக்க வைத்தே தமிழ் ஈழம் பெறப்பட வேண்டும்.




# KB intercom

**CyberCafe,**
**Carte téléphonique,**
**Alimentation générale,**
**Kiosque, Cigarette,**
**Western Union,**
**Ticket Booking**

WESTERN UNION
MONEY TRANSFER

மிகக் குறைந்த
விலையில் அனைத்து
நாடுகளுக்குமான
தொலைபேசி
அட்டைகள்!

iEasyTravels
www.ieasytravels.com



**தொடர்புகளுக்கு:**

உரிமையாளர்: U. KARTHIGESU

Av des Alpes 40, 1820 Montreux, Switzerland

Tel.: 021 961 27 16 Fax: 021 961 27 19 Natel: 079 681 56 44

சங்கத் தமிழன்
www.sangatamilan.com



# தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பு செல்லுமா?

-ஆதவன்

இனநெருக்கடிக்குத் தீர்வைக்காணும் நோக்கத்துடன் எனக் கூறி அரசாங்கத்தினால் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்லுமா?

கொழும்பு அரசியல் மற்றும் இராஜதந்திர வட்டாரங்களில் பிரதான கேள்வியா இன்றிருப்பது இதுதான்!

தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்லவேண்டும் என இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழுத்தம் கொடுத்துவருவதாக சில செய்திகள் கடந்த வாரத்தில் வெளியாகியிருந்தது. இதனால், தெரிவுக்குழுவுக்கான தமது உறுப்பினர்களின் பெயர்களை அரசாங்கம் பிரேரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்தச் செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தச் செய்தியை மறுத்திருந்தார். இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ தமக்கு இது தொடர்பில் எந்தவிதமான அழுத்தத்தையும் தரவில்லை எனவும் பேட்டியொன்றில் சுமந்திரன் குறிப்பிட்டிருக்கின்றார். இதனைவிட, அவர் தெரிவித்திருக்கும மற்றொரு கருத்தும் முக்கியமானது:

"அரசாங்கத்துடன் நாம் நடத்தும் பேச்சுக்களின் போது, ஏற்படக்கூடிய இணக்கப்பாட்டை பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குக் கொண்டு செல்வது என்பதுதான் எம்முடைய நிலைப்பாடு. அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்திலேயே நாம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் செல்வோம். வெறும் கைகளுடன் தெரிவுக்குழுவுக்குச் செல்ல நாம் விரும்பவில்லை. எம்முடைய இந்த நிலைப்பாட்டை இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் நாம் விளக்கியிருந்தோம். அந்த நாடுகள் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டிருக்கின்றன" என்பதுதான் சுமந்திரனின் கருத்து.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான நம்பிக்கை வைத்துச் செயற்பாமைக்குப் பல காரணங்கள் உள்ளன. முக்கியமாக 2011 ஜனவரியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களை அரசாங்கம் ஆரம்பித்த போது இந்த தெரிவுக்குழு தொடர்பாக அரசாங்கம் எதுவும் தெரிவிக்கவில்லை. கூட்டமைப்புடனான பேச்சுக்கள் ஒரு இறுக்கமான கட்டத்தையடைந்து தமது நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டும் என்ற நிலை உருவாகிய போதுதான் பாராளுமன்றத் தெரிவுக்குழு என்ற யோசனையை அரசாங்கம் முன்வைத்தது.

அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களை முறித்துக்கொள்ள வேண்டும் என்ற நிலை எற்பட்டபோதுதான் அதற்கான ஒரு உபாயமாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரேரதித்தார். பேச்சுக்கள் தொடர வேண்டுமானால், பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குள் வாருங்கள் என அரசாங்கம் கூட்டமைப்பை அழைத்தது. இந்த இடத்தில் இன்னொரு கேள்வியும் எழுப்பப்பட்டது. அவ்வாறு பாராளுமன்றத் தெரிவுக்குழுவில்தாம் இணைந்துகொண்டால் ஒரு வருடகாலமாக அரசுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் அதில் எட்டப்பட்ட உடன்படிக்கைகளுக்கு என்ன கதி என்ற கேள்வியை கூட்டமைப்பு எழுப்பியது!

தெரிவுக்குழுவை கூட்டமைப்பு நிராகரித்துவிட்டமைக்கு மேலும் இரு காரணங்கள் கூறப்பட்டன.

1. சரித்திரத்திலிருந்து படித்துக்கொண்ட படிப்பினை! அதாவது, இனநெருக்கடிக்கான தீர்வைக் காண்பதற்காக என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குழு ஒன்றை அமைப்பது இதுதான் முதல் முறையல்ல. 2005 ஆம் ஆண்டு முதல் முறையாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட உடனடியாகவே அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு ஒன்று ஜனாதிபதி ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்டது. சுமார் 4 வருடகாலமாக பல அமர்வுகளை அந்தக்குழு நடத்தி தன்னுடைய இறுதி அறிக்கையைக் கையளித்த போதிலும், அது தொடர்பில் எந்த நடவடிக்கையுமே எடுக்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இதனால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலும் நம்பிக்கை வைக்கும் நிலையில் கூட்டமைப்பு இருக்கவில்லை.

2. பாராளுமன்றத் தெரிவுக்குழுவைப் பொறுத்தவரையில் அது அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய ஒன்றாக இருக்கும். குறிப்பாக விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, சம்பிக்க ரணவக்கவின் ஜாதிக ஹெல உறுமய என்பனவும் இந்தக் குழுவில் இடம்பெற்றிருக்கும். இதனைவிட ஆளும் கட்சியே இக்குழுவில் அதிகளவுக்குச் செல்வாக்கைச் செலுத்தக்கூடிய கட்சியாக இருக்கும். இந்தக் கட்சிகளை உள்ளடக்கிய பாராளுமன்றத் தெரிவுக்குழு இனநெருக்கடிக்கு நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பதில் எந்தளவுக்கு உதவுவதாக இருக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான்.

இதனைவிட தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் ஆறு மாத காலத்துக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என அரசாங்கம் காலக்கெடு ஒன்றை விதித்துள்ளது. இக்காலப்பகுதிக்குள் தீர்வு காணப்படவில்லையாயின் அதற்கான காலத்தை மேலும் ஆறு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. இதனால், இதுவும் நல்லிணக்கத்துக்கான முயற்சிகள் இடம்பெறுகின்றது எனக் காட்டிக்கொண்டு சர்வதேசத்தை நம்பவைத்து காலத்தைக் கடத்துவதற்கான ஒரு செயற்பாடாக அமையலாம் என கூட்டமைப்பு கருதுகின்றது.

இந்த நிலையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குள் வருவதையிட்டு நிதானமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டிய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்துள்ளது. இதனால்தான் பாராளுமன்றத் தெரிவுக்குழு என்ற யோசனை அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட போது, அதனை இராஜதந்திரமாகக் கையாள கூட்டமைப்பு முற்பட்டது. தெரிவுக்குழுவை ஒரேயடியாக நிராகரிக்காமல், முதலில் ஒரு வருடமாகத் தொடரும் எமது பேச்சுக்களைத் தொடர்ந்து ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவோம். பின்னர் அந்த இணக்கப்பாட்டை தெரிவுக்குழுவுக்குக் கொண்டு செல்வோம் என கூட்டமைப்பு கூறிய போது அரசாங்கம் அதனை ஏற்றுக்கொண்டது. இருந்தபோதிலும், ஏனைய கட்சிகளின் சம்மதம் இல்லாமல் தாம் ஒரு இணக்கத்துக்கு வருவதிலுள்ள "ஆபத்தை" உணர்ந்துகொண்ட அரசாங்கம் நிலைப்பாட்டை மாற்றியது.

எந்த இணக்கப்பாடும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலமாகவே வரவேண்டும். தனிப்பட்ட முறையில் இனிமேல் பேச்சில்லை என அரசாங்கம் அடித்துக்கூறிவிட்ட நிலையில், ஒரு வருடமாக நடத்தப்பட்ட பேச்சுக்கள் நிறுத்தப்பட்டு கடந்த ஐந்து மாத காலமாக அடுத்து என்ன என்ற கேள்விக்குறியுடன் சமாதான முயற்சிகள் ஸ்தம்பித நிலையில் உள்ளன.

இந்த நிலையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இந்தியா மற்றும் அமெரிக்கா மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, ஜெனீவா தீர்மானம் என்பனவும் இலங்கை அரசை அசைக்கவில்லை. கூட்டமைப்பின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்ட இந்த சர்வதேச சக்திகள் மகிந்த ராஜபக்ஷவுக்குக் கொடுத்த அழுத்தங்கள் எதுவும் பலனளிக்கவில்லை. கூட்டமைப்பினருடன் இனிமேல் பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்து தேநீர் அருந்துவதில்லை என்பதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதை இந்தியாவும், அமெரிக்காவும் மட்டுமன்றி ஏனைய நாடுளும் சரியாகப் புரிந்துகொண்டுவிட்டன.

இந்தப் பின்னணியில்தான் இந்தியாவும், மேற்கு நாடுகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கம் இப்போது தமது பார்வையைத் திருப்பியுள்ளன!

அதாவது, "பாராளுமன்றத் தெரிவக்குழுவுக்கு ஒருக்கால் போய்ப் பேசித்தான் பாருங்கோவன்" என சர்வதேசம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இப்போது அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளன. பேச்சுக்களைத் தொடர்ந்து நல்லெண்ண முயற்சிகளை முன்னெடுப்பதற்கு இதனைவிட வேறு வழியில்லை என அவர்கள் கருதுவது

அவர்களைப் பொறுத்தவரையில் சரியானதாக இருக்கலாம். ஆனால், மகிந்த ராஜபக்ஷ அரசின் மீது அழுத்தங்களைக் கொடுப்பதற்கான இயலுமையை இந்த நாடுகள் கொண்டிருக்கவில்லை என்பதையும் இந்த நகர்வுகள் உறுதிப்படுத்தியிருக்கின்றது.

இந்தியாவோ அமெரிக்காவோ தம்மீது அழுத்தங்களைக் கொடுக்கவில்லை என சுமந்திரன் "உத்தியோகபூர்வமாக" தெரிவித்திருந்தாலும், உண்மைநிலை அவ்வாறாக இல்லை என்பதை கூட்டமைப்பின் மற்றொரு பிரமுகர் இக்கட்டுரையாளருக்கு உறுதிப்படுத்தினார். சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் செல்வது அவசியம் என்பதை இந்தியா மற்றும் அமெரிக்கா என்பன கூட்டமைப்புக்குத் தெரிவிக்கத் தொடங்கியிருக்கின்றன.

கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் சர்வதேச அழுத்தங்கள் மற்றும் நல்லெண்ணம் காரணமாக தெரிவுக்குழுவுக்குச் செல்கின்றோம் என கூறுவதற்கு அவர்கள் தயாராகிவருகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்தக் கூடிய செய்திகள் கிடைத்துள்ளன. இருந்த போதிலும், தமிழ் மக்கள் உடனடியாக இதனை ஏற்றுக்கொள்வார்களா என்ற சந்தேகம் கூட்டமைப்புக்கு உள்ளது. தெரிவுக்குழுவுக்குச் செல்வதால் எந்தப் பலனும் கிடைக்கப்போவதில்லை என்பதை கூட்டமைப்புதான் முதலில் மக்களுக்குத் தெரிவித்தது. இதனைவிட கூட்டமைப்பின் தலைமை எடுக்கக் கூடிய இவ்வாறான ஒரு முடிவை பகிரங்கமாகவே விமர்சிப்பதற்குத் தயாராக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களே தயாராக இருக்கின்றார்கள். கூட்டமைப்பின் தயக்கத்துக்கு இந்த இரண்டும்தான் காரணம்.

ஆனால், இந்தியா மற்றும் அமெரிக்காவின் உத்தரவாதத்துடன் இதற்குள் செல்வதாகக் கூறிக்கொண்டு செல்வது கூட்டமைப்பின் உபாயமாக இருக்கலாம். அதாவது ஆறு மாத காலத்துக்குள் தீர்வு! இல்லையெனில் நீங்கள் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பு செல்லலாம்.! மீண்டும் அதே தொடர் கதைதானா?





# என்ன கொடுமை சரவணா!...

கல்லெலி வேலுப்பிள்ளை

வணக்கம் பாருங்கோ....
எல்லாரும் நல்லா இருப்பியள் எண்டு நினைக்கிறன். எப்பவும் வேற பிரச்சனையளைப் பற்றிக் கதைக்கிற எனக்குக் கொஞ்ச நாளாய் நித்திரை ஒழுங்கா வருகுதில்லை. கண்டது நிண்டதெல்லாத்தையும் மனசுக்குள்ள போட்டுக் குழப்புறதால எனக்கு நித்திரை இடையிடையில குழம்பிப்போகுது. எல்லாம் எங்கட ஆக்கள் ஒரு சிலபேர் செய்யுற வேலையள் தான் காரணம் பாருங்கோ.

விசயம் என்னெண்டால் பாருங்கோ.... செய்தி என்ற பெயரில சில ஊடகங்கள் பண்ணுற திருகுதாளங்கள் தானுங்கோ. ஊடகம் எண்டால் நடுநிலைமை இருக்கோ இல்லையோ, உண்மையை அறிஞ்சு கதைக்கவேணும். சரி, உண்மைதான் இல்லையெண்டாலும், சமூகத்திற்கு உதவாத செய்திகளைத் தவிர்க்கலாம். இரண்டும் இல்லை பாருங்கோ. தமிழரின்ர வாழ்க்கையில குழப்பத்தை உண்டாக்கிறதுக்கெண்டே இப்படிப்பட்ட ஊடகங்கள் சிலநேரங்களில அடிக்கிற கூத்துத் தாங்க முடியுதில்லைப் பாருங்கோ.

அண்மையில இணையம் வாயிலா ஒரு செய்தி ஊடகத்தைப் பார்த்தன். அந்தத் தளத்திற்குப் பேசாமல் றறற . கொடுமை.உழஅ எண்டு பெயர்வைச்சிருக்கலாம். அவ்வளவிற்குக் கேவலம். தமிழர் விடுதலை சம்பந்தமாக ஏராள தாராளமாய் செய்திகளைப் போட்டுட்டு, வலதுபக்கத்தில . வக்கிரமான ஆபாசச் செய்தி எல்லாம் போட்டுக்கிடக்குப் பாருங்கோ. உதைஎல்லாத்தையும் வாசிச்சால் அறிவு வளராது. அசிங்கம் தான் வளரும். இணையம் கெதியாப் பிரபல்யம் ஆகவேணும் எண்டால் எதுவும் செய்வோம் எண்டு ஆரம்பிச்சிருக்கிறாங்கள் போலகிடக்கு. "யாழ்ப்பாணத்தில் கலாச்சாரச் சீர்கேடு" எண்டு தலைப்புச் செய்தியைப் போட்டுட்டு, வலது பக்கத்தில சீர்கேடுகளை ஊக்குவிக்குறமாதிரி "அந்த வயசில ஆம்பிள்ளைக்கு ஆசை" எண்டு வி(வ)காரமான செய்தியைப் போட்டிருக்கினம். உதுக்கு "பல்சுவை" இணையம் எண்டு விளம்பரம் வேற. உவங்களுக்கெல்லாம் பொம்பிளைச் சகோதரங்கள் இல்லையோ..? இல்லாட்டில் தாய் தகப்பன் வீட்டை விட்டுக் கலைச்சுவிட்ட கூட்டமோ..? ஒண்டுமே விளங்கேல்லைப் பாருங்கோ. கும்பிட்டுக் கேக்குறன், "செய்திச்சேவை" எண்ட பெயரில நடத்துற உந்த விபச்சாரக் கடையளைத் தயவுசெய்து மூடுங்கோ.ஆகக்குறைஞ்சது சமூகத்தை வாழவைச்ச பெருமையாவது உங்களைச் சேரும்.

உதுதான் தலையிடி எண்டால் சில ஒலி,ஒளி ஊடகங்கள் செய்யுற வேலையும் பெரிய அநியாயம் பாருங்கோ.ஐரோப்பிய நாட்டில ஒரு ஒலி ஊடகம் பண்ணுற அட்டகாசம் அதகளமாய்க் கிடக்கு. புலம்பெயர் நாடுகளில வாழுற எங்கட மக்களின்ர விடுதலைக்கான அமைப்புக்களின்ர சிறிய முரண்பாடுகளை, சந்தி சிரிக்க வைக்குறது தான் உந்த ஒலி ஊடகத்தினர வேலை. உள் வீட்டு ஓட்டையை, உலகத்துக்கே பிச்சுக்காட்டுறதுக்கு அவை வைச்சிருக்கிற பெயர் "தமிழ்ச்சேவை". என்ன கண்றாவியப்பா இயேசுநாதா..! நீங்கள் செய்யுற வேலை "சும்மா மெல்லுற வாய்க்கு அவல் போட்டு அரைக்குற வேலை" பாருங்கோ. உங்கட சேவையை விஸ்தரிக்க நானும் நல்ல ஒரு திட்டம் தரட்டே..? என்னெண்டால் உங்கட "மாண்புமிகு" செய்தியாளர்களை அனுப்பி, புலம்பெயர் நாடுகளில வாழ்ந்து வருகிற தமிழ்க்குடும்பங்களின்ர உள்வீட்டுப் பிரச்சனையளை அறிஞ்சு அதுகளையும் விவாதிக்கலாமே..? என்ன சொல்லுறியள்....? வாற ஆத்திரத்துக்கு,ஊர்ல இருந்து நல்ல பச்சைமட்டை வரவழைச்சு வெளு வெளு எண்டு வெளுக்கவேணும் போல கிடக்கு. தமிழரை ஒற்றுமைப்படுத்தி, தேசவிடுதலைக்குப் பயன்படுத்துறதை விட்டுட்டு, குழுச் சண்டை உருவாக்குறது ஊடகம் கிடையாது.. உதுக்குப் பெயர் வேற பாருங்கோ..!

எங்கட சில சனங்களும் நல்லது எது கெட்டது எது எண்டு தெரியாமல் நிண்டு அங்கலாய்க்கினம். கொஞ்சம் அழகா, வாணவேடிக்கையளோட எதாகிலும் திரையில தெரிஞ்சால் அப்படியே அங்கால பாஞ்சிருவினம். திரையில வாறவர் என்னத்தைச் சொல்லுறார், அவரின்ர நோக்கம் என்ன, எங்கட விடுதலைக்கும் அவருக்கும் என்ன பிரச்சனை, ஏன் பக்கச்சார்பாய் நிக்கினம் எண்டு யோசியாமல் மாசம் மாசம் காசு கட்டி, வீதியால போற சனியன வீட்டுக்குள்ள வலுக்கட்டாயமாய் வரவழைச்சு வைச்சுக் கூத்தாடுவினம்,

பிறகு அவர் சொல்லுற கருத்துதான் சரிஎண்டு பிடிவாதம் வேற நடக்கும், மக்கள் எப்பவும் விழிப்பாய் இருந்தால் தான், வாழைப்பழத்துல ஊசி ஏத்துற ஆக்களை அடையாளம் காண-லாம் பாருங்கோ. விசக்கருத்துக்களை கொஞ்சம் கொஞ்சமாய் மக்களுக்குள்ள புகுத்தி, தங்கட வேலையைக்காட்டுற ஆக்களில கொஞ்சம் கவனமாய் இருக்கவேணும் கண்டியளோ..! கிட்டடியில ஒரு நிகழ்ச்சி பார்த்தன். நிகழ்ச்சித் தொகுப்பாளர் ஒரு விசயத்தைத் தலைப்பாய் வைச்சு விவாதக் கணக்குல ஒரு விசயத்தை நடத்துறார். அது வேணுமெண்டே நேர்மாறான கருத்துக்களை உருவாக்குறதுக்காக உருவாக்கின நிகழ்ச்சி மாதிரி கிடந்திச்சு. விசமத்தனமாய் சொல்லப்படுற கருத்துக்களுக்கு மாத்திரம் தொலைபேசி அழைப்புப் பட்டெண்டு கிடைக்குது. சரியான விசயத்தைச் சொல்லவாற ஆக்களின்ர இணைப்பெல்லாம் இடைநடு-வில தானாய்த் துண்டிக்கப்படுகுது. சிலருக்கு அழைப்பே கிடைக்குதில்லையாம். என்ன திருவி-ளையாடலோ தெரியவில்லைப் பாருங்கோ. உதெல்லாம் கன நாளைக்கு நிலையாது பாருங்கோ. அதர்மமும் அநியாயமும் கொஞ்ச நாளைக்குத்தான் நிலைக்கும்.

இப்ப வெளிவாற அச்சு ஊடகங்களில, கன அச்சு ஊடகங்களிற்கு இலட்சியம், விடுதலை நோக்கம் எண்டதெல்லாம் துளியும் கிடையாது பாருங்கோ. தமிழனை அழிச்சவனின்ர விசயங்களும், அவங்கள் நடத்துற சாகசங்களையும் படத்தோட வெளியிடுறாங்கள். "கண்டிப் பெரகரா நடனத்தை இனி யாழ்ப்பாணத்திலயும் காணலாம்" எண்டு படத்தோட செய்தி போடுறாங்கள். ஏதோ சிங்கவளின்ர நடனத்தைப் பாக்குறதுக்காக எங்கட தமிழ்ச்சனம் இவ்வளவு நாளும் தவியாய்த் தவிச்சமாதிரியும் இப்பெல்லாம் சரியான சந்தோசத்தோட குதூகலிக்குற மாதிரி-யும் காட்டுற இவங்கள், சிங்களவனுக்குப் பிறந்த தமிழனோ..? இல்லாட்டில் அவனிட்டப் பிச்சை வாங்கி ஊடகம் நடத்துறாங்களோ தெரியேல்லை. எட பரதேசியளே... உங்களுக்குக் கொஞ்சமெண்டாலும் இரத்தத்தில மானம், வீரம் எண்டது கிடையாதே...? கதறக் கதற எங்கட சனத்தைச் சாப்பாடு போடாமல் அழிச்சவனின்ர அலங்காரமெல்லாத்தையும், செய்தியாய்ப் போடுறதுக்கு, உடுப்பில்லாமல் சந்தி சந்தியாய் நிண்டு பிச்சைஎடுக்கலாம். எவ்வளவு கேவலமான பிழைப்பெல்லாம் வெளிநாடுகளில எங்கட ஆக்கள் நடத்துறாங்கள் எண்டு பாருங்கோவன். அதுக்குள்ளே அவைக்கு தங்கட திறமைக்கு விழா வேற வருசாவருசம் தேவையாய்க்கிடக்கு. "ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை" எண்ட மாதிரி கனகாலமாய் தனிக்காட்டு இராசாங்கம் நடத்தினவைக்கு இனி அகரம் இதழ் சந்தி சந்தியாத் தர்மஅடி கொடுக்கப்போகுது. எல்லாம் அழிஞ்சு போய் தமிழன் நடுத்தெருவில நிக்கேக்கையாகிலும் புத்தி வருமெண்டு பாத்தால், அது நடவாது போல கிடக்கு. பாப்பம், இனியா-கிலும் திருந்துகினமோ எண்டு..!

எங்கட மக்களும் கொஞ்சம் விழிப்பா இருக்கவேணும் பாருங்கோ. எண்ட பண்பாடு, கலாசாரம் எண்ட விசயங்களை நாங்கள் அவதானமாய் பாதுகாக்கவேணும் கண்டியளோ..! ஏனெண்டால் உதெல்லாத்தையும் விக்குறதும் எங்கட சில ஆக்கள் தானுங்கோ.அதனால நாங்கள் தான் அவதானமாய் இருந்து, எங்கட வரவேற்பறைக்கு அனுமதிக்குற ஊடகங்கள் சரியா இருக்குதோ எண்டு கண்டிப்பாய்க் கவனிக்கவேணும். ஏன் எண்டால் அடுத்த சந்ததி உதுகளைப் பார்த்துத் தடுமாறிப்போயிடக்கூடாது பாருங்கோ. எல்லாம் எங்கட கையிலதான் இருக்குதுங்கோ.

என்னமோ நடக்குது மர்மமாய் இருக்குது
மனுசங்க வாழ்க்கையில
எத்தனை ஆட்சிகள் ஏறுது மாறுது
அரசியல் மேடையில
வானம் சாட்சியா பூமி சாட்சியா
தாகம் மாறவில்லை
ஈழம் தேடும் எம் மக்கள் சிந்திய
கண்ணீர் காயவில்லை
அப்ப வரட்டே...!


தினமும் ஆட்டுப் பங்கு இறைச்சி அத்துடன்
ஆடு, மாடு, கோழி இறைச்சி வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

195, rue du Fbg. St-Denis
75010 Paris
Tél.: 01 42 05 23 78
M°: Lachapelle ou Gare du Nord

ASI Boucherie
PARIS, FRANCE

தினமும் நூற்றுக்கணக்கான
வாடிக்கையாளர்களின் தேவையை
பூர்த்தி செய்வதால் எமது ஸ்தாபனத்தில்
தினமும் புதிதான இறைச்சி வகைகளே
விற்பனை செய்யப்படுகின்றது.




வரலாறு நோக்கிய காரணங்கள் நிறையவே உள்ளன. அதற்கிடையில் சமகாலக் காரணி ஒன்றையும் தொட்டுப் பார்த்துப் போக வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எனவே முதலில் அதனைக் கவனத்தில் எடுத்துப் பின்னர் கட்டுரையின் பக்கம் பயணிப்போம்.

எமது 67 ஆண்டு கால அரசியல் பயணத்தில் ஈழத் தமிழினத்தின் அரசியல் இலக்கை நாம் மிக அருகில் அண்மித்து விட்ட நிலையில் சர்வதேச அனுசரணை பெற்று அமைதிப் பேச்சை தொடர்ந்தோம். சிங்களத் தலைமைகளுடன் இதற்கு முன்னர் 5 தடவைகளுக்கு மேல் எமது தலைவர்கள் பேசித் தோற்ற நிலையில் இப்பேச்சு நோர்வே அரசின் முன்னகர்த்தலில் இடம் பெற்றது.

எமது பிரச்சினையில் கடுகளவும் தொடர்பில்லாத உலகின் 30 க்கும் அதிகமான அரசுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டு எமக்கு எதிரான சிங்களம் நடத்திய ஆயுதப் போராட்டத்தை அழித்தன. எமது நியாயமான அரசியல் உரிமைகளை இலட்சியத்தை அடையாதபடி செய்தன. அதற்கான நியாயப் பாடுகளை அவரவர் தேவைக்கு ஏற்ப கூறியும் உருவாக்கியும் மிகப் பெரும் இன அழிப்பையே நடத்தி முடித்தன.

2009 மே 19ல் முடிவுற்றதாக முதன்மை எதிரியான சிங்களம் பிரகடனப்படுத்தி 3 வருடங்கள் கடந்து விட்டன. இதே நாடுகள் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் மக்கள் விடுவிப்புப் போர் என்ற கொட்டொலி எழுப்பி அனைத்து வகைப் போர்க் குற்றங்களையும் எம்மக்கள் மீது செய்யத் துணைநின்றன.

ஆனால் மக்களுக்கு விடுதலையோ போரினால் பாதிப்படைந்த மக்களுக்கான எதுவித நிவாராணமோ மறுக்கப்பட்டுத் தொடர்ந்தும் கடுமையான சிங்கள இராணுவ அடக்கு முறை ஆட்சிக்குள் அகப்பட்டுத் தவிக்கின்றனர். எம் இனத்தின் நியாயமான விடுதலைப் போரைப் பயங்கரவாதம் எனப் போர் தொடுத்தவர்கள் முடிவின்றித் தொடரும் எம் மக்களின் அடிப்படை வாழ்வாதார உரிமைகளை மறுக்கும் ஜனநாயகப் படுகொலைக்கு முடிவு தேடாது இராணுவ ஆட்சிக்குத் துணை நிற்பது ஏன்?

இங்கேதான் அவர்களின் சுயநலமும் நயவஞ்சகமும் அம்மணமாகத் தெரிகின்றன. உலகம் கண்ணீர் விடும் அளவுக்குப் போர், மனித குலத்துக்கு எதிரான, மற்றும் இன அழிப்புக் குற்றங்களைச் செய்த இலங்கை இந்திய அரசுப் பேர்வழிகளும் ஏனைய சர்வதேச அரசு மற்றும் ஐ.நா.அதிகாரிகளும் கூட உலகில் சுதந்திரமாக நடமாடுகின்றனர்.

ஆனால் எமது மக்களும் தேசமும் இலங்கை இந்திய, சீன, பாகிஸ்தானிய அரசுகளின் நேரடி அடக்கு முறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் சர்வதேச சுரண்டல் வளங்கள் கொள்ளையடிப்புக்கும் முகம் கொடுக்கும் நிலை தொடருகிறது. எமது மண்ணுக்கும் மக்களுக்குமான பாதுகாப்பு முற்றாக மறுக்கப்பட்ட நிலையே உள்ளது.

அப்படியானால் தமிழன் போராடாமல் வாழ முடியாது என்ற பாடத்தைத் தானே இவர்கள் எமக்குப் புகட்ட முனைகிறார்கள்! எனவே எமது இருப்புக்கான உத்தரவாதம் இலங்கையின் ஒற்றை ஆட்சி முறைக்குள் என்றைக்குமே எவருமே தரப்போவதில்லை என்பதும் ஆணித்தரமாக எமக்கு உணர வைக்கப்படுகிறது.

இந்த அரசுகளும் ஐ.நா.வும் முள்ளி வாய்க்காலில் நடந்தது தமிழ் இனப் படுகொலை என்ற உண்மையை ஏற்க மறுப்பதும் எப்படியேனும் அதனை மூடி மறைக்க வேண்டும் என்பதில் காட்டும் உத்வேகமும் எமது தனி ஈழ தேசக் கோரிக்கை எக்காலத்திலும் கைவிடத் தக்கது அல்ல என்ற பாடத்தை எமக்குத் தருகிறது.

எனவே இன்னும் எத்தனை தலைமுறை ஆனாலும் தனித் தமிழ் ஈழத்துக்கான தேவையும் அதற்கான போராட்டமும் தவிர்க்க முடியாது தொடரப்பட வேண்டும். இன்று தமிழ் நாட்டில் தமிழ் ஈழத்துக்கான ஆதரவுத் தளம் பரந்தும் விரிந்தும் அதே நேரத்தில் சூதுவாது அரசியலில் அடியுண்டு மறையக் கூடிய ஆபத்தும் நிறைந்து காணப்படுகிறது.

அதனை வலுவான நிலைக்கு எடுத்துச் செல்லும் தகமை தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் காண முடியாதிருக்கிறது. பச்சையாகச் சொல்வதானால் அது தமிழரின் தார்மீக உரிமைகளைக் கூட வாய் திறந்து பேசும் திறன் இழந்து இந்தியக் காங்கிரஸ் கட்சியின் காலடியில் கிடக்கிறது.

இந்திய மத்திய அரசின் வெளியுறவுக் கொள்கையை எமக்குச் சார்பாக நாம் மாற்றியாக வேண்டும் அல்லது இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருந்து எமது தலைமை முற்றாக முடிவாக முறித்துக் கொள்ள வேண்டும். எமது இனத்தின் அழிவுக்கு வழி தேடும் எந்த அரசுடனும் நாம் சமரசம் செய்ய முடியாது.

இன்றைய இந்திய மத்திய அரசின் தனித் தமிழ் ஈழத்துக்கான எதிர்ப்பு நிலையை நாம் ஏற்க வேண்டும் எனில் நாம் சிங்களத்துடன் நேரடியாகச் சரணடைவதே சிறந்தது. சாட்சிக்காரன் காலடியில் விழுவதை விடவும் சண்டைக்காரன் காலடியில் விழுவதே விவேகம் அல்லவா? எனவே நாம் இந்தியாவுடனும் எமது தனித் தமிழ் ஈழத்துக்கான போராட்டத்தை சமரசம் செய்ய முடியாது, கூடவும் கூடாது. எமது இளைய தலைமுறை இப்படித்தான் எமது போராட்டத்தைத் தொடர வேண்டும்.

இனி எமது வரலாறு நோக்கிய காரணியை ஓரளவாவது இடமும் நேரமும் உள்ள வரை கவனத்தில் எடுப்போம். *(தொடரும்...)*





# ஆர். சுந்தர்ராஜன் - முடிந்ததா பயணங்கள்?

வி.சபேசன்

அண்மையில் ஊடகங்களில் ஒரு செய்தி வெளியாகி இருந்தது. பல வெற்றிப் படங்களை இயக்கிய ஆர்.சுந்தர்ராஜன் பல ஆண்டுகளுக்குப் பின்பு லாரன்ஸ் ராகவேந்திரா நடிப்பில் "உயிரெழுத்து" என்று படத்தை இயக்கி இருப்பதாகவும், படம் விரைவில் வெளிவர இருப்பதாகவும் அந்த செய்தி தெரிவித்திருத்தது.

லாரன்ஸ் ராகவேந்திரா ஒரு சிறந்த நடன இயக்குனராகவும், திரைப்பட இயக்குனராகவும், நடிகராகவும் முத்திரை பதித்திருப்பவர். கடந்த ஆண்டு வெளியான தமிழ் படங்களில் மிக அதிக அளவிலான விகித இலாபம் இவர் நடித்து, இயக்கியிருந்த "காஞ்சன" (முனி 2) படத்திற்கே கிடைத்திருந்தது. இந்த வெற்றி இவருடைய அடுத்த படம் குறித்த எதிர்பார்ப்பையும் கொடுத்திருந்தது.

இந்த நிலையில் "உயிரெழுத்து" படம் பற்றிய அறிவிப்பும் வெளியாகியது. இதை அடுத்து மிக அவசரமாக லாரன்ஸ் அதை மறுத்து அறிக்கை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையில் "படம் பல ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்டதாவும், அந்த நேரத்தில் நடித்துக் கொண்டிருந்தது போன்று கதாநாயகனின் நண்பனாகவும், ஒரு பாடலுக்கு ஆடியும் நடித்துக் கொடுத்ததாகவும் லாரான்ஸ் தெரிவித்திருந்தார்.

"உயிரெழுத்து" திரைப்படம் பல ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. பாரதிராஜா இயக்கிய "கண்களால் கைது செய்" படத்தில் கதாநாயகனாக நடித்திருந்த வசீகரன்தான் "உயிரெழுத்து" படத்திலும் கதாநாயகன். லாரன்ஸ் கதாநாயகனின் நண்பனாக ஒரிரு காட்சிகளில் வருகின்ற சிறிய வேடத்தில்தான் நடித்திருக்கிறார்.

பல காரணங்களால் வெளிவராமல் போன அந்தப் படத்தை தற்பொழுது லாரன்ஸ"க்கு உள்ள வியாபார மதிப்பை கணக்குப் போட்டு மயக்கம் தரக் கூடிய விளம்பரத்தோடு வெளியிடத் திட்டமிடுகிறார்கள். மிகப் பெரும் வெற்றி இயக்குனராக வலம் வந்த ஆர்.சுந்தர்ராஜனின் இந்த நிலையை நினைக்கின்ற பொழுது வருத்தமாக இருக்கின்றது.

80களில் ஆர்.சுந்தர்ராஜன் இயக்கிய படங்கள் நிகழ்த்தி சாதனைகள் இன்றைய தலைமுறையினர் பலருக்கு தெரிந்திருக்காது. இசைஞானி இளையராஜாவின் இசையில் ஆர்.சுந்தர்ராஜன் இயக்குகின்றார் என்று சொன்னாலே போதும் படம் விற்றுத் தீர்ந்து விடும்.

ஆர்.சுந்தர்ராஜன் இயக்கிய முதல் படம் "பயணங்கள் முடிவதில்லை". அப்பொழுது ஒரிரு படங்களில் நடித்திருந்த, பெரிய அறிமுகம் இல்லாத மோகன்தான் படத்தின் கதாநாயகன். படம் வெளியான நேரத்தில் கமல்ஹாசன், சிறிதேவி நடித்திருந்த "வாழ்வே மாயம்" திரைப்படமும் வெளியாகி இருந்தது. இரண்டு படங்களும் ஏறக்குறைய ஓரே கதையை கொண்டிருந்தன. ஆனால் இரண்டுமே வெற்றி பெற்றன.

ஆர்.சுந்தர்ராஜனின் "பயணங்கள் முடிவதில்லை" மிகப் பெரிய வெற்றியைப் பெற்று சாதனை படைத்தது. பல திரையரங்குகளில் 500 நாட்கள் வரை படம் ஓடியது. பாடல்களும் பட்டி, தொட்டி எல்லாம் ஒலித்தன. படத்தின் கதாநாயகன் மோகனுக்கு பெரிய திருப்புமுனையும் கிடைத்தது.

ஆர்.சுந்தர்ராஜன் மிகவும் தன்னம்பிக்கை மிக்கவர். "வைதேகி காத்திருந்தாள்" என்ற படத்தை விஜயகாந்தை வைத்து இயக்கிக் கொண்டிருந்தார். சண்டைப் படங்களில் நடித்துக்

கொண்டிருந்த விஜயகாந்தை கோயிலில் அமர்ந்தபடி இரவில் பாடல் பாடுகின்ற வேடத்தில் நடிகக வைத்திருப்பார்.

பலர் இந்த வேடத்திற்கு விஜயகாந்த் பொருத்தமில்லாதவர், மோகனை நடிக்க வைக்கலாம் என்று கூறிய போதும், அதை ஏற்காது விஜயகாந்தை நடிக்க வைத்தார். படத்தின் கடைசிக் காட்சி விஜயகாந்தின் பாத்திரப் பொருத்தத்தையும் விஸ்வரூபத்தையும் வெளிப்படுத்தியது. படமும் மிகப் பெரிய வெற்றி. விஜயகாந்தாலும் வித்தியாசமான வேடங்களில் நடிக்க முடியும் என்பதை இந்தப் படம் நிரூபித்தது.

"பயணங்கள் முடிவதில்லை" போன்று இந்தப் படத்திற்கு இளையராஜா போட்ட பாடல்களும் இன்று வரை ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

"வைதேகி காத்திருந்தாள்" படத்தில் இன்னும் ஒரு விசேசம் இருந்தது. அதுவரை தனித் தனியாக நடித்துக் கொண்டிருந்த கவுண்டமணியும் செந்திலும் இணைந்து நடித்திருந்தார்கள். இருவரின் நகைச்சுவைக் காட்சிகளுக்கு கிடைத்த வரவேற்பு, தொடர்ந்து அவர்களை இருபது ஆண்டுகளுக்கு மேலாக இணைந்து நடிக்க வைத்தது. அந்தப் படத்தில் கவுண்டமணியின் வேடமான "ஆல்இன்ஆல அழகுராஜா" இன்று வரை பிரபலமாக இருக்கிறது. இந்தப் பெயரில் தற்பொழுது நடிகர் கார்த்தி நடிக்கின்ற படம் தயாராகிக் கொண்டிருப்பதாகவும் அறிய முடிகிறது.

ஆர்.சுந்தர்ராஜன் நடிகர் சிவகுமாரை வைத்து இயக்கிய "நான் பாடும் பாடல்" படமும் பெரும் வெற்றியை பெற்றது. இசைஞானியின் பாடல்களும் பெரும் வரவேற்பை பெற்றன. கவுண்டமணியின் நகைச்சுவையும் பாராட்டை பெற்றது.

இப்படி ஆர்.சுந்தர்ராஜனின் வெற்றிப் பயணம் தொடர்ந்தது. இசைஞானி இளையராஜாவும் மெல்லிசை மன்னர் விஸ்வநாதனும் இணைந்து இசை அமைத்திருந்த "மெல்லத் திறந்தது கதவு" படத்தையும் இவரே இயக்கி இருந்தார். இந்தப் படத்தின் வெற்றியையும் சொல்லத் தேவையில்லை.

விஜயகாந்தை வைத்து "அம்மன் கோவில் கிழக்காலே" என்கின்ற இன்னும் ஒரு வெற்றிப் படத்தை இயக்கினார். அப்பொழுது ஒரு சம்பவம் நடந்ததாம். படப்பிடிப்புக்கு நாள் குறித்து எல்லோரும் வந்த பின்பு தயாரிப்பாளரை பார்த்து "உங்களுக்கு என்ன மாதிரி கதை வேண்டும்" என்று கேட்டாராம். துயாரிப்பாளர் ஆடிப் போய் விட்டார். இதன் உண்மை, பொய் தெரியவில்லை. படப்பிடிப்புக்கு வந்து அங்கு வைத்தே கதை-யையும், திரைக்கதையையும் செய்து படத்தை வெற்றிப் படமாக்குவதில் வல்லவர் என்பதற்காக இந்தச் சம்பவத்தை கூறுவார்கள்.

மனித உணர்வுகளையும் உறவுகளையும் தன்னுடைய படங்களில் சொல்லி வந்த ஆர்.சுந்தர்ராஜன் ரஜினிகாந்தை வைத்து "ராஜாதிராஜா" என்கின்ற மசாலாப் படத்தையும் தந்தார். இந்தப் படத்தை இசைஞானி இளையராஜாவே தயாரித்திருந்தார். "ராஜாதிராஜா" படமும் மிகப் பெரிய வெற்றியை பெற்றது.

இப்படி பல வெற்றிகளையும் சாதனைகளையும் தந்த ஆர்.சுந்தர்ராஜன் படங்கள் இயக்குவதைக் குறைத்துக் கொண்டு நகைச்சுவை மற்றும் குணச்சித்திர வேடங்களில் நடிக்கத் தொடங்கினார். இவருடைய ஓரிரு படங்கள் தோல்வி கண்டதும் இதற்கு ஒரு காரணம்.

ஆயினும் மீண்டும் விஜயகாந்தை வைத்து "என் ஆசை மச்சான்" என்கின்ற படத்தை தந்தார். படத்திற்கு தேவா இசை அமைத்திருந்தார். பாடல்கள் வரவேற்றை பெற்றன. ஆர்.சுந்தர்ராஜனின் மற்றப் படங்கள் அளவிற்கு இல்லாது விட்டாலும் இந்தப் படமும் வெற்றியைப் பெற்றது.

ஆனால் அதன் பின்பு அவர் இயக்கிய படங்கள் வெற்றியை பெறவில்லை. இசைஞானியின் இசை அவருடைய படத்திற்கு இல்லாமல் போனதும் ஒரு குறையாகி விட்டது. அப்பொழுது தொடர் வெற்றிகளை தந்து வளர்ந்து வந்த நடிகர் விஜயை வைத்து 1997இல் "காலம் எல்லாம் காத்திருப்பேன்" என்ற படத்தையும் இயக்கினார். அந்தப் படமும் தோல்விப் படமாகிப் போனது.

கால மாற்றத்திற்கு பல வெற்றிப்பட இயக்குனர்களால் ஈடு கொடுக்க முடியாமல் போவது திரையுலகில் சகயமான ஒன்றுதான். பெரும் ஜாம்பவான்களாக கருதப்படுகின்ற பாலச்சந்தர், பாரதிராஜா போன்றவர்களாலேயே இன்றைக்கு ஒரு வெற்றப் படத்தை கொடுக்க முடியவில்லை.

ஒரு நேரத்தில் வெற்றிகரமான மாசாலப் பட இயக்குனராக விளங்கிய எஸ்.பி. முத்துராமன் போன்றவர்களால் இன்றைய பேரரசு, ஹரி போன்ற இயக்குனர்களோடு போட்டி போட முடியாது. இந்த யதார்த்தத்தை உணந்து பல இயக்குனர்கள் தாங்களாவே படம் இயக்குவதில் இருந்து விலகி தமக்கு உள்ள பெயரை காத்துக் கொள்வார்கள்.

மிகப் பெரிய சாதனைகளை நிகழ்த்திய ஆர்.சுந்தர்ராஜனும் நடிப்பில் மட்டும் இனி கவனத்தை செலுத்தலாம். காலம் பிந்தி வருகின்ற படங்கள் வெற்றி பெறுவது இல்லை. அதுவும் இருபது ஆண்டுகளுக்கு முன்பு வெற்றிப் பட இயக்குனராக இருந்தவர் பத்து ஆண்டுகளுக்கு முன்பு இயக்கிய "உயிரெழுத்து" படம் வெற்றி பெறுவதற்கு சாத்தியமே இல்லை.



# கொடி காத்த வீரர்!

த.பாவலன்

தமிழ் தேசியக்கூட்டமைப்பு அண்மைக்காலமாக அடிக்கடி பாவ மன்னிப்புக் கேட்கத்தொடங்கிவிட்டது. ஆனாலும் தவறுகளைத் தெரிந்தே செய்து கொண்டு பாவமன்னிப்புக் கேட்பதென்பது எந்த வகையினில் நியாயமானதென்பதும் தெரியவில்லை. ஆனாலும் தமிழ்த் தரப்புகளிடையே சம்பந்தன் ஐயாவின் கொடிவீரன் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியவாறு ஒருவாறாக வடக்கை ஆட்டிப்படைத்துக்கொண்டிருந்த மே தினக்காய்ச்சல் ஓய்ந்துள்ளது.. சம்பந்தர் தரப்பிடம் தேசியக் கொடியைக் கொடுத்து ஏற்றிவைத்த பெருமையுடனும், வழமையைப் போன்றே தெற்கு அரசியல்வாதிகளது வீராவேசப் பேச்சுக்களுடனும் இம்முறையும் மே தினம் நடந்து முடிந்திருக்கின்றது. இம்முறையும் தமிழர்களுக்கு ஒரு துரும்பேனும் கிட்டியிருக்கவில்லை, பெரும்பாலும் இம்முறையும் யாழ்ப்பாணத்து மே தினக்கூட்டங்களைத் தமிழ் மக்கள் நிராகரித்தேயிருக்கின்றார்கள். அதிலும் குறிப்பாக ஐ.தே.கட்சி தமிழ்தேசிய கூட்டமைப்பின் கூட்டு மே தினம் உள்ளூர் மக்களது ஆதரவின்மையினால் பிசுபிசுத்து இழுபறிப்பட்டே நடந்திருந்தது, வெறும் நூற்றுக்கும் குறைவான உள்ளூர் மக்கள் மட்டுமே மேதின ஊர்வலத்தினில் பங்கெடுத்திருந்தனர். முன்னதாகவே ஐ.தே.கட்சி மற்றும் தமிழ்தேசியக் கூட்டமைப்புக் கூட்டு மே தினம் தொடர்பில் பரவலாகக் காரசாரமான வாதப்பிரதி வாதங்கள் உள்ளேயும் வெளியேயும் தொடர்ந்தே வந்திருந்தது. ரெலோ அமைப்பு மே தினத்தில் பங்கெடுக்கப்போவதில்லை என வெளிப்படையாகவே கூறிக்கொண்டதால் தப்பித்துக் கொண்டது.. கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சிறிதரன், கிளிநொச்சியில் தனித்துப்போய், வெற்றிகரமாக ஒரு மே தினத்தை நடத்தி முடித்துள்ளார். குறித்த சிறிதரனின் கிளிநொச்சி மே தினக் கூட்டத்திற்கு நானூறுக்கும் அதிகமான பொதுமக்கள் திரண்டு வந்திருந்தபோதிலும், யாழ்ப்பாணத்தில் வெறுமனே நூற்றுக்கும் குறைவானவர்கள் மட்டுமே வந்திருந்தமை தமிழ் மக்கள் எத்தகைய மனோ நிலையில் இருக்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றது.

மாறி மாறித் தெற்கில் ஆட்சி பீடம் ஏறுகின்ற தெற்கு ஆட்சியாளர்கள், தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கு, இனவாத அரசியலையே நம்பியிருப்பது இலங்கையின் ஒரு சாபக்கேடே. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பாக இன்று வரையில், உறுதியான தெரிவு ஒன்றை முன்வைக்க முடியாத நிலையிலேயே ஐ.தே.கட்சி உள்ளது. குறிப்பாக இன்று வரை 13 பிளஸ் பற்றிக் கூறிக்கொண்டிருக்கும் ஐ.தே.க தரப்பு ஒரு பேச்சுக்கு எவ்வாறேனும், ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிக் கொள்ளுமானால் இவர்கள் குறிப்பிடும் 13 பிளஸ் என்னவாகும் என்பது அனைவருக்கும் நன்றாகவே தெரியும்.

எவ்வாறேனும், ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிக் கொள்ளவே தமிழர்களது நலன்களை நோக்கி அக்கறை கொண்டதாக ஐ.தே.கட்சி தலைமை காட்டிக்கொண்டிருக்கின்றது. யாழ். பொதுசன நூலக எரிப்பு மற்றும் 83ம் ஆண்டு இனக்கலவரம் எனப் பதில்கள் கூறப்பட வேண்டிய கடப்பாட்டைக் கொண்ட பல கேள்விகள் ஐ.தே.கட்சியிடமும் இன்றுவரையில் இருந்து வருகின்றது. அமைச்சரும் ஜனாதிபதியின் சகோதரருமான பசில் ராஜபக்ச பொதுநூலகத்தை எரித்தவர்களுடனா? தமிழ்தேசியக்கூட்டமைப்பு மே தினம் கூட்டு வைத்திருக்கின்றதென்ற கேள்விக்குப் பதிலளிக்க எவருமேயில்லை. அவ்வகையினில் முதலில் பாவ மன்னிப்புக் கோர வேண்டியவர்களாக ஐ.தே.கட்சியினரே உள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில், தனியானதொரு மே தினக்கூட்டத்தை நடத்தி முடித்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனிடையே அவரது எதிர்பார்ப்புக்கும் மாறாக அதிர்ச்சியளிக்கும் வகையில் மக்கள் ஒன்று கூடியிருந்தது அவருக்கு நம்பிக்கையொன்றினை ஏற்படுத்தியே உள்ளது. அடுத்து வரும் காலங்களில் அவர் தெரிவு செய்ய வேண்டிய அரசியல் பாதையை

அவர் வகுத்துக் கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

விடுதலைப்புலிகள் போரியல் ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் தொழிலாளர்களின் மே தினத்திற்காக அச்சம் மிக்க அந்தச் சூழலில் கிளிநொச்சியினில் திரண்ட பொதுமக்கள், அவருக்கு அரசியல் நம்பிக்கையூட்டியுள்ளனர். அங்கு வருகை தந்து உரையாற்றிய மனோ கணேசன் கூட கடந்த காலத்தில் கிளிநொச்சி எவ்வாறு தீர்மானிக்கும் சக்தியாக இருந்ததோ, மீண்டும் அவ்வாறானதொரு சூழல் ஏற்படுவதற்கான நம்பிக்கை இப்போது ஏற்பட்டிருப்பதாகத் திரண்டிருந்த மக்களைப் பார்த்துக் கூறினார். அதேபோன்றே மாவை சேனா-திராசா தனதுரையின்போது, இராணுவ அடக்கு முறைகளே இப்போது வன்னியின் முதன்மையான விடயங்களாக இருப்பதாகவும் அவையும் உடைத்தெறியும் காலம் வருமெனக் கூறியிருந்தார்.

இதேவேளை தமிழ் தேசிய மக்கள் முன்னணி தனித்து மே தினக்கூட்டமொன்றை வடமராட்சியின் கரவெட்டிப் பகுதி-யில் நடத்தியிருந்தது. நூறு முதல் இருநூறு பேர் வரையிலேயே அங்கு ஆதரவாளர்கள் பிரசன்னமாகியிருந்தபோதிலும், அவர்கள் அனைவரும் உறுதியுடன் ஒன்று திரண்டிருந்தனர். எந்தவொரு மே தினக்கூட்டத்திற்கும் இருந்திராத கெடுபிடிகள் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் மே தினத்தில் அமுல்படுத்தப்பட்டது. நிகழ்வுகள் முழுமையாக ஒலிப்பதிவு செய்யப்பட்டதுடன், குறிப்பிட்டுச் சொல்லத்தக்க எண்ணிக்கையில் படைப்புலனாய்வாளர்களும் பிரசன்னமாகியிருந்தனர். பதாகைகளில் குறிப்பிடப்பட்ட மே தினச் சுலோகங்களுக்கும் கூட விளக்கமளிக்க வேண்டியவர்களாகத் தமிழ்தேசிய மக்கள் முன்னணியினர் இருந்தனர். ஆனாலும் மேடை ஏறிப்பேசிய தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் அனைவருமே துப்பாக்கி முனை அச்சுறுத்தல்களுக்கு அலட்டிக் கொள்ளவில்லை என்பதே உண்மையாகும். இரு தேசம் ஒரு நாடு என்ற தனது மையக்கருத்தோட்டத்தை சமரசம் செய்து கொள்ளாமலேயே தமிழ்தேசிய மக்கள் முன்னணி மே தினத்தை நடத்தி முடித்திருக்கின்றது.

இதேவேளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மே தினப் பேரணி மற்றும், பொதுக்கூட்டம் யாழ். நகரில் இடம்பெற்றிருந்தது. முழுமையான அரச வளங்களுடன், ஆட்திரட்டல்களை ஈழமக்கள் ஜனநா-யகக் கட்சியினர் செய்திருந்தபோதும் அவர்கள் எதிர்பார்த்திருந்தளவு பொதுமக்கள் திரண்டிருக்காமையே உண்மையாகும். எனினும் இது முதலாவது மே தினமாகச் சொல்லிக்கொள்ளும் நிலையினில் வெற்றிகரமான ஆட்திரட்டல் ஒன்றை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி செய்து முடித்திருக்கின்றது என்பதும் உண்மையாகும்.

இதேவேளை ஐ.தே.கட்சி மற்றும் தமிழ்தேசிய கூட்டமைப்பு இணைந்த எதிர்கட்சிகளின் மே தினம் தெற்கிலிருந்து வந்து சேர்ந்தவர்களாலேயே நிரம்பிப்போயிருந்தது. தொகுதி வாரியாக ஐ.தே. கட்சி தனது ஆதரவாளர்களை யாழ்ப்பாணத்திற்கு இறக்கியிருந்தது. வடகிழக்குத் தமிழர் தாயகப்பகுதிகளில் ஆதிக்கம் செலுத்துவதாகவும் ஆதரவைக் கொண்டிருப்பதாகவும் சொல்லிக் கொள்ளும் கூட்டமைப்பினரால் ஒரு சில நூற்றுக்கணக்கானவர்களை மட்டுமே மே தினத்தில் அணிதிரட்ட முடிந்தது. மே தினப் பொதுக்கூட்டத்தின்போது, உரையாற்றவெனத் திட்டமிடப்பட்டுப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த சுரேஸ்பிறேமச்சந்திரன், மற்றும் மனோ-கணேசன் போன்றோர், கடைசிக் கணங்களில் கழுத்தறுக்கப்பட்டனர். பொதுமேடையில் வைத்து ரணில் விக்கிரமசிங்க ஒப்படைத்த இலங்கைத் தேசியக் கொடியைக் கைவிட முடியாமல் இரா. சம்பந்தன் அசைத்துக்கொண்டிருந்த பரிதாபமும் அங்கு இடம்பெற்றது. ஐ.தே.கட்சி வடக்கில் மே தினத்தைக் கொண்டுவருவதன் ஊடாகத் தமிழ் மக்களிடையே பரவலாகத் தனக்கிருந்துவரும், மென்போக்கு ஆதரவு நிலைப்பாட்டை, மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்திக் கொண்டது. வடகிழக்கு தமிழ் மக்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளான கூட்டமைப்பினரோ ஐ.தே.கட்சியனருடன் வெறுமனே இழுபட்டுச் செல்லவே முடிந்திருந்தது.

நீண்ட இடைவெளியின் பின்னர் தமிழ் மக்கள் சர்வதேசத்திற்கும் இலங்கை அரசிற்கும், தனது பலத்தினைக் காண்பிக்கக் கூடியதாகக் கிட்டியிருந்த ஒரு மே தின சந்தர்ப்பத்தைக் கூட்டமைப்பு இம்முறையும் தவறவிட்டிருக்கின்றது. மறுபுறத்தே சம்பந்தன் தவறிற்கு மாவை மன்னிப்புக் கோர விடயம் மறுபுறமாகச் சுற்றித் திரும்பியுள்ளது. உட்கட்சி முரண்பாடுகளும், தூரநோக்கற்ற அரசி-யல் சிந்தனைகளும், கூட்டமைப்பினரை ஒரு நேரிய பாதையில் செல்ல அனுமதித்திருக்காமை மீண்டும் ஒருமுறை அம்பலமாகியிருக்கின்றது. தனித்து மே தினம் ஒன்றை முன்னெடுக்க முடியாது தமிழ்தேசியக் கூட்டமைப்புக் காட்டிய இழுபறி சந்தர்பங்களை வேறு தரப்புகளுக்குத் தரைவார்த்துவிடுவது இம்முறை அம்பலமாகியுள்ளது.

MEDIA ASIA
Another Home of Southasian Channels
For satellite news, live radios,
TV-Guide, Radio-schedules, contact
details of Tamil channels in the world etc.
www.mediaasia.in




கருவானம் பன்னீர் தெளிப்பது போல், ஆனந்தகோலம் ஆகின கருமுகில்கள். கதிரவன் இளனகை செய்து ஓடி மறைந்து கொள்கிறான். மென் காற்று மெல்ல சாமரம் வீசீ மார்கழி மாதத்தை தனக்குள் அரவணைத்துக் கொள்கிறது. நெற்பயிர்கள் நிறைமாதக் கற்பிணியாய் தலையாட்டி அந்த இளம்பனியில் நனைந்து மகிழ்ந்து அந்த மினுமினுப்பும் தளதளப்பும், அந்த வன்னி மண்ணுக்கே உருத்தானதென்பதை நெற்பயிர்கள் தலை சாய்த்து தென்றலை அரவணைத்த காட்சி, ராசுவின் மூடிய கண்களில் படமாக ஓடிக்கொண்டிருந்தது. குறுக்கிட்டாள் ராசுவின் மனைவி, "காலையிலேயே, என்ன ஊர்க் கனவு காண்குறீர்களா?" என்றாள். "தெரிந்தும் ஏன் குளப்புராய்?" என்று சினந்துக் கொண்டான் ராசு. தினமும் காலையில் அந்த வன்னி மண்ணையும், வயல் வாய்க்கால்கள், தான் ஓடி விளையாடிய வீதிகள், பாடசாலை என்று எண்ணங்களை சிறகடிக்க விடுவான். இலையனில், அன்றுபூராக எல்லாமே சூனிய பிரதேசமாகிவிடும். பிரம்மை பிடித்தவன் போல், எந்த ஒரு காரியத்திலும் பற்றில்லாமல் ஆகிவிடுவான், அன்றும் அப்படித்தான். வளமை போல், சோபாவில் அமர்ந்துக் கொண்டு கண்களை மறுபடியும் மூடிக்கொள்கிறான். நீங்காத நினைவொன்று சுழன்றோடி வந்தது.

ராசுவின் நண்பன் ஆதம்பாவா. அவர் ஓர் இஸ்லாமியர். ஆதம்பாவும் ராசுவும் மூன்றாம் வகுப்பிலிருந்தே, ஒருவருக்கொருவர் விட்டுப்பிரியா நண்பர்கள். அப்படித்தான் சிலர் கூறுவார்கள். அவர்களின் ஆசையும் அதுவே. ஆனால் அது நடைமுறைக்கு சாத்தியப்படவில்லை. வருடத்தில் ஆறு மாதங்கள் பிரிந்துதான் ஆகவேண்டும். எனவே, "காலபோக" நண்பர்கள் என்றுதான் கூறுவதுதான் பொறுத்தமாகும். ஆதம்பாவின் தந்தை மூன்றாம் வாய்காலில் உள்ள, இருபத்தியெட்டு ஏக்கர் நெல் வயலின் காவலாளர் ஆவார். இவர்கள் ஐப்பசியில் வந்து பங்குனியில் தங்கள் ஊருக்குத் திரும்பிவிடுவார்கள். ஆதம்பாவும் தங்கை பமீனாவும் ஆறு மாதங்கள்தான் இங்குப் படிப்பார்கள். அந்த ஆறு மாத நட்பு ஆண்டுகள் ஆகக் கூடாதா என்பது, ராசுவின் மனதில் உதித்துக்கொண்டேயிருக்கும். தங்கை பமீனாவை பார்க்கும்போதெல்லாம் ராசுவிற்கு பலபல எண்ணங்கள் தோன்றி மறையும். அவளை எல்லோரோடும் பழக வைக்க வேண்டும், சந்தோசமாக மற்றப் பிள்ளைகளோடு ஓடி விளையாடி மகிழ வேண்டும் என்றெல்லாம் மனதில் தோணும். ஆனால் அதற்கு மாறாகத்தான் அவளுக்கு எல்லாமே நிகழும். ஆதம்பாவின் தந்தை அவளை அடக்கி வைப்பதில்த்தான் அதிகம் அக்கரை காட்டுவார். அவர்களிற்கு சாப்பாடு செய்வதிலிருந்து வீட்டு வேலைகளெல்லாம் அவள்தான் புரிந்தாக வேண்டும். அது மட்டுமா? வயலுக்குச் சென்று வரம்புப் புல்களை வெட்ட வேண்டும். இப்படி எல்லாம் அந்த இளம் பயிரை வாட்டி வதைக்கிறார்களே, என்று தனக்குள் புழுங்கிக் கொள்வான். அவள் என் தங்கையாய் இருந்தால், எப்படியோ எல்லாம் அவளை படிப்பித்து அவளின் ஆசைகளெல்லாம் பூர்த்தி செய்து மனம் குளிர வைக்க வேண்டும் என்றெல்லாம் எண்ணிக்கொள்வான்.

பமீனா ஓர் இயற்கையின் ரசிகை. அவள் வசிக்கும் அந்த சிறு குடிசையும், அதை சுற்றியுள்ள வயல் வாய்க்கால்கள், அந்த சிறிய தாமரைக் குளமும்தான் அவளின் உலகம். அங்குள்ள பட்சிகளும், பிராணிகளும்தான் அவளின் நண்பர்கள். எறும்புகளுக்குக் கூட உணவளிக்கும் அந்த பிஞ்சு மனசில் எத்தனையோ சுமைகள். எண்ணில் அடங்கா குறைகள். தாய் மடியில் தலைசாய்த்துறங்காக் கவலைகள். தன்னை தனியாக தவிக்க விட்டு தாய் வானுலகம் சென்றாளே என்றெண்ணி சில வேளைகளில் துடித்துத் துவண்டு படுத்துறங்கி விடுவாள். பாவம் அந்த பரிதாபப் பிறப்பு. அது மட்டுமா?

ஆதம்பாவின் தந்தை மாலையில் மூக்குமுட்ட குடித்து விட்டு வருவார். வரும் போது, குளத்து மீன் வாங்கிக் கொண்டு வருவார். அதில் அவள் ஆணம் வைத்துக் கொடுக்க வேண்டும், இல்லையினில் காலால் உதைப்பார், அகப்பைப் காம்பால் அடிப்பார். இவைதான் தந்தை கொடுக்கும் தினப்பிரிசாகும். பமீனா பாடசாலைக்கு வாரத்தில் மூண்டு நாள்தான் வருவாள், வீட்டுவேலை அதிகிரிப்பதால். போகத்திற்கு படிப்பவர்களதானே என்று ஆசிரியர்கள் அவள்மீது அக்கரை எடுத்துக்கொள்வதில்லை. பமீனாவுக்கு அவள் தாய் வாங்கிக் கொடுத்த முழுப்பாவாடையைத்தான் அணிந்திருப்பாள். ஆனால் அது இன்று முக்கால் பாவாடை ஆகி விட்டது. புாடசாலைக்குக் கூட அத்துடனத்தான் வருவாள், காரணம் அந்த பொண்நிறக் கால்களில் அகப்பைகாம்பால் அடித்த காயத்தழும்புகளை மறைப்பதற்காக என்பதை ராசு நன்றாக அறிந்திருந்தான். எந்த முறையிலாவது அவளுக்கு உதவி புரிய முடியாததை எண்ணி வருந்திய நாட்கள் தான் அதிகம். காலையில் கூட சாப்பிடாமல் வருவாள். இடையிலே வயிற்றுக்குத்து என்றே வீட்டுக்கு போய்விடுவாள். சிறுமையில் வாட்டும் வறுமைதான் எவ்வளவு கொடுமையானது. கொடிதிலும் கொடிது இளமையின் வறுமை என்பது எவ்வளவு உண்மை. இத்தனைக்கும் காரணம் பமீனாவின் அம்மா ஆதம்பாவின் தந்தைக்கு இரண்டாந் தாரமாம். ஆவளை நிக்கா பண்ணும் போது, பமீனாவிற்கு ஆறுவயதாம். பமீனாவின் தாய் இறந்து ஏழு வருடங்கள் ஆகிவிட்டன. அன்றிலிருந்து கண்ணீரும் கவலையும்தான் அவளின் சொத்தாகி விட்டது. அப்படித்தான் ஒரு நாள் பாடைசாலைக்கு வந்து, சில மணி நேரத்தில் வீட்டுக்கு போய்விட்டாள். தினமும் நடப்பதுதானே என்று ஆசிரியர் ஆதம்பாவிடம் கூறுவதும் வளமையாகிவிட்டது. சிறகில்லா பட்சியவள் , இன்று வாயில்லா பிராணியானாள் தனக்கு நிகழ்தவையை, யாருக்கு எப்படி எடுத்துரைப்பது. முடியாமல் மூலையில் முணங்கியபடி முடங்கி விட்டாள். அன்றைய முழுப்பாவாடை இன்று முக்காப்பாவாடையாயிற்றே. தன்னை முழுமையாய் மறைப்பதற்கு என்ன செய்வாள் அந்த பூமகள். வயிற்றுப்பசியில் வந்த தந்தை அவள் நிலையறியாது, காலால் உதைத்தும் கண்களை திறக்கவில்லை சிறு கன்னியவள். பாமினி புஸ்வதியாகிவிட்டாள். புனித நீரூற்ற யார் வருவார். அந்தப் பூஞ்செடியை புரிந்தவர் யாருள்ளார். புரியாத தந்தை, அவள் நிலை அறியாத அண்ணன். பூவாசம் வீசுகிறதே புரியவில்லையா உங்களுக்கு, என்று கூற அவளது தாயுமில்லை, பெண்ணுதவி யாருமில்லை. அந்த பூவோடுப் பேசிப் பார், புரிந்து கொண்டாள் அவளுக்கு நீதான் தாய். ராசுவின் கவலைகள் சுமந்த கண்கள். துடித்து விளித்தது கண்ணீர் வடிந்து கன்னம் நனைந்தது, அழியாத அந்த நினைவுகள் அற்றுத்தான் போகுமா.






# கிழக்கின் "புலிவேட்டை"க்கு உண்மைக் காரணம் என்ன?

சுபத்திரா

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்து மூன்றாண்டுகள் முடிகின்ற நிலையில், கிழக்கில் "புலிவேட்டை" மீண்டும் தீவிரமாகியிருக்கிறது.

கிழக்கில் சிறிலங்காப் படையினர் தேடுதல் நடவடிக்கைகளைத் தொடங்கிய போது, அதை "புலிவேட்டை" என்று தான் முதலில் கூறியிருந்தார்கள்.

தமிழ்நாட்டில் 3 சிறப்பு முகாம்களில் பயிற்சி பெற்று விட்டுத் திரும்பி வந்துள்ள விடுதலைப் புலிகள் கிழக்கில் மறைந்திருந்து நாசவேலைகளை மேற்கொள்ள முற்படுகிறார்கள் என்றும், அவர்களைப் பிடிக்கவே இந்தப் "புலிவேட்டை" என்றும் சிறிலங்காப் படைத்தரப்பு கூறியிருந்தது.

ஆனால் தமிழ்நாட்டில் எந்தப் பயிற்சி முகாம்களும் இல்லை, யாருக்கும் பயிற்சி கொடுக்கவும் இல்லை என்று இந்தியத் தரப்பில் எதிர்ப்புக் கிளம்பியதும் சிறிலங்கா அரசு அந்தக் குற்றச்சாட்டில் இருந்து நழுவிக் கொண்டது.

அதேவேளை கிழக்கில் புலிகளைத் தேடி வேட்டை நடத்தவில்லை என்றும் புனர்வாழ்வுக்கு உட்படாமல் உள்ள புலிகளையே தேடி வருவதாகவும் சிறிலங்காப் படைத்தலைமையகம் பின்னர் கூறியது.

ஈபிடிபியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான ரகு என்பவர் குச்சவெளியில் கொலை செய்யப்பட்டதை அடுத்தே இந்தப் "புலிவேட்டை"தொடங்கியது.

ஈபிடிபி உறுப்பினரின் கொலையில் புலிகளுக்குத் தொடர்பிருக்கலாம் என்ற வெறும் சந்தேகத்தை வைத்துக் கொண்டு தான் இந்தப் "புலிவேட்டை" தொடங்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் முன்னர் அங்கம் வகித்த பலர் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டனர்.

அவர்களில் சிறிலங்கா இராணுவத்தினால் தடுத்து வைக்கப்பட்டு, புனர்வாழ்வு பெற்றுத் திரும்பியவர்களும் அடக்கம்.

இவ்வாறு கடத்தப்பட்டவர்கள் இந்தக் கொலை தொடர்பாகவே விசாரிக்கப்பட்டனர்.

பின்னர் சிலர் மட்டும் ஆங்காங்கே வெள்ளை வான்களில் கொண்டு போய் இறக்கி விடப்பட்டனர். ஆனாலும் அந்தக் கொலை தொடர்பாக எவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படவோ, குற்றவாளிகள் யார் என்று உறுதி செய்யப்படவோ இல்லை.

இந்தநிலையில் கிழக்கில் புனர்வாழ்வு பெறாத புலிகளைத் தேடி வேட்டை தொடர்கிறது.

இதுவரை நூற்றுக்கு மேற்பட்டோரைத் தாம் விசாரித்திருப்பதாக சிறிலங்கா படைத்தரப்பு சொல்கிறது.
இவர்களில் 38 பேர் கைது செய்யப்பட்டு பூசா தடுப்பு முகாமுக்கும், வெலிக்கடைச் சிறைச்சாலைக்கும் அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் பெரும்பாலும் திருகோணமலையை சேர்ந்தவர்கள் தான்.

இந்தவாரம் மட்டக்களப்பிலும் "புலிவேட்டை" தொடங்கப் போகிறது.

கைதானவர்களை விடுவிக்குமாறு கோரியும் கிழக்கில் நடத்தப்படும் "புலிவேட்டை"யை நிறுத்துமாறும் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சிறிலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவுக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

ஆனால் அந்தக் கடிதம் கருத்தில் கொள்ளப்படவும் இல்லை – பதில் அனுப்பப்படவும் இல்லை.

அதுபற்றி கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றிடம் தனது கோபத்தைக் கொட்டியிருந்தார் சம்பந்தன்.

அதற்கு சிறிலங்கா ஜனாதிபதியின் செயலக அதிகாரிகள் வேறு வழியில் பதில் கொடுத்தனர்.

விடுதலைப் புலிகள் சிறார்களைப் படையில் சேர்த்த போதும், கட்டாயமாக ஆட்களை படைக்குத் திரட்டிய போதும், அவர்களை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு மௌனமாக இருந்த

கூட்டமைப்பினருக்கு கிழக்கு கைதுகள் பற்றிக் கதைக்க முடியுமா என்று அவர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இப்போதெல்லாம் சிறிலங்கா அரசதரப்பு நேரடியாக முட்டிக் கொள்ளாமல் தவிர்க்க அல்லது யாரை-யாவது குற்றம்சாட்டுவதற்கு "ஐலண்ட்" நாளிதழை-யே பயன்படுத்திக் கொள்கிறது.

அமெரிக்கா, இந்தியா, மேற்கு நாடுகள் போன்றவற்றின் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தவும், வெளிவிவகார அமைச்சினால் நேரடியாக கேள்வி எழுப்ப முடியாத விடயங்களை வெளிப்படுத்தவும் இப்போது சிறிலங்கா அரசிடம் உள்ள முக்கிய ஆயுதம் ஐலண்ட் தான்.

பயிற்சி முகாம்கள் விவகாரத்தில் இந்தியாவை வம்புக்கு இழுத்ததும் ஐலண்ட் மூலமே.

கிழக்குத் தேடுதல்கள் பற்றி கேள்வி கேட்க சம்பந்தனுக்கு உரிமை இல்லை என்ற தொனி-யில் "ஐலண்ட்" மூலம் பதில் கொடுத்தது சிறிலங்கா அரசாங்கம்.

ஆனால் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பது பற்றிய எந்தப் பதிலையும் அவர்களை கூறவில்லை.

இதன் பின்னர் சிறிலங்கா பாதுகாப்புச்செயலர் கோத்தாபய ராஜபக்ஸவையும், இரா.சம்பந்தன் சந்தித்துப் பார்த்தார்.

கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும் என்று சம்பந்தன் கேட்டுக் கொண்ட போதும், கோத்தாபய ராஜபக்ஸ அதற்கு இணங்கவில்லை.

புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படாதவர்களை விடுவிக்க முடியாது என்று கூறிவிட்டார்.

சம்பந்தனுக்காக நாட்டின் பாதுகாப்புக் கொள்கையை விட்டுக் கொடுக்க முடியாது என்கிறார் இன்னொரு சிறிலங்கா அரச அதிகாரி.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அங்கம் வகித்த அனைவருமே புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டேயாக வேண்டும் என்பதே சிறிலங்கா அரசின் நிலைப்பாடு.

ஆனால், சிறிலங்கா அரசின் வசதிப்படி இந்த நிலைப்பாடு மாற்றிக் கொள்ளப்படுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த அனைவரும் புனர்வாழ்வு பெற்றே விடுதலையா-கினர் என்றில்லை.

சிறிலங்கா அரசில் பிரதி அமைச்சராக உள்ள கருணாவுக்கு எந்தப் புனர்வாழ்வும் அளிக்கப்படவில்லை. கிழக்கு முதல்வராக, சிறிலங்கா அரசின் ஆசீர்வாதத்துடன் அரியணை ஏறிய பிள்ளையானுக்கும் புனர்வாழ்வு அளிக்கப்படவில்லை. இவர்களோடு சேர்ந்திருக்கும் எவருக்குமே அத்தகைய புனர்வாழ்வை அளிப்பது குறித்து சிறிலங்கா அரசாங்கம் யோசிக்கவில்லை.

போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த தயா மாஸ்டர் போன்ற - தம்முடன் ஒத்துழைக்க இணங்கிய முன்னாள் புலிகள் எவரையுமே புனர்வாழ்வுக்கு உட்படுத்த சிறிலங்கா அரசாங்கம் முற்படவில்லை.

ஆனால் கிழக்கில் குடும்பமாக வாழ்ந்து தாமுண்டு தமது வேலையுண்டு என்றிருந்த முன்னாள் போரா-ளிகளையே சிறிலங்காப் படையினர் பிடித்துச் சென்றுள்ளனர்.

கிழக்கில் படை நடவடிக்கையை மேற்கொண்டுள்ள சிறிலங்காப் படைதரப்பு அதை நியாயப்படுத்துவதற்காக கூறியுள்ள ஒரு சப்பை நியாயம் தான் புனர்வாழ்வு.

போர் முடிவுக்கு வந்து விட்டாலும் தமிழர்களை கிழக்கிலோ, வடக்கிலோ நிம்மதியாக இருக்க விடக் கூடாது என்பதில் சிறிலங்கா அரசும், அதன் படைகளும் மிக உறுதியாக உள்ளன.

ஒரு பக்கத்தில் சர்வதேச சமூகம், தமிழர் பகுதிக-ளில் குவிக்கப்பட்டுள்ள படைகளை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது.

ஆனால் இன்னொரு பக்கத்தில் சிறிலங்கா அர-சோ படைக்குறைப்பில் கவனம் செலுத்தாமல், படைக்கெடுபிடிகளைத் தான் அதிகரித்து வருகி-றது.

கிழக்கில் மேற்கொள்ளப்படும் தேடுதல்களுக்கு இன்னொரு காரணமும் உள்ளது.

சிறிலங்காப் படைத்தரப்புக்கு எழத் தொடங்கியுள்ள அச்சம் தான் அது.

எங்கே மீண்டும் புலிகள் எழுந்து வந்து விடுவார்களோ என்ற அச்சம் அதற்கு வந்து விட்டது.

போருக்குப் பிந்திய நல்லிணக்க சூழலை உருவாக்கத் தவறிய, எல்லா நாடுகளும் இதேபோன்று மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டு தான் இருக்கின்றன.

அமெரிக்கா எச்சரிப்பது போன்று மீண்டும் போர் வெடித்து விடுமோ என்ற சந்தேகம் அரசதரப்பை அரிக்கத் தொடங்கி விட்டது.

நிலையான அமைதியை உருவாக்காத வரை இந்த சந்தேக நோயில் இருந்து சிறிலங்கா அரசினால் விடுபட முடியாது.

சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles

## என்.எஸ். ஜுவலரி

**Neugasse 58**
**8005 Zürich**
**Switzerland**

Tel: 044 440 60 50
Fax: 044 440 60 52
info@nsjewellery.com



தாலி மற்றும்
பொன்னுருக்குதல்
இவையாவும் இங்கு
செய்து தரப்படும்!

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நவீன உயர்தர டிசைன்களில் நகைகளும், திருமண ஆபரணங்கள், ஓடர்நகைகள், திருத்த வேலைகள் யாவும் செய்து கொடுக்கப்படும்.

தாலிக்குப் பொன்னுருக்குதல், காது, மூக்குக்குத்துதல் போன்ற நல்ல காரியங்கள் செய்து கொடுக்கப்படும்.

ஒவ்வொரு வருடமும் தை மாதம் எமது ஸ்தாபனத்தால் தங்கநகை சேமிப்புத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது. மாதம் 100CHF என 12 மாதம் 1200CHF. இணைய விரும்புவோர் உங்களது பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்யலாம்.



# தெரிவுக்குழுவும் முகமூடிகளும்

ஆர். தயாபரன்

தெரிவுக்குழுவிற்கு எவ்வாறேனும் கூட்டமைப்பைக் கொண்டு சென்று விடுவதென்பதில் அனைத்துத் தரப்புக்களும் முட்டிமோதிக்கொண்டிருக்கின்றன. எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவுக்குழுவிற்கு போகச்சொல்லி நிர்ப்பந்திக்கமாட்டேன் என பகிரங்கமாகவே கூறிவிட்டார். ஆனாலும் யாழ்ப்பாணத்தில் தன்னை சந்தித்தித்த வேளை கூட்டமைப்பைத்தெரிவுக்குழுவிற்கு போக வற்புறுத்தி வருவதாக ரணில் கூறியிருந்ததாக அரசின் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா ஊடகவியலாளர்களிடம் கூறியிருந்தார்.

இலங்கையின் ஆறு தசாப்தகாலத்திற்கு மே-லாக நீடித்த இனப்பிரச்சினைக்கான தீர்வு தற்போது தெரிவுக்குழுவிற்கு கூட்டமைப்பு பதில் சொல்லாதிருப்பதால் தாமதப்பட்டிருப்பதாக அரசு கூறிக் கொண்டிருக்கின்றது. ஜனாதிபதி முதல் அவரது சகோதரர்கள் ஈறாக தெரிவுக்குழுவிற்கு கூட்டமைப்பினரை வரும்படி அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். வருவோர் போவோரிடமெல்லாம் கூட்டமைப்பினரை தெரிவுக் குழுவிற்கு வரச் சொல்லி ஆலோசனை கூறவும் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

அண்மையில் இலங்கை வந்து திரும்பிய இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடமும் நாட்டின் தலைவர் அதே பல்லவியை பாடியிருந்தார். ஆனாலும் கூட்டமைப்பினரிடமும் பேச்சுக்களின் போது இவ்விடயத்தை கோடிட்டுக்காட்டி இந்திய குழுவினர் பேசிய போதும் வற்புறுத்தலில் ஈடுபட்டிருக்கவில்லையென்பது தெரியவருகின்றது.

இதுவரை காலமும் கூட்டமைப்புடன் சும்மா ஒரு வருடத்திற்கு மேலாகப்பேசிக் கொண்டிருந்த அரசு தற்போது அதனை நிறுத்திக்கொண்டுள்ளது. தெரிவுக்குழுவிற்கு வந்தால் தான் இனிமேல் பேச்சுக்களென இலங்கை அரசு திரும்பத் திரும்ப கூறியே வருகின்றது. தெரிவுக்குழுவிற்குச்செல்வது தொடர்பாக கூட்டமைப்பின் தலை-மையில் உட்கார்ந்திருக்கும் ஒருசில தரப்புக்கள் விருப்பம் கொண்டேயுள்ளன. எனினும் அவர்கள் முரண்டுபிடித்துக்கொண்டிருக்கும் தமது சகபாடிகள் தொடர்பில் அச்சங்கொண்டுள்ளனர். அதை-விட ஊடகங்களிற்கும் தமிழ் மக்களிற்கும் பதில் சொல்ல வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர். அண்மைக்காலமாக தொடர்ச்சியாக அடிவாங்கிக்கொண்டிருக்கும் கூட்டமைப்புத் தலைமை தெரிவுக் குழு விடயத்தில் என்ன முடிவெடுக்குமென்பது இன்னும் சில நாட்களில் தெரிய வருமென நம்பப்படுகின்றது. ஏற்கனவே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிராகரித்துவிட்டு பின்னர் அந்தர் பல்டியடித்து ஏற்றுக் கொண்டமை, ஜெனீவா கூட்டத் தொடருக்கு செல்லாது விட்டமை என நீண்டு தொடரும் இப்பட்டியல் தற்போது சம்பந்தன் ஏந்திய இலங்கையின் தேசியக் கொடி விவகாரத்துடன் வந்து நிற்கின்றது. இந்நிலையில் தெரிவுக் குழுவிற்கு போகப்போவதில்லையென சத்தியம் செய்துவிட்டு பின்னர் போவது எவ்வாறான விமர்சனங்களை உருவாக்குமென்பது பற்றி சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

கூட்டமைப்பிற்கும் அரசிற்குமிடையே இதற்கு முன்னர் நடந்த பேச்சுக்களின் போது இலங்கை இந்திய ஒப்பந்தம் பிரகாரமான 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழான அதிகாரப் பகிர்வு பற்றி மட்டுமே பேசப்பட்டு வந்தது. ஆனாலும் அப்பேச்சுக்கள் என்றுமே 13 பிளஸ்சாக நகர்ந்து சென்றிருக்கவில்லை. காணி அதிகாரம் மற்றும் பொ-லிஸ் அதிகாரம் என்பவையேதுமற்றது வெறுமனே மைனஸாக மட்டுமே இருந்திருந்தது. மைனஸ்கள் இல்லாது 13 ஆவது திருத்தத்தில் மட்டுமாவது கிடைப்பதை நிறுத்தி வைக்க கூட்டமைப்பினர் பலத்த பிரயத்தனங்களை மேற்கொண்டனர். ஆனால் அரசு தரப்பினரோ இறங்கி வந்திருக்கவில்லை.

மறுபுறத்தே தம்மை சந்திக்கும் தரப்புக்கள் எல்லாவற்றிடையேயும் 13 பிளஸ் இன் கீழ் நிரந்தரத் தீர்வொன்றை வழங்கப்போவதாக மஹிந்த கூறியே வருகின்றார். பிரணாப் முகர்ஜி முதல் அண்மையில் வந்து திரும்பிய சுஸ்மா சுவராஜ் குழுவினர் வரையாக அதனை நம்பி மூக்குடைபட்டிருப்பது தனியான கதை. குறிப்பாக நாட்டின் தலைவரான ஜனாதிபதி கூறிய உறுதிமொழிகளை நம்பி இத்தரப்புக்கள் எல்லாமுமே மூக்குடைபட்டுக் கொண்டிருக்கின்றன. 13 பிளஸ் பற்றி ஊடகங்களில்

கூறி தமது சாதனைகளாக்க முற்பட்ட நிலையிலேயே அவர்கள் மூக்குடைபட்டுக் கொண்டுள்ளனர். அவ்வகையில் பேச்சளவில் கூட 13 பிளஸ்ஸிற்கு மஹிந்த தரப்பு தயாராகவில்லையென்பது உறுதியாகின்றது.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் யுத்த காலத்தில் ஓரளவிற்கு ஓய்ந்திருந்த சிங்களக் குடியேற்றங்கள் எப்போதுமில்லாதவாறு இப்போது வேகம் பெற்றிருக்கின்றது. அதிலும் குறிப்பாக கிழக்கிலும் வன்னியிலும் எல்லைக் கிராமங்களைக் கபளீகரம் செய்யும் நடவடிக்கைகள் உத்வேகம் பெற்றிருக்கின்றன. போகும்போக்கில் வடக்கு கிழக்கிலுள்ள கடற்பகுதிகள் எவையுமே பூர்வீக தமிழ் மீனவர்களுக்கு கிட்டப்போவதில்லையென்பது அப்பட்டமாக தெரிகின்றது.

தமிழ் மக்களது பிரச்சினைகள் அறுபது சதவீதத்திற்கு மேல் தீர்க்கப்பட்டு விட்டதாக ஜனாதிபதியே அண்மையில் கூறிவிட்டார். வீதிகள் போடுவது, ரயில்தண்டவாளம் போடுவது, மின்கம்பிகளை இழுப்பது போன்றவை இந்த 60 சதவீத்தினுள் இருக்கலாமென நாம் உறுதியாக நம்பலாம். சிலவேளைகளில் மீள்குடியமர்வு என்ற பெயரில் அநாதரவாக நட்டாற்றில் விடப்பட்டுள்ள வன்னி மக்களது எண்ணிக்கையோ அதேபோன்று யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் கண்கட்டு வித்தையாக விடுவிக்கப்பட்ட உயர்பாதுகாப்பு வலய மக்களது புள்ளி விபரங்கள் கூட இந்த 60 சதவீதத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கலாம்.

தமிழ் மக்களது அன்றாடப் பிரச்சினைகள் என்பவை யுத்தத்தின் பக்கவிளைவுகளே. அவை நிரந்தர தீர்வொன்று காணப்படுகின்ற வேளையில் இல்லாமல் போகக்கூடியவையே. ஆனால் இத்தகைய அன்றாட பிரச்சினைகளையே அரசியல் பிரச்சினைகளாக்கி ஜனாதிபதி முதல் டக்ளஸ் தேவானந்தா ஈறாக தமது அரசியலைச்செய்து கொண்டிருக்கின்றனர். அதுவே உண்மையுமாகும். அத்தகைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதன் மூலம் தமிழ் மக்களது எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைத்துவிட்டதாகக் காட்டிக் கொள்ள அரசும் அதனது பங்காளிகளும் முற்பட்டேயுள்ளனர். முன்னைய அரசியல் ரீதியான போராட்ட தோல்வியே பின்னராக ஆயுதப்போராட்டமொன்றிற்கும் வழிகோலியிருந்தது. இத்தகைய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருக்காவிடின் யாழ். தேவி ஓடியே இருக்கும். பெரும்பாலான வீதிகள் காப்பெற் வீதிகளாகியுமிருக்கும்.

தற்போதும் அரசிற்காக வக்காலத்து வாங்கும் சிலர் இனப்பிரச்சினைக்கான தீர்வைக்காண கூட்டமைப்பினர் தெரிவுக்குழுவிற்குச் செல்லவேண்டுமென கூறத் தொடங்கியுள்ளனர். முதலில் கிடைப்பதைப்பெற்றுக்கொள்ளுவோம். பின்னர் மற்றவை பற்றி பேசிக்கொள்ளலாமென அவர்கள் வாதிடுகின்றனர். எனினும் அரசினால் தரப்படுமென எதிர்பார்க்கப்படுவதில் ஏதுமே இல்லாதுள்ள நிலையில் பின்னர் கேட்டுப்பெற்றுக் கொள்ள வேண்டியவை என்பது எல்லாமுமாகவே இருக்கப்போகின்றது.

உண்மையில் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை தரவேண்டுமென்ற மனப்பாங்கு தெற்கு ஆட்சியாளர்கள் எவர்களிடமும் இல்லையென்பதே உண்மையாகும். அதனால் சர்வதேச அழுத்தங்களுக்கு பணிந்து இழுத்தடிப்பொன்றை செய்து கொள்ளவே கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை அவை பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன. சந்திரிகா - ரணில் - மஹிந்த ராஜபக்ஸ என அப்பட்டியல்கள் விரிந்தே செல்கின்றது. ஆட்சியில் இருக்கும் ஒவ்வொருவரும் தேவைக்கேற்ப ஒவ்வொருவரும் முகமூடியை அணிந்து கொள்கின்றனர்.

அவ்வகையில் தற்போது மஹிந்த அரசு அணிந்து கொண்டுள்ள முகமூடியே தெரிவுக் குழுவாகும். இங்கும் வழமை போலவே தமிழ் மக்களுக்கு எதுவும் எஞ்சியிருக்கப்போவதில்லை. காலத்தை இழுத்தடித்துச் செல்லவும் ஆட்சி அதிகாரங்களை தக்கவைத்துக் கொள்ளவுமே இம்முறையும் தமிழ்த் தரப்புக்கள் பலிக்கடாக்களாக்கப் போகின்றது என்பது மட்டுமே உண்மை.




Bern மாநகரில்

SIVA SALON

Herren Coiffeur

Öffungszeiten:
Mo - Fr: 10:00 - 19:00
Sa: 08:30 - 17:00



Tel: 031 381 0287
Natel: 078 318 31 45
079 595 41 32

ஆண்களுக்கான சிகை அலங்காரம்.

Konizstrasse 70
3008 Bern

# PAGEVISION IT AG

உங்கள் கணனிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்.

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

www.pagevision.ch
info@pagevision.ch



**CHF 109.- inkl. MwSt.**

எம் ஊடாக VOIP TELEFON இணைப்பை ஏற்படுத்தினால், இலவசமாகவும் மிகக் குறைந்த கட்டணத்திலும் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

**Tellstr. 31/ Ecke Militärstr. 106**
**8004 Zürich**

உலக ஓட்டத்திற்கு ஏற்ப உங்கள் வீடுகளிலும் நவீன கணனி முக்கியம் என்பதை நாம் அறிவோம்.



- Intel Core i5 2400
- 4x 3.10GHz, 6MB Cache
- 4GB DDR-3 Ram, Markenprodukt
- 1000GB Festplatte
- Nvidia GeForce GTX550
  PCI-Express Grafikkarte mit 1GB DDR-5 Ram
- Windows 7 Home Premium

**CHF 1'190.- inkl. MwSt.**

# return'IT

## günstige gebrauchte Computer
## Reparaturen aller Marken

## www.pckaufen.ch



**CHF 110.- inkl. MwSt.**

**DELL Precision 380**
Intel Pentium IV - 2.80GHz
160GB Festplatte, 7200RpM, S-ATA
RAM 1GB DDR2 RAM
DVD/CD-RW, Floppy
Grafikkarte: Nvidia Quadro FX1400 - 128MB
Windows XP Professional Lizenzkleber

**HP DC7700**
Intel Core 2 Duo E6300
2x 1.86GHz
1GB DDR-2 RAM
80GB Festplatte
DVD/CD-Brenner
Integrierte Intel Q965 Grafik
Anschlüsse: 8x USB 2.0
VGA, 5x Audio, GLAN, 2x PS/2
Windows XP Professional Lizenz



**CHF 120.- inkl. MwSt.**

**HP Compaq NC8430**
15.4" WSXGA+ Display
Intel Core 2 Duo T7200
2x 2.00 GHz
2GB DDR-2 RAM
DVD-RW Laufwerk
ATI Mobility Radeon X1600
120GB Festplatte SATA
54Mbit WLAN
Fingerprint Reader, Bluetooth
Akkulaufzeit: 46-60 Minuten
Windows XP Professionaler

**CHF 270.- inkl. MwSt.**



**HP Compaq 8510W**
Intel Core 2 Duo T7500
2x 2.20 GHz
2GB DDR-2 RAM
DVD-RW Laufwerk
Nvidia Quadro FX 570M
250GB Festplatte SATA
300Mbit WLAN
Schweizer Tastatur,
Fingerprint Reader,
Bluetooth
*Windows VISTA Business Lizenz*

**CHF 360.- inkl. MwSt.**



## !! REPARATUREN ALLER MARKEN !!

## für Neuware besuchen Sie

## WWW.PAGEVISION.CH

Tellstr. 31, 8004 Zürich - Tel: 043 317 91 01
Kirchgasse 33, 8302 Kloten - Tel: 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel: 052 203 15 50




# திருநெல்வேலி

*வண்ணை தெய்வம்*

யாழ்ப்பாணம் மாநகருக்குக் கிழக்கே இரண்டு மைல் தொலைவில் திருநெல்வேலி என்னும் இந்த அழகிய நகரம் அமைந்திருக்கின்றது. இந்தப் பெயர்கூட மிகவும் பிரசித்தி பெற்ற பெயராகும். காரணம் இந்தியாவின் தமிழ்நாட்டிலும் திருநெல்வேலி என்னும் பிரபலமான ஒரு ஊர் இருக்கின்றது.

பிரபல ஆய்வாளர் கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்கள் எழுதிய ஈழத்து இடப்பெயர் ஆய்வு என்ற நூலில் "தமிழகத்தில் உள்ள திருநெல்வேலி என்னும் இடத்தில் இருந்து வந்த மக்கள் இங்கு குடியேறியபோது இங்கும் இப்பெயரை இட்டு வழங்கியுள்ளார்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

திருநெல்வேலி யாழ்ப்பாணம் மாநகரசபையின் சில பகுதிகளையும், நல்லூர் கிராமசபையின் சில பகுதிகளையும் உள்ளடக்கியது. இதன் எல்லைகளாக நல்லூர், கல்வியங்காடு, கொக்குவில், கோண்டாவில் ஆகிய ஊர்கள் உள்ளன. தமிழகத்துத் திருநெல்வேலியின் சூழல் போன்றே இங்கும் புவி அமைப்பும் வழம் செறிந்த காணிகளும் உள்ளன. பச்சைப் பசேல் என்ற வயல்கள், தோட்டங்கள், உயர்ந்த பனை மரங்கள் என உள்ள இந்த ஊர் யாழ் மாநகரசபையை அண்டி இருப்பதோடு பிரபலமான பலாலி வீதி, திருநெல்வேலியை ஊடறுத்துச் செல்வதுடன் கலாசாலை வீதி, ஆடியபாதம் வீதி போன்றவையுடன் இங்கு அனைத்து வளங்களும் இருப்பதனால் திருநெல்வேலியைக் கிராமமா? பட்டணமா? நகரமா? எனத் தரம் பிரித்துக் கூறமுடியாது!.

திருநெல்வேலியில் பல புகழ்பெற்ற கல்விச் சாலைகளும், கல்விமான்களும் நிறைந்த ஊராகும்!. அன்று அமரர் சேர் பொன்.இராமநாதன் அவர்களால் தொடங்கி நடத்தப்பட்ட பிரபலமான பரமேஸ்வராக் கல்லூரிதான் 1974ம் ஆண்டில் அரசினால் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகமாக மாற்றப்பட்டது. மேலும் இங்கு வடபகுதிக்கான அரச பாற்பண்ணையுடன், அரச விவசாயப் பயிற்சி நிலையமும் அமைந்திருந்தது. சுமார் ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் வட இலங்கைக்கான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும் திருநெல்வேலியில்த்தான் இயங்கியது. பின்பு அது பலாலிக்கும், கோப்பாய்க்குமாக மாற்றப்பட்டு விட்டாலும் அந்தக் கலாசாலையை நினைவூட்டும் விதமாகக் கலாசாலை வீதி என்ற பெயர் இன்றும் மாறாமல் இருக்கின்றது.

திருநெல்வேலியில் வாழ்ந்து அவ் ஊருக்குப் பெருமை சேர்த்தவர்களில் ஞானப்பிரகாச முனிவர் அவர்கள் முக்கியமானவராவார். இவர் போர்த்துக்கீசர் மேற்கொண்ட பசுவதைகளை எதிர்த்ததனால் அங்கு வாழமுடியாமல் தமிழ்நாடு சென்று சிதம்பரத்தில் வாழந்தார். அங்கு ஞானாசி-ரியராகத் திகழ்ந்து வடமொழியிலும், தமிழிலும் ஒன்பது நூல்களை எழுதி வெளியிட்டதுடன் அவரியற்றிய 129 வடமொழிச் சுலோகங்கள் Sivayoga Ratna Denana Prakasa என்ற தலைப்பில் 1976ம் ஆண்டு பிரெஞ்சு மொழியில் வெளிவந்திருக்கின்றது. அமரர் ஞானப்பிரகாசர் அவர்களின் பெயரில் சிதம்பரத்தில் தற்பொழுதும் "ஞானப்பிரகாசர் குளம்" "ஞானப்பிரகாசர் மடம்" என்பன இருப்பவை எங்கள் திருநெல்வேலிக்குப் பெருமை சேர்ப்பவையாகும்!.

மட்டுவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட மிகப்பெரும் தமிழ் அறிஞரான பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் தனது வாழ் நாளில் முக்கால்வாசிப் பகுதியினை திருநெல்வேலியிலேயே வாழ்ந்து கழித்திருக்கின்றார் என்பதும் திருநெல்வேலிக்குச் சிறப்பாகும்.

ஆலயங்கள் பல நிறைந்த திருநெல்வேலியில் மிகவும் பழமை வாய்ந்த சிவன் கோவிலும் அதன் அருகே அம்மன் கோவிலும் இருக்கின்றது. இவ் இரு ஆலயங்களையும் முறையே வயல்வெளிச் சிவன் கோவில், வயல்வெளி அம்மன்

கோவில் என்றே மக்கள் சொல்வார்கள். இந்த இரண்டு ஆலயங்களும் அருகருகே ஒரே நிர்வாகத்தில் ஒன்றாக இருந்தாலும் வருடத்தில் இரண்டுமுறை கொடியேற்றத்துடன் திருவிழாக்கள் நடைபெறும் புதுமை இந்த ஆலயத்தில் மட்டும்தான் உண்டு!

சுமார் இருநூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சைவ சமயத்தைச் சாராதவர்களால் உருவாக்கப்பட்ட பத்திரகாளி அம்மன் ஆலயம் ஒன்றும் திருநெல்வேலியில் இருக்கின்றது. இக் கோவி-லின் விசேட திருவிழா ஆடு, கோழி போன்ற உயிரினங்களைப் பலியிடுவதுதான்! இத் திருவிழ-ாவை வேள்வித் திருவிழா என்று அழைப்பார்கள். ஆனாலும் இலங்கையில் மிருகவதைத் தடைச்சட்டம் கொண்டு வருவதற்கு முன்பாகவே (சுமார் எண்பது வருடங்களுக்கு முன்பாக) மிருகபலியை முதன் முதலாக நிறுத்திக்கொண்ட ஆலயமும் இந்த ஆலயம்தான்!.

திருநெல்வேலியில் அரசடி ஆலயம் என்னும் பெயரி-ல் ஒரு ஆலயம் இருக்கின்றது. இந்த ஆலயத்தில் உள்ள தேர் விசித்திரமானது! எல்லா ஆலயங்களில் உள்ள தேர்களும் எண்கோண வடிவில்த்தான் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் இந்த ஆலயத்தில் உள்ள சித்திரத்தேர் மட்டும் நவகோண வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. சேர்.பொன். இராமநாதன் அவர்களால் பரமேஸ்வராக் கல்லூரி கட்டப்பட்ட காலத்திலேயே அதன் அருகிலேயே பரமேஸ்வரன் ஆலயம் ஒன்றும் கட்டப்பட்டது. பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக் கழகமாக மாற்றப் பட்டாலும் பரமேஸ்வரன் ஆலயம் இன்றும் சகல வழிபாட்டு வைபவங்களுடன் சிறப்பாகவே இயங்குகின்றது. இவை தவிர ஐயனார் கோவில், துர்க்கை அம்மன் கோவில் ஆகியனவற்றுடன் பல வைரவர் கோவில்களும் திருநெல்வேலியில் இருக்கின்றன.

வடமாகாணத்தில் உள்ள இரண்டு விவசாயப் பாட-சாலைகளில் ஒன்று திருநெல்வேலி எல்லைக்குள் அடங்கிய பலாலி வீதியில் இருக்கின்றது. இதனைச் சுற்றியுள்ள வயல்ச் சொந்தக் காரர்கள் தங்கள் வயல்களுக்கு நூதனமான முறையில் மாடுகளைக் கொண்டு நீர் இறைத்தமையினால் இப் பகுதி சூத்திரக் கிணத்தடி என்றும் சொல்வார்கள்.

கமத் தொழிலாளர்கள் திருநெல்வேலியில் அதிகம் உள்ளதால் அந் நாட்களிலேயே அவர்களின் வசதிக்காக அங்கேயே ஒரு சந்தையும் உருவாக்கப்பட்டது. அந்தத் திருநெல்வேலிச் சந்தையும் சுண்ணாகம், மருதனா-மடச் சந்தைகளைப்போல மிகப் பழமை வாய்ந்த சந்தையாகும்! ஆனாலும் மற்றய சந்தைகளைவிட இங்கு வித்தியாசம் என்னவென்றால் இங்கு ஒவ்வொரு நாளும் சந்தை கூடிவிடும்.

கமத் தொழிலுக்கு அடுத்தபடியாக இங்கு முக்கியமான தொழில் சுருட்டுத் தொழிலா-கும். முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்னர் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட சுருட்டுத் தொழிற்சாலைகள் இருந்தன இப்பொழுது எங்காவது ஒன்றைத்தான் காணமுடிகின்றது! ஆனால் வீடுக-ளில் கைத்தொழிலாக பீடி சுற்றும் தொழிலைப் பெண் பிள்ளைகள் செய்து வருகின்றார்கள்.

இவை அனைத்தையும்விட திருநெல்வேலிக்குச் சிறப்புச் சேர்ப்பது மிகச் சிறந்த சிற்பாச்சாரியார்கள் நிறைந்த ஊர் திருநெல்வேலியாகும்! இலங்கையில் உள்ள அனேகமான ஆலயங்களில் உள்ள வாகனங்கள், மஞ்சம், தேர் போன்றவற்றில் தொண்ணூறு சதவீதமானவை திருநெல்வேலியில் வாழ்ந்த சிற்பாச்சாரியார்களால் உருவாக்கப்பட்டவையே! இவை மாத்திரமல்ல உழவர்களுக்குத் தேவையான கலப்பைகள் அதிக அளவில் திருநெல்வேலியிலேயே செய்யப்படுகின்றது!

இவைகளோடு சேர்ந்து திருநெல்வேலிக்குச் சிறப்புச் சேர்க்கும் மற்றுமொன்று இலங்கையிலேயே முதன் முதலாக இந்து வாலிபர் சங்கம் (YMHA) அமைக்கப்பட்டதும் திருநெல்வேலியில்த்தான்!

இப்படியாகப் பல சிறப்புக்களைக்கொண்ட திருநெல்வேலி பற்றி சொல்வதற்கு இன்னும் நிறையவே இருந்தாலும் இரத்தினச் சுருக்கமாக இத்துடன் நிறைவு செய்து கொள்கின்றோம்.




# Milin Impex

*Asiatische Lebensmittel Groß und Einzelhandel*

ஜேர்மனி டோட்முண்ட் மாநகரில் தலைமுறை தலை
முறையாக தரமான ஆசிய, ஆபிரிக்கா உணவுப்பொருட்களின்
இறக்குமதியாளரும் மொத்த, சில்லறை விநியோகஸ்தர்களும்.

யேர்மனியில் உங்களுக்குத் தேவையான எல்லா விதமான
தரமான இலங்கை, இந்திய, மற்றும் ஆபிரிக்கா உணவுப்
பொருட்களைச் சிரமமின்றி ஒரே இடத்தில் மலிவாகவும்,
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே
ஒரு 20 வருட அனுபவமிக்க நிறுவனம்.

**Web: www.milinimpex.de E-Mail: info@milinimpex.de**

அத்துடன் உங்கள் வசதிக்கு ஏற்ப
நீங்கள் வீட்டில் இருந்தபடியே எம்மிடம்
பொருட்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் ஓடர் செய்து
பெற்றுக் கொள்ளலாம்!

**Tel: 0231 45 96 17 / 28**

Dortmund நகரில்
Westendorfstr. 41
44287 Dortmund
Tel: 0231 459617/28
Fax: 0231 1815288

Wuppertal நகரில்
Aue – 94
42103 Wuppertal
Tel: 0202/29995869

Lüdenscheid நகரில்
Höchstr. 8a
58511 Lüdenscheid

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 - 16:00 Uhr



MoneyGram International Money Transfer · P.S. Jewellers 100% Guarantee · P.S. Annachi Exclusive Textile Showroom · MoneyGram International Money Transfer · P.S. Jewellers 100% Guarantee · P.S. Annachi Exclusive Textile Showroom

**3-6-2012 ஞாயிற்றுக்கிழமை அன்று**

**Hamm ஸ்ரீ காமாட்சி அம்மன் தேர்த்திருவிழாவை**

முன்னிட்டு **மக்கள் போற்றும்**

P.S.

# நேரடி அதிரடி
# மலிவு விற்பனை


நாள் :
02.06.2012
சனிக்கிழமை
03.06.2012
ஞாயிற்றுக்கிழமை
மட்டுமே

P.S.

உங்கள் முல்லகம் **P.S. பவான்** அண்ணாச்சி

**Indische Textilien & Schmuck**

Tel : 0208-444 89 53 Mobil : 0172-2607388



இந்தியாவில் சென்னை, பெங்களூர், பாம்பே, சூரத், இண்டூர், ஜபல்பூர், வாரணாசி, காசி போன்ற நகரங்களில் உள்ள நமது

## P.S.பவான்®
**அண்ணாச்சியின்**

சொந்த ஆலைகளில் உயர்ரக பட்டாடைகள் தேர்த்திருவிழாவுக்கென்றே பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

**இடம் : Eppinghoferstr. 142, 45468 Mülheim an der Ruhr**

**முக்கிய குறிப்பு** (MH) Hauptbahnhof இல் இருந்து 200 மீட்டர் தூரத்தில் **P.S. பவான் அண்ணாச்சி** கடை அமைந்துள்ளது

**Tel : 0208 4448958 Fax : 0208 4447943 H.P : 01722607388**

மேலதிக விபரங்களுக்கு
**www.lankasri.com**
**www.ps-import-export.com**

**Öffnungszeiten Mo.-Sa. 10.00 - 20.00**

MoneyGram International Money Transfer · P.S. Jewellers 100% Guarantee · P.S. Annachi Exclusive Textile Showroom · MoneyGram International Money Transfer · P.S. Jewellers 100% Guarantee · P.S. Annachi Exclusive Textile Showroom

# Lycamobile

# ஜெர்மனி

சர்வதேச நாடுகளுக்கான தரம் வாய்ந்த அழைப்புக்கள் மிக குறைவான கட்டணத்தில்..!

மலேசியா
இந்தியா
கனடா
அமெரிக்கா

வீட்டு தொலைபேசி + கைத் தொலைபேசி

**1 ct/min**

Lycamobile இல் இருந்து Lycamobile க்கு

**இலவச அழைப்புக்கள்**

இலங்கை — வீட்டு தொலைபேசி **1 ct/min** — கைத் தொலைபேசி **12 ct/min**

ஐரோப்பா — **1 ct/min இல் இருந்து**

* வெளி நாடு இணைப்புக்கட்டணம் 15 ct
இச் சலுகை 31/05/2012 வரை செல்லுபடியாகும்.

*சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. மேலதிக விபரங்களுக்கு www.lycamobile.de

**www.lycamobile.de 069 33399-322**

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

Westfalen AG · Agip · JET · AVIA · ICP COMPANIES · LOTTO · LOTTO · LOTTO SAARTOTO · LOTTO · LOTTO